# குர்ஆனின் குரல்

رجب ١٤٤٣

பிப்ரவரி 2022



© www.backgroundpictures.org

தொழுகையில்...
துவாவில்...

999®
LUNGIES

Not Just a Number,
*IT'S TRUST!*

ஒரே க்ளிக்கில் வாங்க
www.999lungies.com

அணுகவும்
89399 97475

# மாற்றங்களும், மறதிகளும் கூட நலவே!

مَا نَنۡسَخۡ مِنۡ اٰيَةٍ اَوۡ نُنۡسِهَا نَاۡتِ بِخَيۡرٍ مِّنۡهَآ اَوۡ مِثۡلِهَا ؕ اَلَمۡ تَعۡلَمۡ
اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىۡءٍ قَدِيۡرٌ ﴿۱۰۶﴾

ஏதேனும் ஒரு வசனத்தை நாம் மாற்றினால், அல்லது அதனை (உள்ளங்களிலிருந்து) நாம் மறக்கச் செய்தால், அதைவிடச் சிறந்ததை அல்லது அது போன்றதை நாம் கொண்டு வருவோம் – நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் சக்தியுள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா ? – அல்குர்ஆன் (2 : 106)

---

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் பைத்துல் முகத்தஸை கிப்லாவாக முன்னோக்கி தொழுதார்கள். தொழ ஏவினார்கள். பின்பு கஅபாவை முன்னோக்கி தொழும்படி ஏவினார்கள். அதற்கு யூதர்களும் இணை வைப்போர்களும் கிண்டலடித்து கேலி பேசினார்கள். உங்களின் நபி நேற்று ஒரு சட்டம் சொல்கிறார். இன்று ஒரு சட்டம் சொல்கிறார் என்று.

அதற்கு மறுப்பாக அல்லாஹ் கூறுகிறான். (மேற்கூறப்பட்ட வசனத்தில்) நாம் கூறிய ஒரு சட்டத்தை மாற்றினாலோ அல்லது மறக்கடித்தாலோ அதே போன்ற சட்டத்தையோ அல்லது அதை விட சிறந்ததையோ தருவோம்.

அனைத்து வஸ்துக்களின் மீதும் அல்லாஹ் சக்தி படைத்தவன் என்பது உமக்கு தெரியாதா? எனக்கேட்கிறான் அல்லாஹ்!

சொல்லப்பட்ட செய்தியில் மாற்றம் செய்தல் என்பது இயல்பான ஒன்று! சில வேளைகளில் தவறுதலாக சொல்லி விட்டதனால் பின்பு திருத்தி மாற்றப்படுத்தி சொல்வது!

சில நேரங்களில் சூழ்நிலைகளை அனுசரித்து சட்டங்களில் மாற்றம் செய்வது. சில நேரங்களில் தெரிந்தே பிறகு மாற்றம் செய்ய வேண்டி வரும் என அறிந்தே - தற்காலிகமாக ஒரு சட்டத்தை அமல்படுத்துவது.

அல்லாஹ் குர்ஆனில் ஒன்றைக் கூறி பின்பு மாற்றினால் அறிந்தே இம்மாற்றத்தை செய்கிறான். பின்பு சட்டம்

மாற்றப்பட வேண்டிய நிலை உண்டாகும் என்பது படைத்த அல்லாஹ்விற்கு தெரியும். எனவே அது குறையல்ல. குற்றமுமல்ல!

மருத்துவர் உடல் நலத்தை அனுசரித்து ஒரு மருந்தை தருகிறார். மூன்று நாள் கழித்து வாரும்; மாத்திரைகள் மாற்றித் தருகிறேன் என்று சொல்கிறார். இம்மாற்றங்கள் நலவே தவிர கெடுதல் அல்ல!

இந்த வசனத்திலிருந்து ஒரு பொதுவான கருத்தும் உண்டு! அதாவது அல்லாஹ் நமக்கு தந்ததை எடுத்துக் கொண்டாலோ, இழந்து விட்டாலோ கவலை வேண்டாம். அது போன்றோ அல்லது அதை விட சிறந்ததையோ அல்லாஹ் நிச்சயம் தருவான். இந்த ஈமான், யகீன்களுடன் வாழும் பாக்கியத்தை நம் அனைவர்களுக்கும் வல்ல ரஹ்மான் தந்தருள்வானாக! ஆமீன்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட்.பரகத் அலீ பாஜில் பாகவி**

# நபியவர்களின் பொன்மொழி கேளாயோ!

"ஒரு மனிதன் வனாந்திரத்தில் காணாமல் போன தனது வாகனத்திற்காக தவித்துக் கொண்டிருக்கும்போது திடீரென அவனது வாகனம் கிடைத்து விட்டால் அவனது மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. தன் வாகனத்தை கண்டபோது ஒருவன் அடையும் மகிழ்ச்சியைவிட தன் அடியான் தன்னிடம் பாவ மன்னிப்பு கேட்கும்போது பன் மடங்கு அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்." அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

(புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நோயாளி மற்றும் மய்யித்தை நீங்கள் காணச் சென்றால் நல்லதையே கூறுங்கள். ஏனென்றால் உங்களின் கூற்றுக்கு மலக்குகள் ஆமீன் சொல்கிறார்கள்."

(நூல் : முஸ்லிம்)

**தருபவர் : அன்வர் ஜீ (எ) அன்வர் பாஷா,**

தலைமையாசிரியர் (ஓய்வு), சேலம் – 5.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 65 ★ எதிரொலி – 2
ரஜப் 1443 பிப்ரவரி – 2022

## ஆண்களின் திருமண வயதை 18ஆக ஆக்கிடுக!

பெண்களின் திருமண வயதை 18லிருந்து 21 ஆக உயர்த்திட ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

ஒன்றிய அரசின் இத்திட்டத்திற்கு நாடு முழுவதும் பரவலான எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

யார் யாருக்கு வாக்களித்தால் என்ன நடக்கும் என்பதை 18 வயதினர் புரிந்து கொள்ள முடியும்போது அவர்களின் திருமண வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்க 21 வயது தேவையா?

18 வயது பெண்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திடலாம்;

தொழில் நிறுவனங்களை தொடங்கலாம்;

பிரதமரையும், எம்.பி.க்களையும், எம்.எல்.ஏ.க்களையும் தேர்ந்தெடுக்கலாம்.

ஆனால், தனது கணவன்மார்களை தேர்ந்தெடுக்கக்கூடாதா?

ஒன்றிய அரசு தனது தோல்விகளை மறைப்பதற்கும், முஸ்லிம்களின் ஷரீஅத் சட்டங்களில் கை வைப்பதற்கும் இந்த திட்டத்தை செயல்படுத்த துடியாய் துடிக்கிறது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவம் வேண்டுமென்று கூறிக் கொண்டு, ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமண வயது 21 என ஒன்றிய அரசு கூறுகிறது.

இருபாலருக்கும் ஒரே வயதில் திருமணம் நடப்பதுதான் சமத்துவம் என்றால், ஆண்களின் திருமண வயதையும் 18 ஆக ஆக்குவதுதான் சரியானதாக இருக்கும்.

இதை செயல்படுத்த ஒன்றிய அரசு முன்வருமா?

# எதற்கும் வழிகூறும் மாமனிதர் ஹள்ரத் (ரஹ்) அவர்கள்!

மவ்லானா முஃப்தீ அல்ஹாஜ்
**எம்.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபி ஃபாஜில் தேவ்பந்தீ

**அவரைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்?** அவரின் இறப்பிற்கு முன்பும், இறப்பிற்கு பின்பும் உலகமே அவரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது. என்ன பிரச்சனைக்காக சென்றாலும், யார் சென்றாலும், என்ன மன உளைச்சலோடு சென்றாலும் அவர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முழுமையாக பெற்றுக் கொண்ட சந்தோஷத்தில்தான் வெளியே வருவார்.

குடும்ப உறுப்பினராக இருந்தாலும், ஆலிமாக இருந்தாலும், மதரஸாவில் ஓதிக் கொடுக்கக்கூடிய ஆசானாக இருந்தாலும், ஓதுகின்ற மாணவனாக இருந்தாலும், வியாபாரியாக இருந்தாலும், விவசாயியாக இருந்தாலும் அவரிடம் சென்றுவிட்டு வரும்போது நிச்சயம் அவர் நினைக்காத மிகப் பெரும் ஒரு ஞானத்தை சுமந்தே வெளியே வருவார்.

எல்லா நிலைகளிலும் மார்க்கக் கல்வியோடு மிக மிக நெருக்கமான தொடர்பு கொண்டவர். கிதாபுகளைக் கொண்டே தன் வீட்டையும், தன் அறையையும் அலங்காரம் செய்து கொண்டவர். அந்த கிதாபுகளிலுள்ள கல்விகளை வெளியளவில் எடுத்து பார்ப்பவர் மட்டுமல்ல. உள்ளத்தில் ஈமானோடு சேர்த்து அந்த கல்வியையும் நிறைத்து வைத்திருந்தவர்.

**அவரின் மிகப் பெரிய கவலைகளில் ஒன்று :** “இவ்வளவு கிதாபு களையும் விட்டு விட்டு நான் கபுருக்கு எப்படி செல்ல முடியும்?” என்பதுதான்!

இருக்கின்ற இந்த துன்யாவில் ஒவ்வொரு மனிதனும், தான் சம்பாதித்து வைத்திருக்கின்ற சொத்துக்களைப் பற்றியும், உறவுகளைப் பற்றியும், காசு பணங்களைப் பற்றியும் கவலைப்படுகின்ற இந்த உலகத்தில், கிதாபுகளைப் பற்றி கவலைப்பட்ட நம் கால மனிதர் இவர் ஒருவராகத்தான் இருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்தளவு கல்வியின் மீது பேராசை கொண்ட மாமனிதர்!

கல்வியின் தேட்டத்தோடு, செல்லக்கூடிய எந்தவொரு மனிதரும் அவரிடமிருந்து வெறுங்கையோடு திரும்பியிருக்க முடியாது. எந்த வரலாற்றை சொன்னாலும், எந்த சட்டத்தை சொன்னாலும், மார்க்கம் சம்பந்தமான எந்த விஷயங்களை பேசி னாலும் அதற்கான ஆதாரத்தை தம் உள்ளத்திலும், தம் நாவிலும் வெளிப்படுத்துவதோடு மட்டுமின்றி, உடனடியாக அந்த

கிதாபை எடுக்கச் சொல்லி, இதோ பாருங்கள்! இதுதான் நான் பேசியதற்கான ஆதாரம் என்று உடனுக்குடன் காட்டிவிடுவார்.

அல்லாஹு அக்பர்! இப்படிப்பட்ட மனிதரையா நாம் இழந்து விட்டோம் என்று நினைக்கும்போது, நம் தமிழ் சமுதாயத்திற்கு மட்டுமின்றி, உலக ஆலிம் சமுதாயத்திற்கு மட்டுமின்றி, முழு உலக முஸ்லிம் சமுதாயத்திற்கும் மிகப் பெரும் பேரிழப்பு என்றுதான் நினைக்க வைக்கிறது.

**அவர்தான்** தமிழகத்தின் தலைசிறந்த மூத்த மார்க்க அறிஞரும், தாய் கல்லூரியாம் வேலூர் அல்பாகியாத்துஸ் ஸாலிஹாத் அரபு கல்லூரியின் நீண்டகால பேராசிரியரும் - மேனாள் முதல்வரும், தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமாசபையின் மூத்த தலைவரும், "P.S.P." என்ற மூன்று எழுத்துகளால் அறியப்பட்ட மூதறிஞரும், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி போன்ற மாநிலங் களில் பிரபலமாக பேசப்பட்டவருமான அல்லாமா அல்ஹாஜ் **''ஷைகுத் தஃப்ஸீர்'' P.S.P.ஜைனுலாபிதீன் ஹள்ரத்** அவர்கள் 06.01.2022 வியாழன் அதிகாலை வஃபாத்தானார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

மறைந்த அல்லாமா P.S.P.ஜைனுலாபுதீன் ஹள்ரத் அவர்கள் பல்லாயிரக்கணக்கான உலமா பெருமக்களை உருவாக்கியவர்கள். ஜமாஅத்துல் உலமா சபையின் மூத்த தலைவராக பணியாற்றி உலமா பெருமக்களின் சீர்மிகு வழிகாட்டியாக திகழ்ந்தவர்கள். சமுதாய மக்களுக்கு அரிய ஆலோசனைகளையும், நேரிய வழிகாட்டுதல்களை யும் தந்து கொண்டிருந்தவர்கள். எளிமையும், அமைதியும் அவர்களின் உள்ள உணர்வுகளோடு எப்போதும் நிலைத்திருந்தது.

"ஷைகுல் ஹதீஸ்" அல்லாமா A.E.M.அப்துர் ரஹ்மான் ஹள்ரத் (ரஹ்) அவர்களின் இழப்பின் வேதனையே இன்னும் மறையாத நிலையில், "ஷைகுத் தஃப்ஸீர்" அல்லாமா P.S.P. ஹள்ரத் (ரஹ்) அவர்களின் வஃபாத் சமுதாயத்திற்கு ஓர் பேரிடியாகும்.

"ஷைகுல் ஹதீஸ்" அல்லாமா A.E.M.அப்துர் ரஹ்மான் ஹள்ரத் (ரஹ்) அவர்களுக்கு இதுவரை பல்வேறு இடங்களில் நினைவேந்தல்கள் நடத்தி, அவர்களின் புகழையும், நினைவு களையும் பரப்பிக் கொண்டிருப்பது போன்று அல்லாமா P.S.P. ஹள்ரத் (ரஹ்) அவர்களுக்கும் நினைவு கூட்டங்கள் அதிகளவில் நடத்தப்பட்டு, அவர்களின் ஆசைகள், கனவுகள் இந்த சமுதாயத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் மூத்த உலமாபெருமக்களின் அடுத்த கட்ட பேராசையாகும்.

அந்த வகையில், ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மறைவுக்குப்பின் நான்கு நாட்களே ஆனநிலையில், சென்னை "லஜ்னத்துல் முஹ்ஸினீன் டிரஸ்ட்" மற்றும் சென்னை மாவட்ட ஜமாஅத்துல் உலமா பேரவை சார்பாக நடத்தப்பட்ட முதல் கூட்டத்தில் ஆர்வமிக்க பன்னூறு உலமா பெருமக்கள் கலந்து கொண்டது மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அந்த நிகழ்வில், சென்னை "ஆலிம் பப்ளிகேஷன்" நிறுவனர் அல்லாமா முஹம்மது கான் பாகவி ஹள்ரத் அவர்களும், சென்னை "மதரஸா காஷிபுல் ஹுதா"வின் பேராசிரியர் மவ்லானா முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹள்ரத் அவர்களும், சென்னை அடையாறு பள்ளி வாசலின் தலைமை இமாம் மவ்லானா ஸதீதுத்தீன் பாஜில் பாகவி ஹள்ரத் அவர்களும், "ஷைகுத் தஃப்ஸீர்" ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் - சென்னை செக்ரட்ரியேட் காலனி - மேடவாக்கம் ஜாமிஆ மஸ்ஜிதின் தலைமை இமாம் மவ்லானா பரகத் அலீ பாஜில் பாகவி ஹள்ரத் அவர்களும் மிகச்சிறந்த நினைவலைகளை வெளிபடுத்தியதோடு "தற்போதைய உலமாபெருமக்களில் ஒவ்வொருவரும் ஹள்ரத் அவர்களைப் போன்று கிதாபுகளை ஆய்வு செய்து அவர்களின் உண்மை வாரிசுகளாக உருவாக வேண்டும்" என்ற கோரிக்கையை அழுத்தந்திருத்தமாக பதிவு செய்தார்கள்.

ஹள்ரத் அவர்களின் மறுமை வாழ்வு சிறப்பானதாக அமைய வும், சுவனத்தில் உயர்வான பதவி கிடைத்திடவும் நம் அனைவரும் வல்ல அல்லாஹ்விடம் இருகரமேந்தி பிரார்த்திப்போமாக!

ஹள்ரத் அவர்கள் தொடர்ச்சியாக தாங்களும் ஓதி, தங்களைச் சந்திக்க வரக்கூடிய உலமாபெருமக்களையும் ஓத சொன்ன அற்புதமான ஒரு துஆவை இன்ஷா அல்லாஹ் நாமும் இன்று முதல் ஓதுவோம்.

اللهم انا نسالك ان تجعل كل قضاء لنا خيرا اللهم انا
نسالك ما قضيت لنا من عمر ان تجعل عاقبته رشدا

**"அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக்க அன் தஜ்அல குல்ல களாஇன் லனா ஃகைரா; அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக்க மாகளைத்த லனா மின் உமுரின் அன்தஜ்அல ஆகிபதஹு ருஷ்தா"**

பொருள் : யா அல்லாஹ் எங்களுக்கான (உன்னுடைய) அனைத்து தீர்ப்புகளையும் நன்மையானதாக எங்களுக்கு ஆக்கித் தந்தருள் வாயாக. என்று நிச்சயமாக நாங்கள் உன்னிடத்தில் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களுக்காக நீ முடிவு செய்து விட்ட வயதின் முடிவை நேரான வழி (என்ற ஹிதாயத்தின்) மீது ஆக்கியருள்வாயாக என்றும் நாங்கள் உன்னிடத்தில் கேட்கின்றோம்.

## பத்வாக்கள்

இங்கு பெரும்பாலும் ஆண்களும்-பெண்களும் உருவப் படம்போட்ட சட்டையை அணிந்து கொண்டு தொழுகிறார்கள். அப்படி தொழுதால் அவர்களின் தொழுகை கூடுமா?

**மலேசியாவிலிருந்து**
**ஏ.அப்துல்லாஹ் கான்**

தொழுகை கூடும். எனினும் உருவப் படங்களுள்ள ஆடைகளுடன் தொழுவது மக்ரூஹாகும்.

பஜ்ரு தொழுகையில் சுன்னத் தொழ முடியாத அளவுக்கு தாமதமாக வந்தால் இமாம் ஜமாஅத்துடன் சேர்ந்து பர்ளு தொழுகையை மட்டும் நிறைவேற்றுகிறோம். அதன்பிறகு அந்த சுன்னத் தொழுகையை ஹனஃபீ மத்ஹபின்படி எப்பொழுது நிறைவேற்ற வேண்டும்?

**திருச்சியிலிருந்து**
**கே.எம்.முஹம்மது பாரூக்**

பொதுவாக ஹனஃபீ பிக்ஹு கிதாபுகளில் உள்ளபடி ஃபர்ளு தொழுகைக்கு முன்பு அந்த சுன்னத்தை தொழுவதற்குண்டான வாய்ப்புகள் இருந்தால் மட்டும் தொழுது கொள்ளலாம். அப்படியில்லையெனில், முடிந்தால் இஷ்ராக் தொழுகை நேரம் வந்தவுடன் தொழுது கொள்ளலாம்.

அவ்லியாக்களின் பேரில் நியாஜ் என்னும் தாவத் விருந்து வைப்பது அல்லது அல்லாஹ்வின் பெயரில் விருந்தளிப்பது எது சரியானது? எதில் நன்மை கிடைக்கும்?

**பேளூரிலிருந்து**
**என். மஜீத்பாஷா**

பொதுவாகவே எந்த காரியமாக இருந்தாலும் அதை அல்லாஹ்விற்காகவே செய்யும்பொழுது மட்டும் தான் அது முழுமையான முறையில் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும். நன்மையை வழங்கக்கூடியதாகவும் அமைகின்றது. இதன்றி எவ்வளவு பெரிய தீனுடைய காரியத்தையும் எவ்வளவு பெரிய அவுலியாவின் பெயரால் செய்தாலும் அதற்குரிய நன்மையை நிச்சயம் அல்லாஹ்விடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

இன்றைய சூழலில் பெரும்பாலான பள்ளிவாசல்களில் முதியோர்களின் வசதிக்காக சேர், டேபிள்,

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலபாதீ

டெஸ்க்போன்ற ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இவ்வாறு தரையிலும், சேரிலும் அமர்ந்து தொழுவது பற்றி ஷரீஅத் சட்டம் என்ன சொல்கிறது?

**கரூரிலிருந்து ஹஸனுத்தீன்**

✍ ஃபர்ளான - வாஜிபான தொழுகைகளில் அல்ஹம்து சூராவும், மற்ற சூராவும் ஓதும் போது நிற்பது கட்டாயமாகும். நிற்பதால் கடுமையான தாங்க முடியாத சிரமம் - கஷ்டம் ஏற்படுமென்றிருந்தால் மட்டும் உட்கார்ந்து தொழுகலாம். உட்கார்ந்து தொழும்போது தரையில் உட்கார்ந்து ருகூவு, ஸுஜூது செய்ய முடியாத அளவுக்கு சிரமம் இருந்தால் தரையில் உட்கார்ந்து சைக்கினைகள் மூலம் தொழுக வேண்டும். தக்பீர் கட்டியபின் - நிலையில் முழுதும் நிற்க முடியாமல் சிறிது நேரம் மட்டுமே நிற்க முடியும் என்றிருந்தால் அந்த சிறிது நேரம் நிற்பதும் ஃபர்ளாகும். உட்கார்ந்து தொழும்பொழுது முடிந்தால் அத்தஹிய்யாத்தில் உட்காருவது போன்று அல்லது அது முடியாவிட்டால் எப்படி முடியுமோ அப்படி உட்கார்ந்து கொள்ளலாம். சமிக்கை செய்து தொழும்போது ருகூவிற்கு குனிந்ததை விட சஜ்தாவிற்கு சற்று அதிகமாக குனிந்தாலே போதுமானது. எனவே, சஜ்தா செய்ய டெஸ்க், தலையணை போன்றவற்றை வைத்துக்கொள்ளக் கூடாது. நிற்பதாலும் - தரையில் அமர்ந்து தொழுவதாலும் மிகுந்த சிரமம் உண்டாகும் என்ற நிலையிருந்தால் மட்டுமே நாற்காலியில் அமர்ந்து தொழ வேண்டும். நாற்காலியில் அமர்ந்து தொழும் போது - இரு கைகளையும் ஊன்றிக் கொண்டும் சாய்ந்து உட்கார்ந்து தொழுவதும் சரியான முறையல்ல! அல்லாஹ்விற்கு முன் நம்மை தாழ்த்திக் கொள்வது வணக்கங்களின் அடிப்படை நோக்கமாகும்.

☛ ஒரு பெண் தன் கணவன் இறந்துவிட்டால் எத்தனை நாட்கள் இத்தா இருக்க வேண்டும்? அப்படி இத்தா இருக்கும் சமயத்தில் என்ன வேலைகளை செய்யலாம்? எதை செய்யக்கூடாது? அவள் யாரை பார்க்கலாம்? யாரை பார்க்கக் கூடாது? மேலும் இத்தா இருக்கும் பொழுது நோன்பு வைக்கலாமா? அல்லது கூடாதா?

**பெல்லாரியிலிருந்து ஜான்பாஷா**

✍ ஒரு பெண்ணின் கணவர் இறந்துவிட்டால் (அவள் கர்ப்பமானவளாக இல்லாவிட்டால்) நான்கு மாதம் பத்து நாட்கள் இத்தா இருக்க வேண்டும். அவள் கர்ப்பமுள்ளவளாக இருந்தால் குழந்தையை பெற்றெடுக்கும் வரை இத்தாவுடைய காலம் முடியும். அந்த காலம் பத்து நாட்களாக இருந்தாலும் அல்லது

# அந்த இரண்டு ரக்அத்துகள்...

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹள்ரத் பிலால் (ரளி) அவர்களைப் பார்த்து, "பிலாலே! உன்னிடத்திலே இருக்கின்ற சிறந்த அமலை எனக்கு சொல். ஏனெனில், நிச்சயமாக உனது செருப்புகளின் சப்தத்தை சொர்க்கத்தில் எனக்கு முன்னால் நான் கேட்டேன் " என்றார்கள்.

அதற்கு, ஹள்ரத் பிலால் (ரளி) அவர்கள், "சொல்லத்தகுந்த அப்படிப்பட்ட எந்தவொரு அமலும் நான் செய்யவில்லை. எனினும், நான் இரவு, பகல் என்று எந்த நேரத்தில் ஒளுச் செய்தாலும் உடனடியாக ஒரு தொழுகையை தொழுது விடுவேன்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

நூல் : புகாரி

**இதுபோன்ற சொர்க்கத்திற்கு இழுத்துச் செல்லக்கூடிய காரியங்களை மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரல் நீடூழி வாழ்க!**


**செய்யது சகோதரர்கள்**

**நாகூர்**

பத்து மாதங்களாக இருந்தாலும் சட்டம் ஒன்றுதான். மேலும் இத்தா இருக்கும் காலத்தில் சாதாரணமான வீட்டு வேலைகள் அனைத்தையும் அவள் தாரா ளமாக செய்யலாம். நிர்பந்த நிலைகளின்றி வெளியில் செல் வது கூடாது. இத்தா இல்லாத சாதாரண நிலையில் யாரை கோஷா முறையின்றி பார்ப்பதற்கு ஷரீஅத் அனுமதித்திருக்கிறதோ அவர்களையெல்லாம் இத்தாவு டைய காலத்திலும் பார்க்கலாம். அவர்களுடன் பேசலாம். யாரை பார்ப்பதற்கு ஷரீஅத் அனு மதிக்கவில்லையோ அவர்களை இந்த இத்தாவுடைய காலத்தில் பார்ப்பதும் பேசுவதும் கூடாது. இத்தாவுடைய நேரத்தில் எந்த நோன்புகளையும் தாராளமாக வைக்கலாம். எந்தவிதமான தடையும் இல்லை. மேலும் இத் தாவுடைய காலத்தில் மணம் வீசும் பொருட்களை தடவிக் கொள்ளவோ அல்லது தன்னை அலங்கரித்துக் கொள்ளவோ கூடாது. அந்த அலங்காரம் என்பது ஆடைகளினால் இருந்தாலும் அல்லது ஆபரணங்களினால் இருந்தாலும் சரியே. அதே சமயத்தில் ஒரேயடியாக பக்கீர் கோலத்தில் தன்னை ஆக்கிக் கொள்வதும் உகந்ததல்ல.

☛ மாற்று மத சகோதரர் ஒருவர் இறந்து விட்டால் அவரை பார்ப்பதற்காக வேண்டி செல் லலாமா? அப்படி சென்று அவருடைய இறுதி ஊர்வலம் புறப்படும் பொழுது தொழுகை நேரம் வந்து விட்டால் ஊர்வலத் தில் கலந்து கொள்ள வேண்டுமா? அல்லது அந்த தொழுகைக்கு செல்ல வேண்டுமா? அல்லது அவரது இறுதி ஊர்வலத்தை முடித்துவிட்டுபிறகு தொழுகைக்கு செல்ல வேண்டுமா?

**நெல்லையிலிருந்து**
**முஹம்மது சர்புத்தீன்**

✍ மாற்று மத சகோதரர்களில் இறந்தவரை சென்று பார்ப்பதில் எந்த தவறுமில்லை. அதே சமயம் இறுதி ஊர்வலத்திற்காக தொழுகையை பிற்படுத்துவது கூடாது.

☛ பெண்கள் ஹைளு, நிஃபாசுடைய காலங்களில் விடு பட்ட நோன்பை களாச் செய்ய வேண்டுமா? மேலும் ரமளான் மாதத்தில் இந்நிலையில் விடுபடக் கூடிய தொழுகைகளையும் களாச் செய்யவேண்டும். அது மற்ற மாதங்களைப் போன்றல்ல என்று சிலர் சொல்கிறார்கள். ஷரீஅத் சட்டம் என்ன?

**கொடுந்துறையிலிருந்து**
**ராபியத்துல் பஸரியா**

✍ பொதுவாக பெண்களுடைய இது போன்ற நிலைகளில் எந்த காலத்திலும் தொழுகையை களாச் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. ரமளானுடைய நோன்பை மட்டும் கண்டிப்பாக களாச் செய்தே ஆகவேண்டும்.

இறந்தவர்களுக்காக ஒன்று அல்லது இரண்டு குர்ஆன்கள் ஓதி ஹத்தம் செய்துவிட்டு ஓதியவர்களுக்கு பணம் கொடுக்கிறார்களே. இது கூடுமா? ஹாஜத்துகள் நிறைவேற குர்ஆன் ஓதுகிறேன் என்று நிய்யத் செய்கிறார்களே; இது கூடுமா?

**வி.கே.புரத்திலிருந்து**
**மெஹர்பான் பீவி**

குர்ஆன் ஓதுவதற்காக வேண்டியே பணம் வாங்கினால் அந்த குர்ஆனுடைய நன்மை அந்த மய்யத்திற்கு போய் சேராது என்ற விஷயத்தை அல்லாமா ஷாமீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள். மேலும் ஹாஜத்துகள் நிறைவேறுவதற்காக நிய்யத் செய்து குர்ஆன் ஓதுவது தாராளமாக கூடும்.

ஒரு தடவை நானும் என் கணவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது நீங்கள் இப்படி ஒரு தவறை செய்கிறீர்கள் என்று நான் சுட்டிக் காட்டினேன். கோபமுற்ற என் கணவர் "இனிமேல் நீ இப்படி கூறினால் உன்னை நான் தலாக் சொல்லி விடுவேன்" என்று கூறினார். நானும் இரண்டு முறை திரும்பதிரும்ப அதே விஷயத்தை கூறிய பொழுது அவரும் அதே பதிலை கூறினார். இதனால் தலாக் நிகழ்ந்துவிடுமா?

கணவரின் இந்த சொல்லினால் மட்டும் நிச்சயம் தலாக் நிகழாது.

டி.வி.யில் வரும் மெகா தொடர்கள், இன்றைய கவர்ச்சியை தூண்டும் சினிமா பாடல்கள், ஆபாசகாட்சிகளையெல்லாம் இஸ்லாமிய தாய்குலங்கள் பார்த்து ரசிக்கிறார்களே; இது பற்றி ஷரீஅத் என்ன சொல்கிறது?

**அம்மாபட்டிணத்திலிருந்து**
**கியாஸுத்தீன்**

பொதுவாக ஒரு விஷயத்தில் நன்மை, தீமை இரண்டிலுமிருந்து அதில் தீமை மிகைத்திருந்தால் நிச்சயமாக அதைவிட்டும் ஷரீஅத் தடுக்கிறது. மீறி நுழைபவன் குற்றவாளியாக கருதப்படுவான். பொதுவான இந்த சட்டமிருக்க டி.வி.யின் நிலையும் அப்படித் தானே இருக்கிறது. பிறகு அந்த பித்னாவில் போய் நுழைந்து ஏன் நம்மை நாமே கெடுத்துக் கொள்ளவேண்டும். நாம் கெட்டுப் போவது மட்டுமின்றி வளர்ந்து வாலிபமாகக் கூடிய நமது பாசமிகுந்த குழந்தைகளும் அல்லவா கெட்டுவிடக்கூடிய சூழ்நிலையை அது உருவாக்குகின்றது.

திருக்குர்ஆன் எழுத்துக்கள் உள்ள பழைய இஸ்லாமிய மாத இதழ்கள் மற்றும் புத்தகங்களை சைக்கிளில் வந்து பழைய பிளாஸ்டிக் பொருட்கள், பேப்பர்கள் வாங்கும் வியாபாரியிடம் விற்கலாமா? அல்லது அதை என்ன செய்ய வேண்டும்?

**திருச்சுழியிலிருந்து**
**முஹம்மது சுல்தான்**

✍ அப்படி விலைக்கு போடக் கூடாது. மாறாக இது போன்ற புத்தகங்களை பழைய கிணறு அல்லது ஆறுகளில் போட்டு விடலாம். அல்லது ஆள் நட மாட்டமில்லாத இடங்களில் புதைத்தும் விடலாம்.

☛ தீனுடைய அமல்கள் இல்லாத மாற்று கலாச்சார முடைய ஒரு பெண்ணை தீன் தாரியான ஒரு நல்ல மனிதர் மணம்முடித்தார். ஆனால் அந்த பெண்ணின் குணங்களை பார்த்து விட்டு இவள் மூலமாக நமக்கு குழந்தையே வேண் டாம் என்று துஆ செய்தார். அந்த துஆவும் கபூலாகி விட்டது. இவ்வாறு துஆ செய்தது குற்றமாகுமா? சிறு வயதிலிருந்தே அந்த கண வருக்கு தீராத உடல் நோய்கள்; எந்த சிகிச்சை செய்தும் பலன் தராத நிலையில் அல்லாஹ்விடம் "என் உயிரை எடுத்துக் கொள்" என்று துஆ செய்தால் இது குற்றமாகுமா?

**நாமக்கல்லிலிருந்து**
**அப்துர் ரஷீது**

✍ அல்லாஹ் தனது திரு மறையில் தன்னைப் பற்றிச் சொல்லும் பொழுது, **அவன் இறந்ததிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான். உயிருள்ளதிலிருந்து இறந்ததை வெளிப்படுத்துகிறான்** என்று குறிப்பிடுகிறான். நிலைமை இப்படியிருக்கும்பொழுது, அவரின் மனைவி ஷரீஅத் அடிப்படை யில் உயிரற்ற பொருளுக்கு சமமாக இருந்தாலும் அவள் மூலமாக அவர் பெற்றெடுக்கக் கூடிய குழந்தையை ஷரீஅத் அடிப்படையில் மிக உயர்ந்த விலைமதிக்க முடியாத ஒரு உயிருள்ள குழந்தையாக அல் லாஹ் அதை உருவாக்கலாமல் லவா. அவனுக்கு முடியாத காரியம் என்று உலகத்தில் என்ன இருக்கிறது? அந்த குழந்தையின் மூலமாகவே அவரின் மனைவியை திருத்துவதற்கு ஒரு வழியும் பிறந்திருக்கலாமல்லவா! எனவே குழந்தை வேண்டாம் என்று சொல்லி துஆ செய்திருப்பதும், அவர் தனக்குத்தானே மரணத் திற்காக துஆ செய்து கொள்வதும் ஷரீஅத் அடிப்படையில் வெறுக் கத்தக்க செயல்களில் ஒன்றாகும். அல்லாஹ் யாருக்கு எப்பொழுது எங்கு மரணத்தை வைத்திருக் கிறான் என்பதை அவன் ஒருவனே நன்கறிந்தவனாக இருக்கிறான்.

☛ கடைகளில் காலை-மாலை நேரங்களில் ஊதுபத்தி கொளுத்தி கல்லாபெட்டி, தர்ஹா படங்கள் மற்றுமுள்ள குர்ஆன் ஆயத்து கள், ஸூராக்கள் அடங்கிய பிரேம் களின் பக்கம் காட்டுகிறார்களே; இதுபற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**மதுரையிலிருந்து**
**கே.சான் பாய்**

✍ இவை அனைத்தும் ஷரீஅத் அனுமதிக்காத விரும்பாத செயல்கள்.

Since 1977-2017
40 Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

# மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

☛ ஒவ்வொரு வேளை தொழுகையிலும் தப்பத்யதா சூராவை அதிகம் ஓதக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி ஓதலாமா? கூடாதா?

**விழுப்புரத்திலிருந்து**
**ஐ.நஜ்மா பானு**

✍ பொதுவாக எந்த சூராவையும் எந்த ஆயத்தையும் தொடர்ந்து ஒவ்வொரு தொழுகையிலும், ஒவ்வொரு ரக்அத்திலும் அதையே குறிப்பிட்டு ஓதுவது கூடாது. ஏனெனில், அப்படி ஓதுவதால் குர்ஆனுடைய இதர பகுதிகளை புறக்கணித்ததை போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டு விடும். எனவே தப்பத்யதா சூரா என்று குறிப்பிட்டு சொல்லியிருக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் அப்படிப்பட்ட ஒரு சில சூராக்கள் மட்டும் தான் மனப்பாடமாக இருக்கிறது என்றால் அதை அதிகமாக ஓதுவதில் தவறில்லை.

☛ நமது நான்கு மத்ஹபுகளிலும் களாத் தொழுவது அனுமதிக்கப்பட்டதா? களா என்ற ஒன்றே இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். அது சரியா? மேலும் ஹஜ்ஜுடைய நாட்களில் லுஹர் நேரத்தில் அஸர் தொழுகையையும், இஷாவுடைய நேரத்தில் மஃரிப் தொழுகையையும் சேர்த்து தொழப்படுகிறது. இந்த முறையை நமது ஊர்களிலும் மற்ற நாட்களில் தொழலாமா? அல்லதுஇந்த அனுமதி ஹஜ்ஜு நாட்களில் மட்டும் தானா?

**சதுரகிரியிலிருந்து**
**முஹம்மது மைதீன்**

✍ எல்லா மத்ஹபுகளின் படியும் நேரம் தவறிவிட்ட தொழுகைகளை கண்டிப்பாக களாவுடைய நிய்யத்தோடு தொழுதே ஆக வேண்டும். தொழுகையை முற்றிலுமாக விடுவதற்கு ஷரீஅத்தில் எந்த நிலையிலும் நிச்சயமாக அனுமதியில்லை. அடுத்து ஹஜ்ஜுடைய நாட்களில் அரபா, முஜ்தலிபாவில் மட்டும்தான் தாங்கள் கூறியது போன்று இரண்டு தொழுகைகளை ஒரு சேர தொழ முடியும். மற்ற நாட்களில் அல்லது அதே ஹஜ்ஜுடைய நாளில் உலகத்தின் மற்ற எந்த பகுதியிலும் ஹனஃபீ மத்ஹபின்படி நிச்சயமாக அப்படி இரண்டு நேரத் தொழுகைகளை ஒன்று சேர்த்து தொழுவதற்கு அனுமதியில்லை.

☛ பெண்கள் குர்ஆன் ஓதும் பொழுது சப்தமிட்டு ஓதினால் மற்றவர்கள் அதை கேட்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் அவர்களுக்கு அந்த நன்மையும் கிடைக்கிறது. அத்துடன் பிள்ளைகளுக்கும் ஓதுவதற்குண்டான ஆர்வம் அதிகரிக்குமல்லவா! இதனால் பெண்கள் குர்ஆனை சப்தமிட்டு ஓதலாமா?

✍ வீட்டிற்குள் இருப்பவர்கள் கேட்குமளவு சப்தமிட்டு ஓதுவதில் எந்த தவறுமில்லை.

நாற்பது மக்ரூஹ்கள் சேர்ந்தால் ஒரு ஹராமிற்கு சமம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இங்குள்ள இமாம் அவர்கள் அதை மறுக்கிறார்கள். இப்பொழுது நான் கேள்விப்பட்ட விஷயத்திற்கு ஆதாரம் இருக்கிறதா?

**நெல்லூரிலிருந்து**
**எஸ்.முஹம்மது சிராஜ்தீன்**

கிதாபுகளில் எங்கும் தாங்கள் சொல்வது போன்ற ஒரு விஷயம் இருப்பதாக நமக்கு தெரியவில்லை.

மரணித்தவர்கள் கனவில் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

**புளியம்பட்டியிலிருந்து**
**ஹஸீனா தஹ்ஸீன்**

அவர்களின் நன்மைக்காக தான தர்மங்கள் செய்ய வேண்டும்.

பொதுச் சொத்தை கையாடல் செய்யலாமா? இஸ்லாத்தில் அதற்கு தண்டனை என்ன?

**வீரபாண்டியிலிருந்து**
**சாதிக் பாட்சா**

இந்த மாபெரும் குற்றத்தை செய்பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் மகத்தான தண்டனை உண்டு. நிச்சயமாக அந்த தண்டனையிலிருந்து தப்புவதற்கு எள்ளளவும் இடம் கிடையாது. அவர் கொள்ளையடித்திருக்கக்கூடிய அந்த சொத்துகளை மறுமை நாளையில் அவர் தனது கழுத்தின்மீது வைத்து சிரமப்பட்டு தூக்கி கொண்டு வரும் பொழுது அந்தோ பரிதாபம்! அந்த சொத்தை யாரிடம் அவர்


# மணமகன் தேவை

நெல்லை ஏர்வாடியை பூர்வீகமாக கொண்ட தமிழ் முஸ்லிம், வயது 23, பார்வை இல்லாதவர், Quran மனனம் மற்றும் அர்த்தம் கற்று தேர்ந்த மணமகளுக்கு. (ஹாஃபிழ்) மார்க்கப் பற்றுள்ள, தியாக குணம் கொண்ட, இறை கொள்கையில் உறுதியாக இருக்கும் மணமகன் தேவை.

தொடர்புக்கு: 94452 29388

கொடுத்து பரிகாரம் பெற முடியும்? உலகத்தின் எந்த காசு பணமும் செல்லாக் காசாகிவிட்ட அந்த நாளில் இவருடைய அந்த சொத்து கள் அவருக்கு என்ன பயனை தரப் போகிறது? பொதுச் சேவை யில்ஈடுபட்டிருக்கக்கூடிய நூற்றுக் கணக்கான நண்பர்கள் நிச்சயம் இவற்றை சிந்தித்து செயல்படுவது மிக மிக அவசியமாகும்.

☛ பாத்ரூம் லெட்ரின் இரண்டும் ஒன்றாக உள்ளது. அங்கிருந்து ஒளுச் செய்துவிட்டு தொழுகலாமா?

**பாலக்காட்டிலிருந்து**
**அஹமது தம்பி**

✍ தொழுகலாம்.

☛ பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் மரணித்தவர்களுக்கு ஜியாரத் என்ற பெயரால் 3,7,40இந்த நாட்களை குறித்து பாத்திஹாக்கள் ஓதப்பட்டனவா? சஹாபாக்கள் காலத்தில் இது போன்ற செயல்கள் நடந்ததா?

✍ அப்படி எதுவும் நடை பெற்றதாக வரலாறு இல்லை.

☛ எனது தாயார் வழியிலுள்ள பெரியம்மா மகளை திருமணம் செய்யலாமா? மற்றவர்கள் திருமணம் செய்யலாம் என்று சொன்னாலும் எனது தந்தை அவள் உனக்கு தங்கை முறை; எனவே கூடாது என்கிறார். ஷரீஅத் சட்டம் என்ன?

**பத்ராவதியிலிருந்து**
**முஹம்மது பஷீர்**

✍ நேரடியான தங்கையாக இல்லை என்ற காரணத்தால் அவளை திருமணம் செய்வது கூடும் என்றுதான் ஷரீஅத் சொல்கிறது.

☛ யாருக்காக வேண்டி அகீகா கொடுக்கப்பட்டதோ அவருடைய பெற்றோர்கள் அந்த இறைச்சியை சாப்பிடலாமா? சாப்பிட்டால் கூடுமா?

**முசிறியிலிருந்து**
**நவாப் ஷெரீப்**

✍ சாப்பிடலாம். கூடும்.

☛ முஸ்லிம் ஒருவர் மரணம் அடைந்தால் மற்ற முஸ்லிம் கள் மீது எத்தனை விஷயங்கள் கடமையாகும்?

**தாரமங்கலத்திலிருந்து**
**அஹமது கபீர்**

✍ ஒரு முஸ்லிம் மரணம் அடைந்துவிட்டால் உடனிருக்கும் மற்ற முஸ்லிம்கள் அவரை குளிப்பாட்டி கபனிட்டு தொழுக வைத்து நல்லடக்கம் செய்வது கடமையாகும்.

☛ தக்பீர் தஹ்ரீமா என்றால் என்ன?

**சேலத்திலிருந்து**
**லுக்மான் பாஷா**

✍ தொழுகையின் ஆரம்பத்தில் சொல்லப்படக்கூடிய "அல்லாஹு அக்பர்" என்ற தக்பீருக்கு பெயர் தான் தக்பீர் தஹ்ரீமாவாகும்.

☛ தொழுகை முறையில் ஆண் - பெண்களுக்கு மத்தியில் வித்தியாசம் என்ன?

## பள்ளிவாசலில் நுழைந்தால்....

“உங்களில் ஒருவர் பள்ளிவாசலில் நுழைந்தால் இரண்டு ரக்அத்துகள் தொழும் வரை அமர வேண்டாம்” என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூகதாதா (ரளி) அவர்கள் (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

---


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

# A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260
armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

✍ ஆண்கள் தக்பீர் கட்டும் பொழுது தங்களுடைய கை களை தொப்புளுக்கு கீழும் பெண்கள் தங்களுடைய கை களை தொப்புளுக்கு மேலும் வைக்கவேண்டும். அத்துடன் ஸஜ்தாவில் ஆண்கள் தங்களு டைய வயிற்று பகுதியை தொடையை விட்டும் தூரமா கவும் பெண்கள் இரண்டையும் ஒட்டியும் வைக்கவேண்டும். அத்தஹிய்யாத் இருப்பில் ஆண்கள் தங்களின் பித்தட்டு களை இடது பாதத்தின் மீதும், பெண்கள் தரையின் மீது வைத்து இடது காலை வலது காலின் வழியாக வெளியில் நீட்டியும் வைக்க வேண்டும்.

☛ வரதட்சணை வாங்காமல் வாழ்க்கை துணைவியை வர வேற்க முடியாது என்று கூறும் வாலிபர்களின் விஷயம் வருத் தப்படவேண்டிய விஷயம் இல்லையா?

**காரிமங்கலத்திலிருந்து**
**அப்துல் ரஜாக்**

✍ ஆம். நிச்சயமாக சந்தேக மின்றி தாங்கள் கூறுவது முற் றிலும் உண்மையானது தான். ஆலிம்கள் பயான்களில் சொல்லு கின்ற சட்டங்களையும் கட்டுரை வடிவில் எழுதுகின்ற எழுத்துக் களையும் படித்துப் பார்த்து சிந்தனை செய்து உணர்வதற்கு மறுக்கின்ற இவர்களை நாம் என்னவென்று சொல்வது?

☛ ஒருவர் வெள்ளிக்கிழமை மவ்த்தாகி விட்டார் என்றால் அவரை ஜும்ஆ தொழுகைக்கு முன்பு அடக்கம் செய்வது நல்லதா? அல்லது ஜும்ஆ தொழுது முடிந்து விட்டு அடக்கம் செய்வது நல்லதா?

✍ ஜும்ஆ தொழுகைக்கு ஓரிரு மணிநேரங்களுக்கு முன்பே ஜனாஸா தயாராகி பள்ளிக்கு வந்துவிட்டால் ஜும்ஆவிற்கு முன்பே அடக்கம் செய்துவிட வேண்டும். சரியாக ஜும்ஆ நேரத்தில் பள்ளிக்கு வந்தால் ஜும்ஆ முடிந்தபின் அடக்கம் செய்யலாம்.

☛ முஸ்லிம்களிடம் இணப் பற்று எவ்வாறு இருக்க வேண்டும்?

**தஞ்சையிலிருந்து**
**முஹம்மது ம:பாஜ்**

✍ ஒரு உடம்பின் உறுப்புக் களில் ஒன்று மற்றொன்றை தேடு வதைப் போன்று இருக்க வேண் டும். அதாவது உடலின் ஏதாவது ஒரு உறுப்பில் ஏதாவது ஒரு வகை யான வலி ஏற்பட்டால் மற்ற உறுப்புகள் அனைத்தும் அதற்காக வேண்டி தங்களால் முடிந்த உதவி களை செய்து ஆறுதல் கூறுவதைப் போன்று ஒரு முஸ்லிமுக்கு ஏற் படக்கூடிய ஒரு வேதனை உலகி லுள்ள மற்ற எல்லா முஸ்லிம் களையும் யோசிக்க வைப்பதே இணப்பற்றாகும்.

# கிறிஸ்துவர் ஆன ஒரு முஸ்லிமின் கதை!

# கீரம்பூர் மவ்லானா கூறியது

"முனீருல் மில்லத்" பேராசிரியர்

**கே.எம்.காதர் முஹையதீன்** எம்.ஏ., மேனாள் எம்.பி.

மதமாற்ற தடைச் சட்டங்கள் பாரதீய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் தொடர்ந்து நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

இந்தியா முழுவதும் இது போன்ற மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும் விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் அதைப் போன்ற இந்து மத இயக்கங்கள் கோரிக்கை எழுப்பி வருகின்றன.

மதம் என்பது மனிதமனம் சம்பந்தப்பட்டது. மனிதனின் மனத் திற்குள் குடிபுகுந்த நம்பிக்கையை அந்த மனிதனே மாற்றிக் கொள்ளாதவரை வேறு யாரும் மாற்றிவிட இயலாது; முடியாது.

திருக்குர்ஆனில் அடிக்கடி நினைவுப்படுத்தப்படும் திரு வசனம் இதுதான்! நபியவர்கள் இறைவனின் தூதர்; அவருக்கு இறைவன் புறத்திலிருந்து அருளப் பட்டிருக்கிறது. இப்படி அருளப் பட்ட மனித வாழ்வியலுக்குத் தான் இஸ்லாம் என்று கூறப்படு கிறது. இறைவன் புறத்திலிருந்து வந்தாலும், அதனை எந்தவொரு மனிதனும் நபி சொல்கிறார் என்பத தற்காக ஒப்புக் கொள்வதில்லை. அவ்வாறு அந்த மனிதனை ஏற்றுக்கொள்ளும்படியும் நபியவர் களால் செய்து விட முடியாது. நபியவர்கள், தனக்கு அருளப் பட்டதை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்! அதுதான் நபியவர்களின் கடமை. நபியவர் கள் மூலமாக மானிட சமுதாயத் திற்கு அறிவிக்கப்பட்டுள்ள இறை யருள் மார்க்கத்தை மனிதர்கள் ஏற்பதும் ஏற்காததும் நபியவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வராதது! இறைவ னின் அருள் இருந்தால் தான் மனிதர்கள் நபியின் போதனையான இஸ்லாமிய நெறியை ஏற்க முடியும். நபியவர் கள் தங்களின் போதனைகளை மனிதர் ஏற்க மறுக்கிறார்களே என்று வேதனைப்படுவதில் எவ் வித நியாயமும் இல்லை. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் இறைவன் புறத்திலி ருந்து வந்துள்ளதை ஏற்று நடப்பது என்பது அந்த படைப் பாளனின் அருள் இருந்தால்தான் நடைபெறுமே தவிர வேறு

எவ்விதத்திலும் நடைபெற முடியாது.

ஆகவேதான், மதமாற்றம் என்பது உண்மையல்ல; மன மாற்றம் என்பதே சரியானது என் கிறார்கள். இங்கே ஒரு சம்பவத்தை மேற்கோள் காட்டலாம்.

திருச்சி பீமநகர் நெடுஞ் சாலை ஹீபர் ரோடு. இதன் மத்தி யில் மியான் ராவுத்தர் பள்ளிவாசல். இங்கே நாற்பத்தி மூன்று ஆண்டு கள் பள்ளிவாசல் இமாமாக பணி செய்தவர் மவ்லவீ கீரம்பூர் முஹம்மது அலீ ஹள்ரத் அவர்கள்.

கீரம்பூர் மவ்லவீ சிறந்த சொற்பொழிவாளர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்துவ பாதிரியார்களுடன் பல விவாதங் களைச் செய்தவர். இவருக்கு "அமீருல் வாயிஜீன் - சொற் பொழிவில் அமீர்" என்று பட்டம் அந்த காலத்தில் வழங்கப்பட்டி ருந்தது. பெரம்பலூர் மாவட்டத் திலுள்ள இந்த கீரம்பூர் நெடுங் காலத்திற்கு முன்னரே திருச்சி யில் குடியேறி மியான் ராவுத்தர் பள்ளிவாசல் இமாமாக இருந்தார் கள். திருச்சியிலும், பெரம்பலூர் வட்டாரத்திலும் தமிழகத்தின் பல ஊர்களிலும் கீரம்பூர் ஹள்ரத் என்றால் எல்லோருக்கும் தெரிந்தவராக இருந்தார்கள்.

சுதந்திரத்துக்கு முன்னர் கிறிஸ்துவ பாதிரிமார்கள் மத மாற்றம் செய்வதை தங்களின் தலையாய பணியாகச் செய்து வந்தனர். மவ்லானா அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு பாதிரியார் அவரிடம் பேசும்போது, கிறிஸ்துவ மதத்தில் பலர் சேர்ந்து வருகிறார்கள். ஏன் ஒரு முஸ்லிம் கூட கிறிஸ்துவர் ஆகியிருக்கிறார் என்று கூறியிருக்கிறார். மவ்லானா அவர்கள், அந்த பாதிரியாரிடம் அந்த முஸ்லிமை கூட்டி வந்து தன்னிடம் காட்டும்படி வேண்டு கோள் விடுத்தார்கள். பாதிரி யாரும் ஒப்புக் கொண்டு ஒரு நாள் மவ்லானா வீட்டுக்கு அந்த கிறிஸ்துவரான முஸ்லிமை அழைத்துக் கொண்டு வந்திருக் கிறார். பாதிரியாரிடம் பலவிஷயங் களைப் பேசிய மவ்லானா தனது இருக்கைக்கு அருகே இருந்த ஒரு வேடு கட்டியிருந்த கலயத் தைக் காட்டி, அந்த கலயத்தை மூடியிருக்கிற வேட்டுத் துணியை நீக்கும்படி கூறியிருக்கிறார். கிறிஸ்துவரான அந்த முஸ்லிம் பையன் கலயத்தை மூடியிருந்த வேட்டுத்துணியை நீக்கியிருக் கிறார். உடனே, கலயத்திற்குள் இருந்த தண்ணீர் பாம்பு விருட் டென்று தலை தூக்கி வெளி வந்திருக்கிறது. திடீரென்று வெளி வந்த பாம்பைப் பார்த்துப் பயந்துபோன அந்த கிறிஸ்துவரான முஸ்லிம் பையன் "அல்லாஹ்" என்று கத்திவிட்டான்!

இதைப் பார்த்துக் கொண்டி ருந்த பாதிரியார் எதுவும் பேச முடியாமல் வெட்கித்துப் போய் அமர்ந்திருக்கிறார். மவ்லானா அவர்கள் மதமாற்றிவிட்டேன்

GSTIN : 33DMUPA2892F1ZW

8122365636
7708696860





# அன்னிஸா பேஷன்ஸ்

## மொத்த வியாபாரம்

- புர்கா
- ஹிஜாப்
- நைட்டி
- ஷால் – நைட்டி
- துப்பட்டா
- காட்டன் ஷால்
- லெகின்ஸ்
- பட்டியாலா





**மொத்த விற்பனை மட்டும்**

மங்கலம் – பல்லடம் ரோடு, சிட்டி யூனியன் பேங்க் அருகில்,
**மங்கலம்** - 641663. திருப்பூர் மாவட்டம்.

9150551838

என்கிறீர்களே அல்லாஹ் என்று அலறுகிறானே!" என்று கூறி பாதிரியாருக்கு விடை கொடுத்து அனுப்பியதோடு அந்தபையனுக்கு புத்திமதி கூறி தன்னை தொடர்ந்து தொடர்பு கொள்ளும்படி கூறி அனுப்பியுள்ளார்.

கீரம்பூர் மவ்லானா அவர்கள் ஜும்ஆ வெள்ளி மேடையில் அரபி, உருது, பார்ஸி மொழி களிலிருந்து மேற்கோள்கள் காட்டுவார்கள். அவருடைய ஜும்ஆ குத்பா சொற்பொழிவு களில் உமறுப்புலவர் பாடல்கள், குணங்குடி மஸ்தான் பாடல்கள் மேற்கோள் காட்டப்படுவது அன்றைய காலத்து வழக்கமாக இருந்தது.

மவ்லானா அவர்கள் வைகறை - பஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஒரு மணி நேரம் மார்க்க விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்து வார். அந்த காலத்தில் நான்கு ஐந்து பேர்கள்தான் பஜ்ர் தொழுகைக்கு வருவார்கள். அவரது பயானை இறுதிவரை கேட்பவனாக இந்த எளியேன் தான் இருப்பேன். சொற் பொழிவுக்குப் பிறகு - பள்ளிக்கு எதிரிலுள்ள அவரது வீட்டுக்கு என்னையும் கூட்டிச் சென்று அவர் அருந்தும் காலை தேநீரை எனக்கும் கொடுப்பார். தேநீரில் பசு வெண்ணெய் கலந்து அருந்தக் கொடுப்பார். இந்த தொடர்பின் போது மவ்லானா அவர்கள் சொன்ன சம்பவத்தையே மேலே குறிப்பிட்டுக் காட்டியுள்ளேன். இதுவெல்லாம் 1950களில் நடந்தவையாகும்.

ஆக, மதமாற்றம் தடை யெல்லாம் நாட்டில் இப்போது சர்வசாதாரணமாகப் பேசும் பொருள் ஆகிவிட்டிருக்கிறது. சிறு வயதில் எந்த மதத்தில் ஈடுபாடும் பிடிப்பும் பிணைப்பும் ஏற்படுகிறதோ, அதில்தான் பொதுவாக மனிதர்களின் லயிப்பு தொடரும். எந்த கொள்கையிலும் ஈடுபாடோ பிடிப்போ பிணைப்போ இல்லாதவர்கள் தாம் மத விவகாரத்தில் மாறிக் கொண்டிருப்பார்கள். அறிவுப் பூர்வமாகச் சிந்தித்து, தான் இருக்கும் மதத்தை விட்டு வேறு மதத்திற்கு தன்னை மாற்றிக் கொள்வது என்பது ஒரு சிலர் வாழ்க்கையில் நடப்பது ஆகும். எந்த மதத்திலும் இல்லாமல் இருப்பவர்களே, கூட்டம் கூட்ட மாக பிற மதங்களுக்கு மாறுவார் கள். வரலாற்றில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் தாம் ஏற்பட்டிருக்கின்றன.

மனித மனம் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கிவிட்டால் உலகமே எதிர்த்தாலும் அந்த மனத்தை அதன் போக்கிலி ருந்து தடுக்கவோ, நிறுத்தவோ ஒருக்காலும் முடியாது!

நன்றி : மணிச்சுடர் (26.12.2021)

# புதுப்புது நோய்கள் உருவாகி, உருமாறி உலா வருவதின் பின்னணி என்ன?

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரை... உலக மனிதர்களை நோய்கள் துரத்திக் கொண்டே வருகிறது. ஓராண்டுக்கு ஒரு வைரஸ் எனும் ரீதியில் ஒவ்வொரு புத்தாண்டிலும் ஒரு புதிய வைரஸ் உருவாகி, மனித உயிர்களை கொத்து கொத்தாக கொன்று வருகிறது.

புதுப்புது வைரஸ்கள் உருவாகாமல் இருப்பதற்கும், அது உருமாறி பரிணாம வளர்ச்சி அடையாமல் இருப்பதற்கும் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த சில சுகாதார நடவடிக்கையை மேற்கொண்டு, ஒழுங்காக கடைபிடிக்க வேண்டும்.

"அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பாத்திரங்களை மூடி வையுங்கள்; தண்ணீர் தோல் பையின் வாய்ப் பகுதியைச் சுருக்கிட்டு மூடி வையுங்கள். ஏனெனில் ஆண்டின் ஓர் இரவில் கொள்ளை நோய் இறங்குகிறது. மூடியில்லாத பாத்திரத்தையும், சுருக்கிட்டு மூடிவைக்காத தண்ணீர் பையையும் கடந்து செல்லும் அந்த நோயிலிருந்து சிறிதளவாவது அதில் இறங்காமல் இருப்பதில்லை."

அறிவிப்பாளர்: ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் 4102)

மேற்கண்ட நபிமொழி ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில், 'ஆண்டில் ஒரு நாள் உண்டு. அந்நாளில் கொள்ளை நோய் இறங்குகிறது என்று இடம் பெற்றுள்ளது. நபிமொழியின் இறுதியில் நமக்கு அருகிலுள்ள அரபியர் அல்லாதோர் டிசம்பர் மாதத்தில் அந்த நாள் வருவதாகக் கருதி அஞ்சுகின்றனர், என்று லைஸ் பின் சஅத் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்' எனக் கூடுதலாக இடம் பெற்றுள்ளது'

(நூல் : முஸ்லிம்)

மேற்கூறப்பட்ட நபிமொழியில் கிடைக்கும் பயனுள்ள நான்கு தகவல்கள் : 1. மூடி வைத்த பாத்திரத்தையும், வாய்ப் பகுதி சுருக்கி மூடி வைத்துள்ள தண்ணீர் தோல் பையையும் ஷைத்தான் திறக்கமாட்டான்;

அதை அருந்துவதையும் ஆகு மாக்கமாட்டான். இதனால் ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது.

2. ஆண்டின் ஓர் இரவில் இறங்கும் வைரஸ் மூடி வைக்கப்பட்ட பாத்திரத்திலும், சுருக்கிட்டு வைக்கப்பட்டுள்ள தோல் பையிலும் இறங்குவதிலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது.

3. அழுக்குப்படிவதிலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது.

4. விஷப்பூச்சிகள், கொசுக்கள் விழுவதிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது. இந்த நான்கு சுகாதார அம்சங்களும் வைரஸ் பரவு வதை தடுத்து நிறுத்தி கட்டுக்குள் வைக்கிறது.

(இமாம் நவவீ - ரஹ்)

## உலகை பயமுறுத்திய கொடிய வைரஸ்கள்

கொடிய வைரஸ் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் ஏற்பட்டிருக்கிறது.

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : "நான் நபி (ஸல்) அவர்களிடம் (பிளேக், காலரா போன்ற) கொள்ளை நோய் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள், 'அது, தான் நாடியவர்களின் மீது அல்லாஹ் அனுப்புகிற வேதனையாகும். அல்லாஹ் அதை இறை நம்பிக்கையாளர்களுக்கு கருணையாக ஆக்கியுள்ளான்' என்று தெரிவித்தார்கள். மேலும், 'கொள்ளை நோய் பரவிய இடத்தில் இருப்பவர் எவராயினும் அவர் பொறுமையுடனும், இறை வெகுமதியை விரும்பியவராகவும் இறைவன் நமக்கு எழுதியுள்ள (விதிப்படி நம்மைப் பீடிக்க விருப்)தைத் தவிர வேறெதுவும் நம்மைப் பீடிக்காது எனும் நம்பிக்கை கொண்டவராகவும் தன் ஊரிலேயே தங்கியிருப்பாராயின் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவர் பெறுவதைப் போன்ற நற்பலன் அவருக்கும் நிச்சயம் கிடைக்கும்' என்று கூறினார்கள்."

(புகாரி : 3474)

பிளேக், காலரா, கொரோனா போன்ற வைரஸ்கள் என்பது இறைவன் புறத்திலிருந்து வருகிற வேதனையாகும். இந்த வேதனை உலகில் அட்டூழியங்கள் அதிகரிக்கும்போது இறைவனால் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால் அட்டூழியங்கள் புரியும் அயோக்கியர்கள் அழிக்கப்படுகிறார்கள். இதில் நல்லவர்களான இறைநம்பிக்கையாளர்களில் சிலரும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களும் தங்களது உயிர்களை துறக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

வைரஸ் என்பது பாவிகளுக்கு வேதனையாக இறங்கும் அதே வேளையில் அப்பாவிகளான இறைநம்பிக்கை கொண்ட நல்லவர்களுக்கு இறைவனின் ரஹ்மத்தாகவும் அமைந்து விடுகிறது.

வைரஸ் என்பது இறைவனின் வேதனையா? அல்லது இறைவனின் கருணையா? ஆம். வைரஸ் என்பது தீயவர்களுக்கு, ஓரிறை மறுப்பாளர்களுக்கு வேதனையாகவும், இறை நம்பிக்கையாளர்களுக்கு கருணையாகவும் அமைந்து விடுகிறது.

புதுப்புது வைரஸ்கள் ஆண்டின் ஓர் இரவில் ஒவ்வொன்றாக உதயமாகி கொண்டே வருகிறது.

ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் சிரியா நாட்டில்ஏற்பட்ட 'அமவாஸ்' எனும் வைரஸ் நோயால் 30 ஆயிரம் பேர் இறந்தனர். இந்த நோய் இஸ்லாமிய இரண்டாம் ஜனாதிபதி உமர் (ரளி) அவர்களின் ஆட்சியில் ஏற்பட்டது. இந்த நோயின் தாக்கம் கிட்டதட்ட ஒரு மாத காலம் இருந்தது. இந்த நோயில் இறந்து போன 30 ஆயிரம் முஸ்லிம்களில் பெரும் நபித்தோழர்களாக விளங்கிய ஹள்ரத் அபூஉபைதா பின் ஜர்ராஹ் (ரளி), ஹள்ரத் முஆத் பின் ஜபல் (ரளி) போன்றோரும் இறந்து போனர்.

1918ஆம் ஆண்டில் ஏற்பட்ட வைரஸ் 'ஸ்பானிஷ் புளூ' இது அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பரவத் தொடங்கி பின்னர் ஸ்பெயினிலும் பரவியது. இதற்கு உலகம் முழுவதும் 5 கோடியிலிருந்து 10 கோடி பேர் இறந்தனர்.

1347 முதல் 1351 வரை உலகையே அச்சுறுத்திய பெரிய வைரஸ் நோயால் கிட்டதட்ட 20 கோடிபேர் இறந்து போனார்.

கடந்த இருபது ஆண்டுகளாக மிரட்டிய வைரஸ்கள் :

ஜிகா வைரஸ் : இது உகாண்டாவிலும், மெக்சிகோவிலும்

நிம்பா வைரஸ்: மலேசியாவிலும்

'ஸ்வைன்புளூ' பன்றிக்காய்ச்சல்: அமெரிக்காவிலும்,

எபோலோ வைரஸ் : சூடான், காங்கோவிலும்,

சார்ஸ் வைரஸ் : சீனாவிலும்

உருவாகி, உலகின் பல பகுதிகளில் பரவி, பல கோடி உயிர்களை பறித்தன.

இன்னும் இவற்றைத் தவிர 'போர்டு புளூ' எனும் பறவைக் காய்ச்சல், விஷக்காய்ச்சல், மர்மக் காய்ச்சல், மலேரியா காய்ச்சல், சிக்கன்குன்யா காய்ச்சல், டெங்கு காய்ச்சல் வரை புதுப் புது வைரஸ்கள் வந்து உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

## பாக்கியம் பெற்றவர்

1. அறிவுள்ள இதயம்.
2. பொறுமையுள்ள சரீரம்.
3. உள்ளதைக் கொண்டு போதுமாக்குதல்.

நூல் : முநப்பிஹாத்

இவற்றையெல்லாம் மனிதர்கள் கடந்துவந்து, நிம்மதி பெருமூச்சு விட்டு, நிம்மதியாகவாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சீனாவின் வுகான் எனும் ஊரில் கொரோனா வைரஸ் உருவாகி, உலகம் முழுவதும் பரவி, இதுவரைக்கும் சுமார் 52 லட்சம் பேர் வரைக்கும் உயிரை துறந்துள்ளனர்.

கொரோனாவின் இரண்டாம் அலையாகவும் வீசியது. அதன் மூன்றாம் அலையாக டெல்டா பிளஸ் எனும் வைரஸ் உருமாறியது. அதன் நான்காம் அலையாக ஒமைக்ரான் எனும் கொரோனாவின் புதிய வைரஸாக உருவாகி, உலகில் வேகமாக பரவிக்கொண்டு வருகிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு கொரோனா என்றால் என்ன? என்பதை கேள்விபட்டிருக்க மாட்டோம். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு வரைக்கும் ஒமைக்ரான் எனும் வைரஸ் பற்றி கேள்விபட்டிருக்க மாட்டோம். இத்தகைய புதுப்புது வைரஸ்கள் உருவாகுவதற்கு என்ன காரணம்? இத்தகைய வைரஸ்களை ஒழிப்பது எப்படி? இனிமேல் ஒரு புதிய வைரஸ் உருவாகாமல் இருக்க உலக சுகாதார நிறுவனமும், உலக மருத்துவர்களும், உலக மக்களும் என்ன செய்ய வேண்டும்?

ஒரு வைரஸை முற்றிலும் ஒழிப்பதற்கு இனிமேல் புதிய வைரஸ் உருவாகாமல் இருப்பதற்கு மருத்துவரீதியான, அறிவியல் ரீதியான சிகிச்சை முறை மட்டுமே போதாது. மாறாக, மார்க்க ரீதியான, ஆன்மிக ரீதியான சிகிச்சை முறையையும் கடைபிடிக்க வேண்டும். ஆன்மிக ரீதியான சிகிச்சை முறை மட்டுமே ஒரு வைரஸை முற்றிலும் ஒழிப்பதுடன் இனி ஒரு வைரஸ் உருவாகாமலும் தடுத்து நிறுத்த முடியும்.

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் கூறுகிறார் :

**“நபி [ஸல்] அவர்கள் எங்களை முன்னோக்கி வந்து, ‘முஹாஜிர்களே! ஐந்து செயல்கள் அவற்றைக் கொண்டு நீங்கள் சோதிக்கப்பட்டால்... அவற்றை நீங்கள் அடைவதை விட்டும் நான் இறைவனிடம் பாதுகாவல் வேண்டுகிறேன்.**

**1. எந்த ஒரு சமுதாயத்தில் மானங்கெட்ட காரியம் [விபச்சாரம், ஓரினச் சேர்க்கை] மிகவும் பகிரங்கமாக செய்யப்படுகிறதோ அவர்களிடத்தில் காலரா போன்ற கொள்ளை நோயும், மேலும் துன்பம் தரும் அனைத்துவிதமான நோய்களும் பரவும். அந்த கொள்ளை நோயும், புதுவிதமான நோயும் அவர்களுக்கு முன் வாழ்ந்தவர்களிடம் வராத நோயாகும்.**

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

2. எவர்கள் அளவையிலும், நிறுவையிலும் குறைத்து மோசடியில் ஈடுபடுகிறார்களோ அவர்கள் பஞ்சத்தைக் கொண்டும், அதிகம் தேவையாகுவதை கொண்டும் அநியாயக்கார ஆட்சியாளனைக் கொண்டும் பிடிக்கப்படுவார்கள்.

3. எவர்கள் தங்களது செல்வங்களிலிருந்து ஜகாத்தை கொடுக்க மறுக்கிறார்களோ அவர்களுக்கு வானிலிருந்து மழைத்துளி இறங்குவது தடுக்கப்படும்.

4. எவர்கள் இறைவனுடைய வாக்குறுதியையும், அவனின் தூதரின் வாக்குறுதியையும் முறிக்கிறார்களோ அவர்கள் மீது இறைவன் அவர்களைச்சாராத எதிரியை சாட்டி விடுகின்றான். அவர்கள் முஸ்லிம்களின் பகுதிகளை கைப்பற்றி, அங்கு தங்களின் அதிகாரத்தை செலுத்துவார்கள். அவர்களின் பொருளாதாரத்திலும் ஆதிக்கம் செலுத்துவார்கள்.

5. எந்த சமுதாயத்தின் இமாம்கள் இறைவேதத்தின்படி தீர்ப்பளிக்கவில்லையோ, மேலும் இறைவன் இறக்கியதை தேர்வு செய்யவில்லையோ அல்லாஹ் அவர்களுக்கிடையே விரோதத்தையும், பகைமையையும் அவர்களின் பங்குகளாக ஆக்கி விடுவான்' என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.''

(நூல் : இப்னுமாஜா)

இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், ஒரு சமுதாயத்தில் விபச்சாரம் போன்ற மானங்கெட்ட, அறுவெறுக்கத் தக்க செயல்கள் வீதிகளில் பகிரங்கமாக செய்யப்படுகிறதோ அந்த சமுதாயத்தில் முன்னோர்கள் சந்திக்காத புதுப்புது வைரஸ்கள், பிளேக், காலரா போன்ற தொற்றுகள் வேகமாக பரவும் எனும் விபரத்தை நபி (ஸல்) அவர்கள் தெரிவிக்கிறார்கள். மார்க்க, இஸ்லாமிய ஆன்மிக ரீதியான நடவடிக்கையால் மட்டுமே புதிய வைரஸ்களை ஒழிக்க முடியும். மருத்துவ ரீதியான நடவடிக்கையால் மட்டுமே அதை ஒழிக்க முடியாது.

'கொள்ளை நோய் என்பது யூதர்களின் ஒரு கூட்டத்தார் மீது, அல்லது உங்களுக்கு முன்னிருந்தவர்களின் மீது [அவர்களின் அட்டூழியங்கள் அதிகரித்து விட்டபோது] அனுப்பப்பட்ட ஒரு வகை வேதனையாகும்' என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹஸ்ரத் உஸாமா பின் ஜைத் (ரளி) அவர்கள்

(புகாரி : 3473)

# விழித்தெழு!

**திருவை அப்துர் ரஹ்மான்**

அன்புச் சோதரனே
அஸ்ஸலவாமு அலைக்கும்!

உன்னைத்தான் - உன்னைத்தான்!
ஓகோ - தூங்குகிறாயா
தூங்காதே - நீ
தூங்கியதால் தானே
பல வரலாறுகள்
பூனைகள் உருட்டிவிட்ட
பால் பாண்டங்களாகிவிட்டன!

எண்ணெய் வார்த்திடச்
சோம்பியதால் தானே
எத்தனையோ தீபங்கள்
அணைந்து விட்டன!

இந்த
ஏழைக் கவிஞனின்
எழுதுகோல் ஏர்முனையை
யாசகப் பாத்திரமாக்கிவிடாதே!

வீரம் சிந்தும் உனது
விழியிணைகள்
கண்ணாமூச்சி ஆடுவதற்காகக்
கட்டப்படுபவை அல்ல -
அவை
குண்டுச் சட்டிக்குள் சுழலும்
குதிரைகளுமல்ல!

நீ
வானத்தைப் பார்க்கும்போது
நிலத்திலும் தன்
உறவினர்கள் இருப்பதாக
ஆதவன் கருத வேண்டும்!

உன்னிடமிருந்து
பெற்ற கடன்களைத்தான்
சந்திரன், விண்மீன்கள், மின்னல்
இவை தவணைகளாகத்
திருப்பித் தருகின்றன!

நீயோ
ஆதிச்சுடரின்
அற்புதக் கிரணம் -
பின் எதற்காக
மின்மினியில் குளிர்காய்கிறாய்!

சமைக்கும் வடிவங்களுக்கெல்லாம்
வளைந்து நெளியும்
களிமண்ணல்ல - ஒளியே!
உன்னை உளியால் செதுக்கிட
யாரால் இயலும்?
எப்படி முடியும்?

சுடர் விடு!
நீ தூங்குகின்றபோது
இகமே இருண்டு விடாதா?
உள்ளத்தாமரை
கூம்பிவிடாதா?

இல்லையே என்றேங்குவோர்
எத்தனை யெத்தனையோ
ஆனால்
இருந்தும் எடுத்துக் கொள்ளாத
பராமுகம் பரிதாபத்திற்குரியதே!

நம் ஆதிபிதா ஆதம் (அலை)
விழிகள் திறந்ததோ
விண்ணில் சுவனத்தில் -
கோதுமைக் கனியால்
கொண்ட மயக்கம்
தூக்கத்தின் முன்னுரையாயிற்று!

சிறு தவறுக்காகச் சிந்திய
கண்ணீர்க் காவியத்தைப்
புரட்டிப்பார்!

ஆனால் இன்றோ - நீ
நிமிடத்திற்கு நிமிடம்
இச்சைக் கனியுண்டு
கொச்சையாதல் முறையா?

கவர்ச்சிப் போதையின்
கைவிலங்கால்
ககனக் கராகிரகத்தில்
கண்மூடித் தூங்கலாமா -
ஏங்கலாமா?

சொர்க்கத்தின் சொந்தக்காரனே
விழித்தெழு!
பாவப் பொய்சாட்சிகளால்
பட்டயத்தைப்
பறிகொடுத்து விடாதே!

இந்த
இடைக் காலச் சத்திரத்தை நம்பி
உனது வெள்ளைக் குதிரைகளைக்
காட்டிற்குள் ஓட்டிவிட்டால்
எத்தனைக்காலம்
காலால் நடந்தாலும்
ஊர்ப்போய்ச் சேரமுடியாது!

உமிக் கூரையும்
உப்புச் சுவரும்
புயல் மழைக்குப்
பயன்தருவதில்லை!

ஊறுகாயே உணவெனக்கருதி
கட்டுச் சாதத்தைக்
கைநழுவ விட்டால்
கண்ணிருந்தும் புண்ணியமில்லை!

நபி இபுறாஹீம் (அலை)
அவர்களின் பரம்பரையே
சற்றே நில் -
கனவுக்கட்டளையால்
கலீலுல்லாஹ் ஆற்றிய
காரியம் என்னே!

கற்பாறையை விடக்
கடிதான அவர்களின்
இறை உறுதிக்கு முன்னால்
இரும்புக் கத்தியும்
இளகிவிட வில்லையா!

புல்லரிக்கும் நிகழ்ச்சிகளைப்
புரிந்து கொண்ட அன்பனே -
உன்னால்
எப்படித்தான் தூங்கிக்
கொண்டிருக்க
முடிகிறதோ!

தங்கமே
உனது தகுதிகளை
உன்னாலேயே உணர
முடியவில்லையே!

சுவனக் கனிகளை நாம்
சுவைத்து மகிழ்வதற்காகப்
பசித்துத் தனித்து விழித்திருந்த
நபி பெருமானார் (ஸல்)
அவர்களை
நினைத்துப் பார்த்தாயா!

அந்த ராஜபாட்டையில்
சுளிரென நடைபயில வேண்டிய
நீயோ
காட்டுப் புதர்களின்
ஒற்றையடி முட்பாதையில்,
ஊசிமுனைகளில்,
உலாவரத் துடிக்கிறாயே
நியாயமா?

தாகம் தணித்திட
மேகமே மண்ணில் உள்ளதே.
பின் எதற்காக
குளங்குட்டைகளை நாட வேண்டும்
நோயால் வாட வேண்டும்!

உன்னால்
உமராக (ரளி) மாறவியலாது -
அவர்களின்
நிழலாக வேணும் மாறிட முயலு!

அபூபக்கர் (ரளி) ஆகிட இயலாது -
அந்த
'தௌர்' குகை இலக்கியத்தைத்
தடவிப் பார்ப்பவனாக வேணும்
இரு!

உதுமான் (ரளி) அவர்களின்
உத்தம சரிதையைப்
படித்தாலே போதும்
பண்பாடுகள் உனது
படிக்கட்டைத் தேடி வரும்!

ஹள்ரத் அலீ (ரளி) -
நாயகர் மருகர்
பாத்திமா (ரளி) கணவர்
நான்காம் கலீபா
அத்தோடு நின்றுவிடாதே

ஜனநாயக இலக்கியக் கர்த்தா
கர்பலா களங்கண்ட
அருமை ஹுஸைனுர் (ரளி) யின்
தந்தை!
இந்தப் பின்னணி உனது
முன்னணியாகட்டும்!

உணர்வுகளுக்காக
சிந்தனை உணவில் இந்த
உப்புக் கற்களையும்
சேர்த்துக்கொள்!

யாரின் அருள்
இல்லையென்றால் இங்கு
நீயில்லையோ - அந்த
ஏகனுக்கு நன்றி செலுத்து!

எவரின் உதிர ஓட்டத்தில்
நீந்திக் கரைசேர்ந்தாயோ
அந்தத் தியாகிகளுக்கு
பெற்றோருக்கு - அன்பு செலுத்து!

வட்டி, சீதனம், மது -
இன்னும் பலப்பல -
புரையோடிவிட்ட இந்தப்புண்கள்
உடலையே அழித்துவிடுமுன்
மார்க்க மருந்தகம் தேடு!

உங்கள் கரங்கள்
ஒன்றுபட்டு வேலிகளானால்
சமுதாயச் சோலை
செழித்து வளரும் - நறுமணமோ
சுவனத்தின்
சுவாசக் காற்றாகி விடும்!

விழுதுகளே நீங்கள்
வேர்கள் ஆகுங்கள்!
வேறுகள் ஆகவேண்டாம்!

இந்தப்
பனிச்சறுக்குப் பாதையைப்
பக்குவமாய் கடந்து செல்ல
'திருகுர்ஆன்' ஊன்றுகோல்
நம்மிடமுள்ளதே -
இன்னுமேன் தயக்கம்!

அறியாமை இருள் விலக
'ஹதீஸ்' விளக்குகள்
சுடர் விடுகின்றனவே -
இன்னுமேன் மயக்கம்!

ஓகோ....
உனது தூக்கம்
உண்மைத் தூக்கமல்ல
துனியாவின்
பேராசைத் தூக்கமாத்திரைகளை
விழுங்கியிருக்கிறாய்!

ஆத்மாவை அரித்துவிடும்
அந்த மாத்திரைகள்
இனி வேண்டாம்....
மறுத்துவிடு.... மறந்துவிடு!

இமைகளின் தூக்கமும்
ஒரு வணக்கமே -
நேர்வழி நம் சுவாசமானால்!

விழித்துச் செயல்பட்டால்
வணக்கங்களின் மேலான
வணக்கங்களே!

அன்பனே -
ஸலாம் கூறிவிடைபெறு முன்
ஒரு சில...
பராமுகமானவர்களுக்கு
எழுத்துக்கள்
பேனாவின் எச்சில்!
உணர்வுமிக்கவர்களுக்கு
உகுத்திடும் கண்ணீர்!

# ஏழு பாவமான செயல்களை விட்டும் தவிர்ந்திடுங்கள்

ஸஹாபாக்கள் (நபித்தோழர்கள்) மத்தியில் அமர்ந்திருந்த கருணை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நாசமாக்கக்கூடிய ஏழு பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

அப்போது தோழர்கள் "யா ரஸூலல்லாஹ்! ஏழு பாவங்கள் யாவை?" எனக் கேட்டனர்.

"1. அல்லாஹ்வுக்கு இணை வைத்தல். 2.சூனியம் செய்தல்.
3.அநியாயமாக கொலை செய்தல். 4.வட்டிப் பொருளை சாப்பிடுதல்.
5.அனாதையின் பொருளைச் சாப்பிடுதல்.
6.(தன் உயிரை காக்க) இஸ்லாமிய போரிலிருந்து படையினரை விட்டு புறமுதுகிட்டு ஓடி விடுதல்.
7.பரிசுத்தமான ஈமானுள்ள தீயவைகளை அறியாத அப்பாவிப் பெண்கள் மீது விபச்சாரம் புரிந்ததாக அவதூறு கூறுதல்"

என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள். (நூல் :புகாரி)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,** தென்காசி.

# வேலை செய்தால் கூலி! வேலை செய்யாவிட்டாலும் கூலியா?

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"முஃமின்களே! ஜுமுஆ நாளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை நினைவுகூர விரையுங்கள். வியாபாரத்தை விடுங்கள்"

- அல்குர்ஆன் (63 : 9)

"சூரியன் உதிக்கும் நாட்களில் மேன்மையானது. ஜுமுஆ நாள்; அந்நாளில் ஆதம் படைக்கப்பட்டு அந்நாளில்தான் சுவனம் நுழைந்தார்கள். அந்நாளில் தான் வெளியேற்றப்பட்டார்கள். கியாமத் இந்நாளில்தான் நிகழும்"

- ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்

இந்த அத்தியாயம் இறங்கியதிலிருந்து இன்றுவரை ஜுமுஆ நாளில் பாயன் செய்து, இந்நாளின் சிறப்பு பற்றியும் சொல்லி, பாங்கொலி வந்ததும், வியாபாரத்தை விட்டு விட்டு பள்ளிக்கு வாருங்கள். பாங்குக்கு முன் வருபவர்கள், பாங்குக்கு பின் வருபவர்கள் இவர்களின் சிறப்பு பற்றி கூறியும் அதிக பட்சம் வருவதில்லை.

பாங்குக்கும், குத்பாவுக்கும் இடைப்பட்ட நேரம் முப்பது நிமிடங்கள்தான். இந்த நிமிடங்களைக்கூட தியாகம் செய்ய முடியவில்லை.

துனியா, துனியா 30 நிமிடத்தில் பெரியளவு சம்பாதித்து குவித்துவிடப் போவதில்லை. அப்படியே சம்பாதித்துக் குவித்தாலும் அதில் பரக்கத் இல்லை.

**பரக்கத் என்றால் என்ன?**

பாங்கு சொன்னவுடன் பள்ளிக்கு வருகிறார். தொழுகை முடிந்து வீட்டுக்கு செல்கிறார். மனைவி உடல் நலமின்றி இருக்கிறார். டாக்டரிடம் அழைத்துச்செல்கிறார். சில நூறு ரூபாயில் சுகமடைந்துவிடுகிறார். இது பரக்கத்.

தொழுகை ஸப் நின்றதும் வருகிறார். முடிந்ததும் வீட்டுக்கு செல்கிறார். மனைவி உடல் நலமின்றி இருக்கிறார். டாக்டரிடம் செல்கிறார். மருத்துவமனையில் தங்க வேண்டிய நிலை! சுகமானவுடன் வீடு திரும்புகிறார். செலவு சில ஆயிரம் அல்லது இலட்சம். இது பரக்கத் இன்மை.

பள்ளிக்கு விரைந்து வாருங்கள் என்ற அழைப்பு அல்லாஹ்வுடையது. அல்லாஹ்வுடைய அழைப்பை புறக்கணித்தால், எதிர்விளைவு தாமதமானா

லும் விளைவென்று வந்து விட்டால் மனிதன் தாங்க மாட்டான்.

"நீண்ட ஆயுளைப் பெற்று, அந்த ஆயுளை அமல்களால் அழகு படுத்துபவர் சிறந்த மனிதர். நீண்ட ஆயுளை தீமைகளால் கொச்சைப்படுத்தியவர் தீயவனே."

**- ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்**

செல்வத்தைவிட ஆரோக்கியம் சிறந்தது. செல்வமிருக்கிறது. அதை அனுபவிக்க ஆரோக்கியமின்மை. இப்போது பாடுபட்டு சம்பாதித்தவைகளால் அனுபவிக்க முடியாதபோது அல்லது அதே நிலையில் மரணித்துவிட்டால் மண்ணறை மறுமை நிலை என்னவாகும்? இங்கும் அனுபவிக்கவில்லை. அங்கும் வேதனையென்றால் நீ வாழ்ந்த வாழ்க்கை என்ன?

ஐவேளைத் தொழுகை நோன்புகள், தர்மங்கள்,ஹஜ், ஜகாத் போன்ற அமல்களை மனநிறைவோடு செய்தவனின் மண்ணறை வாழ்வு மணக்கிறது. மறுமையில் சுவனபாக்கியம் கிடைக்கிறது.

வாரத்திற்கொரு நாள் கடைசி நேரத்தில் வந்து இமாம் ஸலாம் கொடுத்தவுடன் ஓடோடிப் போவது. நோன்பு, ஜகாத், ஹஜ் எதுவுமே இல்லை.

இவரும் சுவனத்தை எதிர் பார்க்கிறார். என்ன நியாயம்?

வேலை செய்தவனுக்கும் கூலி; செய்யாதவனுக்கும் கூலி என்பது என்ன சித்தாந்தம்?

"அமல்களால் சுவனம் போக முடியாது. அல்லாஹ்வின்கருணையால் சுவனம் புக முடியும்?" என்பது நபிமொழி.

இப்பொன்மொழியைக்காட்டி அல்லாஹ் என் மீது கருணை காட்டுவான். நானும் சுவனம் போய் விடுவேன். ஏனெனில், பாவமே செய்யாதவன் நான் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் உண்டு.

நபி பொன்மொழி உண்மையே. அந்த கருணை ஏற்படவும் நாம் நாயனின் அன்புக்கு உரியவர்களாக நடக்க வேண்டுமே. ஐங்கடமைகளை செய்தால்தான் கருணை காட்டுவான் நாயன்.

ரகசியமாக வெளிப்படையாக அல்லாஹ்வை பயப்படு. கோபத்திலும், சந்தோஷத்திலும் நீதத்தை நடுநிலையில் பார்.

ஏழ்மையிலும், செல்வ நிலையிலும் நடுநிலையுடன் வாழ்ந்து பழகு.

துண்டித்து வாழ்பவர்களோடு அண்டி அண்டியே வாழ்ந்து பழகு.

அநியாயக்காரனை மன்னித்து வாழ்ந்து பழகு.

இப்படியெல்லாம் வாழ, இதயம் இலகுவாக இருக்கவேண்டும். அப்படி இலகுவாக இருக்க இபாதத்தால்தான் முடியும்.

"நரகத்திற்கு ஜின்களிலும் மனிதர்களிலும் அதிகமானவைகளை படைத்துள்ளோம். இதயமிருக்கும் விளங்கமாட்டார்

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

# இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

**35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது**

# 35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விவரக் குறிப்புடன் 35plusnikkah@gmail.com என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

**தொடர்புக்கு :**

**35plusnikkah@gmail.com**

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கள். கண்கள் இருக்கும் [நல்லதை] பார்க்க மாட்டார்கள். காதுகள் இருக்கும் [நல்லதை] கேட்க மாட்டார்கள். இவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள்; அல்ல, [அவற்றைவிட] அதிகம் வழி தவறியவர்கள்.''

- அல்குர்ஆன் (7 : 179)

எந்த பயானையும், அறிவுரையையும் கேட்காதவர்கள் நரகை சார்ந்தவர்கள் என்பது தெரிகிறது. அல்லாஹ்வின் கருணையை நம்பியிருப்பவர்கள் இந்த வசனத்தை ஆராய்ந்து பார்க்கட்டும்; வேலை செய்யாமல் முதலாளியின் கருணை எப்படிக் கிடைக்கும்?

"சண்டைக்கு அழைப்பார்கள். விருந்துக்கு வா என்று அழைப்பதைப் போல். அப்போது நீங்கள் அதிக எண்ணிக்கையுடையவர்களாயிருப்பீர்கள். ஆனால், கரை புரண்டோடும் நுரை போல் சக்தியற்றவர்களாக இருப்பீர்கள். உலக ஆசையும், மரண வெறுப்புகள் உங்களிடம் மேலோங்கி இருக்கும்"

**- ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்.**

குர்ஆன் வசனமும், நபி மொழியும் அதன் கருத்துக்கள். பச்சை மரத்தில் ஆணி அடித்தாற் போல் இருக்கிறதல்லவா?

குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ள செவிடர்களாக, குருடர்களாகவே இருக்கப் போகிறீர்களா?

மண்ணறையின் தனிமை, அதன் பயங்கர இருள், கொடூர தோற்றத்தில் வரும் வானவர்களைப் பார்த்ததும் ஏற்படும் நடுக்கம், எவரின் துணையும் இல்லாத தவிப்பு. அடடா தப்பு செஞ்சுட்டோமே என அடித்துக் கொள்ள கைகள் கூட முன் வராத நிலை.

இந்த வரிகளை பல தடவை படியுங்கள். தனிமையில் படியுங்கள். இரவில் படியுங்கள். கற்பனை செய்துபாருங்கள். மய்யித்தாக, மரக்கட்டையாக, பாம்பு - தேள் - புழு - பூச்சிகள் நிறைந்த பாழடைந்த கிணற்றுக்குள் இருப்பதாக கத்துகிறீர்கள். உங்கள் சப்தம் வெளியில் வரவில்லை. எங்கும் ஓட முடியவில்லை.

இப்போதாவது தீன் வழி நடக்க திருமறையை பின்பற்ற நபி வழியை மேற்கொள்ள இதயம் வழி விடுகிறதா என்பதைப் பார்ப்போம்.

## சுவனப்பேறு தரும் கல்வி!

"கல்வியைத் தேடி ஒருவர் ஒரு வழியில் சென்றால் அவருக்கு சுவர்க்கத்திற்கு செல்லும் ஒரு வழியை அல்லாஹ் இலகுவாக்குகிறான்."

– அல்ஹதீஸ்

# மண்ணறைவாசிகளுக்காக...

## மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

وَالَّذِينَ جَاءُوا مِنْ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ
وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَءُوفٌ رَحِيمٌ

**"எவர்கள் இவர்களுக்குப்பின் வந்தார்களோ அவர்கள், "எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னிப்பாயாக! எங்களுக்கு முன் இறை நம்பிக்கை கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் மன்னிப்பாயாக! இறைநம்பிக்கையாளர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் எந்த குரோதங்களை ஏற்படுத்தாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கிருபையுடையவனும், இரக்கமுடையவனுமாக இருக்கின்றாய்" என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர்"** - அல்குர்ஆன் (59:10)

வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இறந்தோருக்காக தர்மம் செய்தல், தொழுதல், நோன்பு நோற்றல், ஹஜ் - உம்ரா செய்தல், குர்பானி கொடுத்தல், ஏழை எளியோருக்கு உணவளித்தல், குர்ஆன் ஓதுதல், பிழைப்பொறுக்கப் பிரார்த்தித் தல், (திக்ரு தஸ்பீஹ் எனும்) இறைதியானம் செய்தல், கடன் அடைத்தல் போன்ற நற்காரியங் கள் செய்வது மூலம் இறந்தோர் பயனடைவர் என்பது இஸ் லாமிய நம்பிக்கையாகும். இதைத் தான் இஸ்லாமிய வழக்கில் 'ஈஸால் ஸவாப்' எனப்படுகிறது.

இறந்தவர்களால் அணுவளவு நற்செயலைக்கூட செய்ய இய லாது. ஏனெனில், மண்ணறை என்பது செயலாற்றும் இடம் அல்ல. இதுவரை செய்தவைக்கு கூலி வழங்கப் படும் ஆரம்ப இடமாகும். எனவே, வாழ்பவர்கள் ஏதேனும் நன்மைகள் செய்து அதை நமக்கு அன்பளிப்பு செய்யமாட்டார்களா? என்று எதிர்ப்பார்ப்பார்கள்.

### மூன்று நல்லறங்கள்

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய மூன்று செயல்களை தவிர மற்ற அனைத்தும் நின்று விடுகின்றன.
1. நிலையான அறக் கொடை
2. பயன்பெறப்படும் கல்வி.
3. அவனுக்காகப் பிரார்த்திக்கும் (அவனுடைய) நல்லபிள்ளை"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் 3358, அபூதாவூத் 2494, திர்மிதீ 1297, நஸாயீ 3591, முஸ்னது அஹ்மத் 8489)

கண்மணி பெருமானார் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : “இறை நம்பிக்கையாளர் இறந்த பின்பும் அவரை சென்றடையும் நல்லறங்களுள் பின்வருபவையும் அடங்கும். 1. அவர் [பிறருக்குக்] கற்பித்துப் பரப்பிய கல்வி. 2. அவர் விட்டுச் சென்ற நல்ல பிள்ளை. 3. அவர் விட்டுச் சென்ற [நல்ல] நூல் [அல்லது குர்ஆன்] 4. அவர் கட்டிய பள்ளிவாசல் அல்லது அவர் எழுப்பிய பயணியர் விடுதி, அல்லது அவர் வெட்டிய ஆறு, அல்லது அவர் ஆரோக்கியத்தோடு வாழ்ந்த காலத்தில் தம் பொருளிலிருந்து செய்த தர்மம் ஆகியவையே அவை.”

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : இப்னுமாஜா - 238, இப்னு குஸைமா - 2490, ஷுஅபுல் ஈமான் லில்பைஹக்கி)

ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய நல்லறங்கள் அதாவது அவற்றுக்கு கிடைக்கும் நன்மைகள் அதோடு நின்று விடும். இனி அவற்றுக்குப் புதிதாக நன்மைகள் கிடைக்காது. ஆனால், அவன் உயிர் வாழும் போது செய்த மூன்று நல்லறங்களுக்கான நன்மைகள் மட்டும் அவன் இறந்த பின்னரும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும்.

1.தொடர்ந்து நடக்கும் நல்லறம் என்பது நீண்ட காலம் நிலைத்து நின்று பயனளிக்கும் அறத்தைக் குறிக்கும். அதாவது (வக்ஃப் எனும்) அறக்கொடை. உதாரணமாக : பள்ளிவாசல், கல்வி நிலையம், மருத்துவமனை, மக்கள் தங்கும் விடுதி, தண்ணீர் தொட்டி போன்றவை கட்டுதல், மேலும் ஆறு வெட்டுதல், கிணறு வெட்டுதல், சாலையின் இரு மருங்கிலும் மரம் நடுதல், மார்க்கக் கல்வி கூடத்திற்கு பள்ளிவாசலுக்கு குர்ஆன் மற்றும் பயன்பெறும் வகையிலான நூல்களை வாங்கி அன்பளிப்பு செய்தல். இது போன்ற அறக்கொடைகள் செயல்பட்டு வரும் வரை அதற்கான நன்மை உருவாக்கியவருக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவரது மறைவுக்குப் பின்னும் நன்மை தொடரும். அவற்றை உருவாக்கியவர் அவர்தாம் என்பதே காரணம்.

2. மக்களுக்கு பயனளிக்கும் கல்வி. அதாவது, ஒரு கல்வியாளர் அவர் உயிர் வாழும்போது பல மாணவர்களுக்கு கல்வி போதித்துள்ளார். அவர்களால் அந்த கல்விச் சேவை தொடர்கிறது. அல்லது அவர் நூல்கள் எழுதினார். அவற்றை மக்கள் வாசித்துப் பயனடைந்து வருகின்றனர். இதன் நன்மையும் அந்த கல்வியாளருக்கு தொடர்ந்துகிடைக்கும்.

3. அவருக்காக இறைவனிடம் பிரார்த்திக்கும் நல்ல பிள்ளை. அவனைப் பெற்றெடுத்து ஆளாக்கியவர் அவர்தாம் என்ப

தால், அந்தப் பிள்ளையின் பிரார்த்தனையின் பலன் அவருக்கு கிடைத்துக் கொண்டே இருக்கும். (நூல் : அல்மின்ஹாஜ், தக்மிலா)

மனித வாழ்க்கை மிகவும் குறுகிய காலமே. குறிப்பிட்ட காலம் மட்டும் வாழ்ந்திடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள மனிதனுக்கு நீண்ட காலம் வாழ்ந்தால் எவ்வளவு நன்மை கிடைக்குமோ அவ்வளவு நன்மைகளை பெற்றிட அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான்.

ஒருவர் உயிருடன் வாழ்ந்த காலங்களில் அவர் செய்த நன்மைகளின் பலாபலன்கள் அவர் மரணித்த பின்னரும் தொடர்வதால் அவர் இறந்தும் வாழ்கிறார். அவருடைய உடலின் எந்தப் பகுதியும் மிஞ்சாது போதிலும் அவரின் அறங்களால் அவர் அழியாமல் இருக்கிறார்.

## தொழுகலாம்

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, "நாயகமே! என்னுடைய பெற்றோர் உயிரோடு இருந்தபோது அவர்களுக்கு நான் நல்ல முறையில் பணிவிடை செய்து வந்தேன். இப்போது அவர்கள் இறந்து விட்டனர். இனியும் அவர்களுக்கான நற்சேவை செய்ய நான் ஆசைப்படுகிறேன். அதற்கான வழி என்ன? என்று வினவினார்.

அண்ணலார், "நீர் உமக்காகத் தொழுவதுடன் அவர்களுக்காகவும் (உபரியாக) தொழுவீராக! நீர் உமக்காக உமது நோன்பு நோற்பதுடன் அவர்களுக்காகவும் (உபரியாக) நோன்பு நோற்பீராக! நீர் உமக்காக தர்மம் செய்வதுடன் அவர்களுக்காகவும் (உபரியாக) நீர் தர்மம் செய்வீராக! இது பணிவிடைக்குப் பின்னர் செய்யப்படக்கூடிய நற்காரியங்களில் மிகச் சிறந்ததாகும்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹஜ்ஜாஜ் பின் தீனார் (ரளி) அவர்கள் (நூல் : இப்னு அபீஷைபா, தாரகுத்னீ)

(பர்ளு எனும்) கட்டாயக் கடமைகளைத் தவிர்த்து (நபில் எனும்) உபரியான நற்காரியங்கள் யாவற்றையும் இறந்தவருக்காக செய்யலாம். அதன் பலன் அவர்களுக்கு உண்டு.

## நோன்பு நோற்கலாம்

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு பெண் கடலில் பயணித்தார். அப்போது அவர் வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ், பாதுகாப்பாக தம்மை கரை சேர்த்தால், ஒரு மாதம் நோன்பு நோற்பேன்" என்று நேர்ச்சை செய்தார். வல்லமையும், மாண்பும் மிக்க அல்லாஹ் அவரை பாதுகாப்பாக கரை சேர்த்தான். ஆனால் அப்பெண் நோன்பு நோற்காமல் இறந்து விட்டார்.

அப்போது அவருடைய உறவுக்காரப் பெண் ஒருவர்

(அவருடைய மகள், அல்லது சகோதரி) அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நடந்ததை எடுத்துரைத்தார். அண்ணலார் "அவர் சார்பாக நீ நோன்பு வை" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்னது அஹ்மத் 1764)

இறந்துபோனவர் தவற விட்ட நேர்ச்சை அல்லது கடமை யான நோன்பை அவருக்காக அவருடைய உறவினர் யாரும் நோன்பு நோற்றால் ஹஜ் போலவே நோன்பும் செல்லும் (இறந்தவருக்கு பலன் தரும்) என தெரிகிறது

நூல் : ஹாஷியத்துஸ் ஸிந்தீ

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு பெண்மணி கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, நாயகமே! ஒரு மாத நோன்பு கடமையாக இருந்த நிலையில் என் தாயார் இறந்துவிட்டார். அதை அவர் சார்பாக நான் நிறைவேற்றலாமா? (அதன் நற்பலன் அவருக்கு கிடைக்குமா?) என்று வினவினார். அதற்கு அண்ணலார், "உன் தாயார் மீது கடன் ஏதும் இருந் தால் (அவர் சார்பாக) அதை நீ நிறைவேற்றுவாய் தானே? என்று கேட்டார்கள். அதற்கு அப்பெண்மணி, "ஆம்" என்றார். அண்ணலார், அவ்வாறாயின், நிறைவேற்றப்படுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தது வல்லமையும், மாண்பும் மிக்க அல்லாஹ்வின் கடனே" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்னது அஹ்மத் - 1901)

## தானதர்மம் செய்யலாம்


ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு மனிதர் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களிடம் என் தந்தை சொத்துக்களை விட்டு விட்டு இறந்து போனார். அவர் இறுதி விருப்பம் எதுவும் தெரிவிக்கவு மில்லை. இந்நிலையில் அவருக் காக நான் தர்மம் செய்தால் அவ ருக்கு அது பரிகாரம் ஆகுமா?" என்று கேட்டார். அதற்கு அண்ண லார் "ஆம்" என்றார்கள்.

(நூல் : முஸ்லிம் - 3355, நஸாயீ - 3592)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உங் களில் ஒருவர் தான தர்மங்கள் செய்து அதன் நன்மைகள் தங் களுடைய பெற்றோருக்கு கிடைக்க வேண்டும் என்று எண் ணினால் அந்த நன்மைகள் அவர்களுக்கும் கிடைத்து விடும். (அல்லாஹ்வின் கிருபையால்) அவருடைய நன்மையிலும் குறைவு ஏற்படாது"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் நூல் : தப்ரானீ

இறந்துவிட்ட பெற்றோரின் சொத்தை அனுபவிக்கும்


கும்பகோணம்
சீமாட்டி
சில்க்ஸ் - ரெடிமேட்ஸ்

பிள்ளைகள் அதிலிருந்து தானும் அனுபவித்து கொண்டு, மண் ணறையில் வாழும் தம்முடைய பெற்றோருக்கும் நன்மைகள் கிடைக்கும் வகையில் தான தர்மங்கள் செய்ய வேண்டும். இதுவே, நன்றியுள்ளவர்களின் பண்பாகும்.

## குர்பானி கொடுக்கலாம்

ஹள்ரத் ஹனஷ் பின் அல்முஅதமிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் இரு செம்மறி யாட்டு கடாக்களை குர்பானி கொடுத்து வந்தார்கள். அவற்றில் ஒன்றை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சார்பாகவும் மற்றொன்றை தம் சார்பாகவும் குர்பானி கொடுத்தார்கள். இது குறித்து அவர்களிடம் (விளக்கம்) கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தான் இவ்வாறு எனக்கு உத்தர விட்டார்கள். இதை நான் ஒரு போதும் கைவிட மாட்டேன் என்று பதிலளித்தார்கள்.

(நூல் : அபூதாவூத் - 2792, திர்மிதீ - 1415 )

அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (இறந்துவிட்ட) தங்களது சகோதரர் ஹள்ரத் அப்துர் ரஹ்மான் (ரளி) அவர் களுக்காக இஃதிகாஃப் இருந் துள்ளார்கள். மேலும் அன்னை யவர்கள் தங்களது சகோதரருக்காக அடிமையை உரிமையும் விட்டிருக்கிறார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் யஹ்யா பின் சயீத் (ரஹ்) அவர்கள் (நூல் : அல்முவத்தா மாலிக், தஃப்சீர் குர்துபீ அந்நஜ்மு வசனம் - 39)

அல்ஆஸ் என்பவர் அறி யாமை காலத்தில் நூறு ஒட்டகங் களை அறுத்து குர்பானி கொடுப்பேன் என்று நேர்ச்சை செய்திருந்தார். அவருடைய மகனார் ஹிஷாம் என்பவர் அவருடைய பங்கில் ஐம்பது ஒட்டகங்களை அறுத்து குர்பானி கொடுத்தார். இதுபற்றி அவ ருடைய மற்றொரு மகனான ஹள்ரத் அம்ரு (ரளி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களிடம் வினவினார். அண்ணலார், உமது தந்தை இறை நம்பிக்கை யாளராக இறந்திருப்பாராயின், அவருக்காக நீர் நோன்பு நோற் றாலும், தர்மம் செய்தாலும் அது அவருக்கு பலன் தரும் என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ருபின் அல்ஆஸ் (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத்)

## திருகுர்ஆன் ஓதலாம்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**“உங்களில் ஒருவர் மரணம் அடைந்து விட்டால் அவரை நல்**

லடக்கம் செய்வதில் காலதாமதம் செய்யாதீர்கள். நல்லடக்கம் செய்வதை விரைவுபடுத்திக் கொள்ளுங்கள். [நல்லடக்கம் செய்தபின்] அவருடைய தலை மாட்டில் அல்பகரா அத்தியாயத் தின் ஆரம்பத்தில் வசனங்களை ஓதிக் கொள்ளுங்கள். கால் மாட்டில் அல்பகரா அத்தியாயத் தின் இறுதி வசனங்களை ஓதிக் கொள்ளுங்கள்.''

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ, ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ, மிஷ்காத் பக்கம் - 149)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

உங்களில் இறந்தோருக் காக யாஸீன் அத்தியாயத்தை ஓதிக் கொள்ளுங்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் மஅகில் பின் யசார் (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத் 3121)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

ஒருவர் மையவாடியில் நுழைந்துயாஸீன்அத்தியாயத்தை ஓதி அதன் நன்மைகளை அங் குள்ள மண்ணறைவாசிகளுக்கு அன்பளிப்பு செய்தால் அதன் மூலம் அந்த மண்ணறைவாசி களுக்கு வேதனைகள் இலேசாக்கப்படுகிறது. மேலும், இதை ஓதியவருக்கு அந்த மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை அளவு நன்மைகள் வழங்கப்படுகிறது.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : தப்ஸீர் குர்துபீ, மிர்காத், பிஹிஷ்திஜேவர்)

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

மண்ணறைகளை கடந்து செல்பவர் அங்கு பதினோரு தடவை குல்ஹுவல்லாஹு அஹத் (112வது) அத்தியாயத்தை ஓதி இறந்தவர்களுக்காக அதன் நன்மையை அன்பளிப்புச் செய்வா ரானால் (அன்பளிப்பு செய்த) அவருக்கு அந்த மண்ணறை யில் அடக்கம் செய்யப்பட்டி ருப்பவர்களின் எண்ணிக்கை அளவு நன்மைகள் வழங்கப்படும்.

(நூல் : கன்ஸுல் உம்மால்)

இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : நபித்தோழர் களில் பலரும், நான் மரணித்து என்னை நல்லடக்கம் செய்த பின்னர் எனது மண்ணறைக்கு அருகில் நின்று கொண்டு அல்குர்ஆனின் அல்பகரா அத்தியாயத்தை ஓதிக் கொள்ளுங் கள் என்று (வசிய்யத் எனும்) இறுதி விருப்பம் தெரிவித்துள்ளார் கள். அவர்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவர் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் ஆவர்.''

இமாம் ஷாஃபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "மதீனத்து

அன்சாரிகளில் யாராவது இறந்து விட்டால் அவர்கள் இறந்தவரின் மண்ணறைக்கு வரப் போக இருப் பார்கள். இறந்தவருக்கு நன்மை கள் கிடைக்க வேண்டும் என்று எண்ணி குர்ஆன் ஓதுவார்கள்.
(நூல் : கிதாபுர் ரூஹ் பக்கம் 14, ஷரஹுஸ் ஸுதுர் பாபுன் பீ கிராஅத்தில் குர்ஆனில் மய்யித்தி)

## நேர்த்திக்கடன் நிறைவேற்றலாம்

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறிய தாவது: "ஸஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களிடம் என் தாயார் மீது ஒரு நேர்த்திக்கடன் கடமையா யிருக்க (அதை நிறைவேற்றும் முன்பே) அவர் இறந்து போய் விட்டார். (என்ன செய்வது?" என்று விளக்கம் கேட்டார். அப் போது அண்ணலார், "அவர் சார்பாக நீங்கள் அந்த நேர்த்திக் கடனை நிறைவேற்றுங்கள்" என்றார்கள்.
நூல் : புகாரீ- 2761, முஸ்லிம் - 3367, அபூதாவூத்- 2876, திர்மிதீ -1466, இப்னுமாஜா- 2123 முஸ்னது அஹ்மத் -1795 முவத்தா மாலிக் -895

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : (உக்பா பின் ஆமிர் என்றழைக்கப்பட்ட) ஒரு மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "நாயகமே! என் சகோதரி ஹஜ் செய்வதாக நேர்ந்து கொண்டு (அதை நிறை வேற்றாமல்) இறந்து விட்டார்" என்றார். அதற்கு அண்ணலார், உன் சகோதரிக்கு கடன் இருந்தால் நீதானே அதை நிறைவேற்றுவாய்?" என்று கேட்டார்கள். அவர், "ஆம் (நான் தான் நிறைவேற்றுவேன்)" என்றார். அண்ணலார், "அல்லாஹ் வின் கடனை நிறைவேற்று. கடன் நிறைவேற்றப்பட அவனே அதிகம் உரிமை படைத்தவன்" என்றார்கள். (நூல் : புகாரீ 6699)

## இறுதி விருப்பம்

ஹள்ரத் ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ (ரளி) அவர்கள் கூறியாதாவது : "நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, என் தாய் தன் சார்பாக ஓர் அடிமை விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இறுதி விருப்பம் தெரிவித்தார்.

என்னிடம் "நூபியா நாட்டு அடிமைப் பெண் ஒருத்தி இருக் கிறாள். அவர் சார்பாக நான் அவளை விடுதலை செய்தால் அதுவே போதுமாகுமா?" என வினவினேன். அண்ணலார் "அவளை என்னிடம் அழைத்து வா என்று கூறினார்கள். ஆகவே நான் அவளை அண்ணலாரிடம் அழைத்துச் சென்றேன். அப்போது அவளிடம் அண்ணலார் "உன்னுடைய இறைவன் யார்?"

என்று கேட்டார்கள். "அல்லாஹ்" என்று பதிலளித்தாள். (பிறகு தம்மை குறித்து) "நான் யார்?" என்று கேட்டார்கள். "நீங்கள் அல்லாஹ்வின் தூதர்" என்று பதிலளித்தாள். அண்ணலார், "இவளை விடுதலை செய்து விடு. (அதுவே போதும்) ஏனென்றால், இவள் இறைநம்பிக்கை கொண்டவள்" என்று கூறினார்கள்."

(நூல் : நஸாயீ 3593)

பொருளாதாரம் சார்ந்த நேர்த்திக்கடன் ஒன்றை நேர்ந்து கொண்ட நிலையில் அதை நிறைவேற்றுவதற்கு முன்பே ஒருவர் இறந்துவிட்டால், அதற்கான செல்வத்தை விட்டு விட்டு அவர் போயிருந்தால் அவரது சொத்திலிருந்து அந்த நேர்த்திக்கடனை அவருடைய வாரிசுகள் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். பொருள் சாராத நேர்த்திக்கடன் என்றால் (நோன்பு, ஜகாத், ஹஜ், உம்ரா போன்றவை) அதை நிறைவேற்றுவது வாரிசுகள் மீது கடமையன்று.

அவ்வாறே பொருள் சார்ந்த நேர்த்திக்கடனாக இருந்து அதற்கு தேவையான சொத்தை அவர் விட்டு விட்டுச் செல்லவில்லையெனில், அப்போதும் அந்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுவது அவருடைய வாரிசுகள் மீது அவசியம் இல்லை. ஆயினும், அவ்வாறான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது விரும்பத்தக்கதாகும். பெரும்பான்மை அறிஞர்களின் கூற்று இதுவேயாகும்.

நூல் : துஹ்ஃபத்துல் அஹ்வதீ, அல்முஃக்னீ

## பிரார்த்திக்கலாம்

"எங்கள் இறைவா! எனக்கும், என் தாய் தந்தைக்கும், மற்ற நம்பிக்கையாளர்களுக்கும் கேள்விகணக்கு கேட்கும் [மறுமை] நாளில் மன்னிப்பளிப்பாயாக! [என்று பிரார்த்தித்தார்]"

- அல்குர்ஆன் (14 : 41)

"என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபொழுது [மிக்க அன்பாக] என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரிவாயாக! என்றும் நீங்கள் பிரார்த்தியுங்கள்"

- அல்குர்ஆன் (17 : 24)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் இறந்தவருக்காக தொழுத பின்னர் மனத்தூய்மையுடன் அவருக்காக பிரார்த்தியுங்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

நூல் : அபூதாவூத் 3199, இப்னுமாஜா, இப்னுஹிப்பான்

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உஹுத் போர் முடிந்து திரும்பிய போது, பாதையில் கொல்லப்பட்டு

கிடந்த முஸ்அப் பின் உமைர் (ரளி) அவர்களுக்கருகில் நடந்து சென்றார்கள். (அவர்களைக் கண்டதும்) அவர்களிடம் நின்று அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

(நூல் : தலாயிலுந் நுபுவ்வா இமாம் பைஹகீ, அல்பிதாயா வந்நிஹாயா)

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் (தம் இறுதி நாட்களில்) என்னுடன் தங்கியிருந்த ஒவ்வொரு இரவின் பிற்பகுதியிலும் (மதீனாவிலுள்ள பகீஉல் ஃகர்கத் பொது மையவாடிக்குச் செல்வார்கள். அங்கு சென்று, இறைவா! பகீஉல்ஃகர்கதில் உள்ளோருக்கு நீ மன்னிப்பாயாக என்று பிரார்த்திப்பார்கள்.

(நூல் : முஸ்லிம் 1773)

ஹள்ரத் உம்மு சல்மா (ரளி), ஹள்ரத் அபூசயீத் (ரளி), ஹள்ரத் அபூஹுரைரா (ரளி), ஹள்ரத் இப்னு உமர் (ரளி) ஆகியோர் கூறியதாவது : ஃபாத்திமா (ரளி) அவர்கள் உஹுத் போரில் கொல்லப்பட்டோரின் அடக்கத்தலத்திற்குச் சென்று அவர்களுக்காக அழுது பிரார்த்தனை செய்வார்கள்.

(நூல்: மஃகாஸீ, அல்பிதாயா வந்நிஹாயா)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள், மரணமடைந்த ஒரு நபித்தோழரை நல்லடக்கம் செய்த பின்னர் அவருடைய மண்ணறைக்கு அருகில் போய் நின்றுகொண்டு, "உங்களுடைய சகோதரரின் பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக இறைவனிடம் பிரார்த்தியுங்கள். மேலும், (நன்மைகள், கலிமா தய்யிபாவின் மீது) உறுதி நிலைப்பாட்டுக்காகவும் பிரார்த்தியுங்கள். இதோ இப்போது அவர் கேள்வி கேட்கப் படுகின்றார்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் உஸ்மான் பின் அப்பான் (ரளி) அவர்கள்
(நூல்: அபூதாவூத் -3221, ஹாகிம்)

நல்லடக்கத்தில் கலந்து கொண்டவர்கள் அந்த மரணித்தவருக்காக, "இறைவா! இவருக்கு மண்ணறை விசாரணையின் போது தூய திருக்கலிமாவை தடையின்றி தயக்கமின்றி கூறுகின்ற சக்தியையும், உறுதியையும் கொடுப்பாயாக! மேலும், இவரின் பாவங்களை மன்னித்து இவருக்கு நல்வாழ்க்கை நல்குவாயாக!" என்று (நமக்கு தெரிந்த மொழியில்) பிரார்த்திக்க வேண்டும் என்பதே இந்த நபிமொழியின் கருத்து.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"மரணித்து மண்ணறையில் இருப்பவர் (கடலில்) தத்தளித்து கொண்டு (யாரேனும் வந்து காப்பாற்ற மாட்டார்களா? என்ற எண்ணத்தில்) அபயம்

# பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டடம் உருவாகிட அள்ளித் தாருங்களேன்!

**"யார் ஒருவர் அல்லாஹ்வின் வீட்டை கட்டுகிறாரோ அவருக்கு சுவனத்தில் அல்லாஹ் ஒரு மாளிகையைத் தருவான்"**
**– நபி (ஸல்) அவர்கள்**

கண்ணியமிகு சகோதர சகோதரிகளுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் ஏரியா "தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்" முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தை பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை 25 லட்சத்திற்கு பேசி, 10 லட்சம் ரூபாயை அட்வான்ஸாக கொடுத்து, மீதி பணத்தை ஆறு மாதத்தில் செலுத்து வதாக அக்ரீமெண்ட் போட்டுள்ளோம். பள்ளிக்காக கீழ்தளம் மற்றும் மூன்று மாடி கட்டுவதற்கு 35 லட்சம் ஆகிறது. மஹல்லாவாசிகளும், ஸ்கூல் படிப்புடன் உள்ள **அல் மதரஸத்துல் நூரிய்யா** ஹிஃப்ழு மதரஸா மாணவர்களும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இந்தப் பள்ளிவாசல் மற்றும் மதரஸாவை இன்ஷா அல்லாஹ் உருவாக்கி வருகிறோம். இச்செய்தியை பார்க்கின்ற அத்துணை நல்லுள்ளம் படைத்தவர்களின் பணம், உழைப்பு, முயற்சி இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.' **குறிப்பாக உங்களின் துஆ கண்டிப்பாக இருக்க வேண்டும்.** இந்தப் பள்ளி கட்டுவதற்கு உங்களால் முடிந்த அதிகப்படியான உதவிகளை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயம் அதற்கு உண்டான கூலியை இவ்வுலகிலும், மறுமையிலும் தருவான். ஆமீன்.

**தொடர்புக்கு :** தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**
செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

பள்ளிவாசல் அக்கவுண்ட் நம்பர்

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
Bank : **Karur Vysya Bank**
A/C.No : **1289135000013292**
Branch : **Arumbakkam** Ifsc : **KVBL0001289**
Swift Code: **KVBLINBBIND** G.Pay : **9444273674**

தேடுபவரைப் போன்றவராவார். தந்தை அல்லது தாய் அல்லது சகோதரன் அல்லது நண்பன் ஆகியோரிடமிருந்து பிரார்த் தனையை எதிர்பார்க் கிறார். அவருக்காக அவர்கள் பிரார்த்தனை செய்துவிட்டால், அது அவருக்கு உலகமும் அதில் இருப்பவைகளை விடவும் மிக உவப்பானதாக இருக்கும். நிச்சய மாக அல்லாஹ் மண்ணறைவாசி கள் மீது பூமியில் உள்ளவர்களின் பிரார்த்தனையால் மலைகள் போன்றவைக[ளான அருள் வளங்க]ளை வழங்குகிறான். மரணித்தவர்களுக்கு உயிர் வாழ்பவர்கள் கொடுக்கும் காணிக்கை என்பது அவர்களுக் காக பிழைபொறுக்க தேடுவ தாகும்.''

அறிவிப்பாளர்: ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் (நூல்: ஷுஅபுல் ஈமான் லில்பைஹகீ, மிஷ்காத் பக்கம் - 206)

ஹள்ரத் அபூ உசைத் (ரளி) அவர்கள் கூறியதாவது: "அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் நாங்கள் இருந்தபோது, பனூ ஸலமா கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து, "நாயகமே! என் பெற்றோர் இறந்த பின் அவ்விரு வருக்கும் நான் நன்மை செய்வதற்கு வேறு ஏதேனும் கடமைகள் உண்டா?" என்று வினவினார். அண்ணலார், "ஆம்! அவ்விருவருக்காகவும் நீ பிரார்த்தனை செய்வது, அவ் விருவருக்காகவும் நீர் மன்னிப்புக் கோருவது" என்று கூறினார்கள்.

(நூல்: அபூதாவூத் - 5142, இப்னு மாஜா, முஸ்னத் அஹ்மத், ரியாளுஸ்ஸாலிஹீன்-343)

ஹள்ரத் சயீத் பின் ஸுபைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஓர் இறை நம்பிக்கையாளர் சொர்க்கத்தில் நுழைந்ததும் தன்னுடைய தந்தை, மகன், சகோதரன் ஆகியோர் எங்கே? என்று விசாரிப்பார். அதற்கு, "நல்லறங்கள் புரிவதில் உனது படித்தரத்தை அவர்கள் எட்ட வில்லை" என்று பதில் கூறப்படும். அப்போது அந்த இறை நம்பிக்கையாளர், "நான் செய்த நல்லறங்கள் எனக்கும் அவர் களுக்கும் சேர்த்துத்தான்" என்பார். பின்னர் அந்த உறவினர்கள் தகுதியில் அவருடன் சேர்க்கப் படுவர். பிறகு அன்னார் இந்த (40:8) வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

(நூல்: தப்ஃசீர் இப்னு கஸீர்

இறந்தவரின் குடும்பத்தினர் அதிலும் குறிப்பாக அவருடைய பிள்ளைகள் இறைவனிடம் பிரார்த்திப்பதே சாலச்சிறந்தது. அவ்வாறு பிள்ளைகளை நாம் இஸ்லாமிய ஒழுக்கப் பயிற்சி கொடுத்து வளர்க்க வேண்டும். அப்போதுதான், நாம் மரணித்தால் நமது பிள்ளைகள் நமக்காக இறைவனிடம் பாவமன்னிப்பு தேடுவார்கள்.

நமது பெற்றோர் மற்றும் முன்னோருக்காக நற்காரியங்கள் செய்வதை நமது பிள்ளைகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அல்லது அந்த நற்காரியங்களை அவர்கள் பார்க்கும் விதமாக செய்ய வேண்டும். இது ஒருவகையான பயிற்சியே!

தினந்தோறும் நாம் காலையில் தஹஜ்ஜுத் தொழுகை அல்லது ஃபஜ்ரு தொழுகை முடித்துவிட்டு பிரார்த்திக்கும் போது, "இறைவா! இன்றைய நாள் முழுவதும் நான் செய்யும் நல்லறங்களின் நன்மைகளை என்னுடைய பெற்றோருக்கும் மரணித்துவிட்ட இன்னார் இன்னாருக்கும் கொடுப்பாயாக!" என்று பிரார்த்திக்கலாம்.

பிறர் செய்கின்ற பிரார்த்தனை மற்றவருக்கு பயனளிக்கும் என்று கூறுவதன் கருத்தாவது, பிறருடைய நற்செயல்களும் பயனளிக்கும் என்பதன் சுருக்கமாகும்.

## அறக்கொடை

ஹள்ரத் சஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் கூறியதாவது : "என்னுடைய தாய் இறந்துவிட்டார். (எனவே நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன்) "நாயகமே! என் தாயார் இறந்து விட்டார். அவர் சார்பாக நான் தர்மம் செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கு அண்ணலார், "ஆம் (தர்மம் செய்யலாம்)" என்று பதிலளித்தார்கள். "எந்தத் தர்மம் மிகச் சிறந்தது?" என்று கேட்டேன். அதற்கு அண்ணலார், "குடிநீர் வழங்குதல்" என்று கூறினார்கள். எனவேதான் மதீனாவில் காணப்படுகின்ற 'சஅத் நீர்த்தடாகம்' உண்டானது.

(நூல்: நஸாயீ - 3606)

குடிநீர் வழங்குவதற்காக ஹள்ரத் சஅத் பின் உபாதா (ரளி) அவர்கள் மதீனாவில் ஒரு கிணறு தோண்டினார்கள். அப்போது மதீனாவில் தண்ணீர் இல்லாத பஞ்ச காலமாக இருந்தது. அந்தக்கிணற்றைத் தோண்டி, இது சஅத்தின் தாயாருக்காக (வக்ஃப் செய்யப்பட்டது) என்று கூறினார்கள்.

மரணமடைந்தவரின் சார்பாக வக்ஃப் செய்வதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பெரிதும் விரும்பியுள்ளார்கள். ஏனெனில், அதற்கான நன்மை தொடர்ந்து அவருக்கு கிடைத்துக் கொண்டே இருக்கும். அண்ணலாரின் காலத்திலேயே அது செயல்படுத்தப்பட்டது.

அங்கத் தூய்மை செய்ய தண்ணீர் வசதி செய்து கொடுத்தல், கிணறு பம்ப் செட், தண்ணீர் தொட்டி, தண்ணீர் குழாய் அமைத்தல் மற்றும் மதரசா, பள்ளிவாசல், கல்வி நிலையம், மருத்துவமனை என நிலையான தர்மங்களை அமைத்து இறந்தவர்களின் சார்பில் வக்ஃப் செய்யலாம்.

உலகம் முழுக்க இருக்கும் பல வக்ஃப் சொத்துகள் இவ்வாறு தான் உருவானது.

## கடன் அடைத்தல்

ஹள்ரத்சஅத்பின்அல்அத்வல் (ரளி) அவர்கள் கூறியதாவது. முன்னூறு வெள்ளிக் காசுகளை விட்டுவிட்டு என்னுடைய சகோதரர் இறந்துவிட்டார். அவருக்கு ஒரு குடும்பம் இருந்தது. எனவே, நான் அவற்றை அவருடைய குடும்பத்தாருக்கு செலவழிக்க நாடினேன்.

அப்போது அருமை நாயகம் (ஸல்) அவர்கள், "உம்முடைய சகோதரர் கடனால் (சொர்க்கத்திற்குள் நுழைய முடியாமல்) தடுக்கப்பட்டுள்ளார். எனவே, அவருடையகடனைநிறைவேற்றுவாயாக!" என்று கூறினார்கள்.

அப்போது நான், "நாயகமே! ஒரு பெண் கேட்ட இரண்டு தங்கக் காசுகளைத் தவிர அவருடைய எல்லாக் கடனையும் நான் நிறைவேற்றிவிட்டேன். அப்பெண்ணிடம் அதற்கான ஆதாரம் இல்லை" என்று கூறினேன். அதற்கு நபியவர்கள், "அப்பெண்ணுக்கு (அவருடைய கடனைக்) கொடுத்து விடு! அவள் உண்மையே கூறுகிறாள்" என்றார்கள். (நூல் : இப்னுமாஜா - 2424, முஸ்னது அஹ்மத் - 16593, பைஹகீ)

ஒருவர் கடனாளியாக இறந்து விட்டார். அவர்மீது இரக்கம் கொண்ட மற்றொருவர் அந்த கடனை அடைக்கும்போது, அதன்மூலம் இறந்தவருக்கு நிம்மதி கிடைக்கிறது என்கிறது இந்த நபிமொழி. உயிர் வாழ்பவர்கள் செய்யும் நற்காரியங்களால், இறந்தவர்கள் நிம்மதி பெறுகிறார்கள்.

## பூமிக்கு மேல் இருப்பவர்களுக்கும்...

ஒருவர் நற்காரியங்கள் செய்து அதன் நன்மைகளை இறந்தவர்களுக்கு மட்டுமல்ல, இருப்பவர்களுக்கும் (அதாவது தற்போது வாழ்பவர்களுக்கும்) அன்பளிப்பு செய்யலாம். உதாரணமாக: எளியோருக்கு உணவளித்து விட்டு, "இறைவா! இதன் நன்மைகளை உலகத்தில் வாழும் என் பெற்றோருக்கும், உடன்பிறப்புகளுக்கும், மனைவி மக்களுக்கும் வழங்குவாயாக!" என்றும் பிரார்த்திக்கலாம். அதன் நன்மைகள் இவர்களுக்கும் கிடைக்கும். தர்மம் செய்தவருக்கும் கிடைக்கும்.

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : ஒரு பெண்மணி தன் குழந்தையை உயர்த்திக் காட்டி, "அல்லாஹ்வின் தூதரே! இவனுக்கு ஹஜ் உண்டா?" என்று கேட்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "ஆம்; (அதற்காக) உனக்கும் நற்பலன் உண்டு" என்று விடையளித்தார்கள்.

(நூல்: முஸ்லிம்-2597)

ஹள்ரத் ஃபள்ல் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறிய தாவது : "கஸ்அம் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம், "என் தந்தை முதியவராக உள்ளார். இந்நிலையில், அவருக்கு அல்லாஹ் விதியாக்கிய ஹஜ் கடமை ஏற்பட்டுள்ளது. அவரால் தமது ஒட்டகத்தின் முதுகில் அமர இயலாது" என்றார். அதற்கு அண்ணலார், "அவர் சார்பாக நீ ஹஜ் செய்யலாம்" என்றார்கள்.

(நூல் : புகாரீ-1853,
முஸ்லிம் - 2595)

ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : (நோன்பு நோற்க இயலாத) முதிய வயோதிகர்களுக்கு ஒவ்வொரு நோன்பிற்கும் பகரமாக ஒரு ஏழைக்கு சஹர் மற்றும் இஃப்தார் உணவு உண்ணக் கொடுக்க வேண்டும். அவர்கள் அந்த நோன்புகளை நோற்க வேண்டியது இல்லை என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களால் சலுகை அளிக்கப்பட்டது.

(நூல்: தாரகுத்னீ, ஹாக்கிம்,
புலூகுல் மராம் - 695)

ஒருவருக்கு ஹஜ்ஜுக்கு செல்ல முடியாத அளவுக்கு உடல் ரீதியான இயலாமை இருக்குமேயானால் அவருக்காக மற்றவர் செய்யும் ஹஜ் "பத்லி ஹஜ்" எனப்படும். நான் இன்னாருக்காக "பத்லி ஹஜ்" செய்கிறேன் என்று மனதில் நினைத்து செய்து கொண்டால் போதும். (ஹஜ் செய்ய இயலாதவருக்கு ஹஜ் செய்த நற்கூலி வழங்க அல்லாஹ் போதுமானவன்.) ஆனால், பத்லி ஹஜ் செய்யக்கூடியவர் அதற்கு முன் தன்மீது கடமையாக உள்ள ஃபர்ளான ஹஜ்ஜை நிறைவேற்றியவராக இருப்பது சிறந்தது என்கிறார்கள் மார்க்க அறிஞர்கள்.

பருவ வயதை அடையாத சிறுவ சிறுமியர்கள் தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற நற்காரியங்கள் எதைச் செய்தாலும், அது செல்லும். அதற்கான நன்மைகள் அந்த சிறு பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் கிடைக்கும் என்கின்றனர் மார்க்க அறிஞர்கள்.

கடும் வியாதிக்காரர். அவர் இனி நோன்பு நோற்றால் உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் இருப்பவர், இனி எப்போதும் நோன்பு நோற்க சக்தி பெறாத வயோதிகர் ஆகியோர் நோன்பு நோற்க தேவையில்லை. ஆனால், ஒவ்வொரு நோன்பிற்கும் பகரமாக ஃபித்யா எனும் நஷ்ட ஈடு கொடுப்பது அவசியம்.

இந்நிலையில் உள்ள பெற்றோருக்கு அவர்களுடைய பிள்ளைகள் நோன்பிற்குரிய நஷ்ட ஈட்டை அவர்கள் சார்பாக வழங்கிவிட்டால், அந்த பெற்றோருக்கு நோன்பு நோற்ற நன்மைகளை அல்லாஹ் தர போதுமானவன்.

## வீண் வாதம்

**"மனிதனுக்கு அவன் செய்த செயலைத் தவிர வேறொன்றும் இல்லை."**

- அல்குர்ஆன் (53 : 39)

மேற்காணும் திருவசனத்தைக் காட்டி இறந்தோருக்காக மற்றவர்கள் செய்யும் நற்காரியங்களின் பலன் அவரைச் சென்றடையாது என சிலர் வாதிடுகின்றனர்.

பேரறிஞர் இமாம் இப்னு கய்யிம் (ரஹ்) அவர்கள் மேற்காணும் திருவசனத்திற்கு விளக்கமளிக்கிறார்கள். ஒருவருடைய முயற்சியால் உருவாக்கப்பட்ட அனைத்தும் அவருக்கு சொந்தமானவையாகும். அதன் உரிமையை மற்றவர் யாரும் சொந்தம் கொண்டாட முடியாது என்ற உண்மையை இத்திருவசனம் மூடி மறைக்கவில்லை. இதை யாராலும் மறுக்கவும் முடியாது. ஆனால் தனக்குச் சொந்தமான எப்பொருளையும் மனிதன் பிறருக்கு அன்பளிப்பாக வழங்கலாம். அல்லது அதன் பயனை அடைந்து கொள்ள அனுமதிக்கலாம். அல்லது அனுமதிக்காமலும் இருக்கலாம். இது பொருளுடையவனின் உரிமையாகும். இவ்வுரிமையில் இத்திருவசனம் தலையிட்டு மறுத்துக் கூறவில்லை. ஆகையால் பிறருக்கு நன்மைகளை அன்பளிப்பாக வழங்குவதும் கூடாது என்பதற்கு இத்திருவசனத்தை எவ்வாறு ஆதாரம் காட்ட முடியும்?

(நூல் : அர்ரூஹ்)

மேலும் இமாம் அவர்கள் விளக்குகிறார்கள் : தன்னுடைய தந்தை பெரிய மார்க்க அறிஞராக இருக்கின்றார். தம் சகோதரர் சமுதாயத் தலைவராக இருக்கின்றார். (ஷைக் எனும்) குரு கரம் பிடித்து இரட்சிப்பார். இவர்களெல்லாம் மறுமை நாளில் நம்மை காப்பாற்றுவார்கள் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டு எவ்வித நற்செயல்களையும் செய்யாமல் நம்மிலே சிலர் தங்களது பொன்னான வாய்ப்புகளை தவற விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் போன்றோரின் வீணான செயல்களை இத்திருவசனம் இடித்துரைத்து கூறுகிறது. (இத்திருவசனம் ஈஸால் ஸவாப்'க்கு எதிரானது அல்ல.)

(நூல்: தவ்ளீஹ் அல்அஹ்காம்)

பேரறிஞர் இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் மேற்காணும் திருவசனத்திற்கு விளக்கமளிக்கிறார்கள். "ஒருவருக்காக மற்றவர் நற்காரியம் செய்கிறார் என்றால், அவர் உயிரோடு இருக்கும்போது செய்த முயற்சி தான் அதற்குத் தூண்டுகோலாக இருக்கும். எனவே, இந்த வசனத்திற்குள் இதுவும் அடங்கியது தான் என்றும் விளக்கம் அளிக்க

லாம். அல்லது மற்றவர் இவருக்கு வழங்கும் சன்மானமாக இதை எடுத்துக்கொள்ளலாம்."

(நூல் : அல்மின்ஹாஜ், தக்மிலா)

பேரறிஞர் இமாம் தஹாவீ (ரஹ்) அவர்கள், தலைப்பில் காணும் திருவசனத்தையும் முஸ்லிம் நூலில் (3358) வரும் நபிமொழியையும் சுட்டிக்காட்டி, "உயிருள்ளவர்கள் கேட்கின்ற பிரார்த்தனைகளிலும், வழங்குகின்ற தர்மங்களிலும் இறந்தவர்களுக்கும் பயன் உண்டு" கூறுகிறார்கள். நூல்:- அல்அகீதத்துத் தஹாவிய்யா

## விரும்பத்தக்க காரியமே!

இறந்தவருக்கு (ஈஸால் ஸவாப் செய்தல் எனும்) பாத்திஹா ஓதுவது (ஃபர்ளு எனும்) நிர்பந்த மான காரியமன்று. மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட (முஸ்தஹப் எனும்) விரும்பத்தக்க காரிய மாகும். ஆனால், இக்காரியங்கள் முகஸ்துதிக்காகவும், பெருமைக் காகவும் செய்யலாகாது. இதில் தேவையில்லாத ஆடம்பரம் கூடாது. கடன்பட்டோ அல்லது வட்டிக்கு வாங்கியோ செய்தே தீரவேண்டும் என்று எண்ணலா காது. வருவாய்க்குத் தக்க செல விற்குள் செய்து முடிப்பதே சாலச்சிறந்தது.

ஒரு நற்காரியம் செய்து அதன் நன்மையை இறந்தவ ருக்கு அர்ப்பணிப்பதற்கு மார்க்கம் ஒரு குறிப்பிட்ட வழிமுறை குறிப்பிடவில்லை. ஒரு நற்காரியத்தை செய்த பிறகு, "இறைவா! இதன் நன்மையை இன்னாருக்கு கொடுத்து விடு!" மனதளவில் அல்லது நாவில் சொல்லி கொண்டாலே போதுமானது.

இறந்தவர்களுக்கு ஒரு நன்மையை அர்ப்பணிப்பதற்கு அதில் வேறொரு நற்செயலை சேர்க்க வேண்டியது அவசிய மில்லை. உதாரணமாக: உணவு தானத்தின் நன்மை, ஃபாத்திஹா ஓதினால்தான் போய் சேரும் என்று எண்ணுவது அறியாமை.

இறந்தவர்களுக்காக எப்போது வேண்டுமானாலும் உணவு தானம் வழங்கலாம். ஃபாத்திஹா ஓதிதான் உணவு தானம் வழங்க வேண்டும் என்பது நிபந்தனையல்ல. ஃபாத்திஹா ஓதுதல் என்பது ஒரு நற்காரியம். உணவு தானம் என்பது வேறொரு நற்காரியம். இவை இரண்டையும் ஒன்றிணைத்துதான் செய்ய வேண்டும் என்பதல்ல. தனித்தனியாகவும் செய்யலாம்.

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

இறந்தவர்களுக்கு நன்மைகளை அர்ப்பணம் (ஈஸால் ஸவாப்) செய்வதற்கு நேரம் காலம் நிபந்தனையல்ல. மூன்றாம் நாள் அல்லது ஏழாம் நாள் அல்லது நாற்பதாவது நாள் ஆகிய நாட்களில் தான் ஃபாத்திஹா ஓதவேண்டும். மற்ற நாட்களில் ஓதுவது அவ்வளவு சிறப்பல்ல என்று எண்ணுவதும் அறியாமையே! எப்போது வேண்டுமானாலும் ஓதலாம். அதன் நன்மை இறந்தவர்களுக்கு நிச்சயமாக போய்சேரும்.

நாம் நமது செல்வத்தை ஒருவருக்கு கொடுத்துவிட்டால், அவர் செல்வந்தராக ஆகி விடுகிறார். இதுபோன்றுதான் ஈஸால் ஸவாப் எனும் இறந்தோருக்கு செய்யும் நற்காரியங்கள். ஆனால், ஒரு வித்தியாசம் என்னவெனில், செல்வத்தை மற்றவருக்கு தந்தவர் ஒன்றும் இல்லாதவராக ஆகிவிடுகிறார். இதை பலருக்கு பங்கு வைத்தால் தலைக்கு கொஞ்சம் என்று கிடைக்கும். ஆனால் ஈஸால் ஸவாப் அப்படியல்ல. எத்தனைப் பேருக்கு தந்தாலும் முன்னவர்க்கு கிடைத்த அளவே கிடைக்கும். இதில் ஈஸால் ஸவாப் செய்தவருக்கும் முழுமையாய் கிடைக்கும்.

எப்படியெனில், ஒருவர் சிலருக்கு குர்ஆனை கற்றுத் தந்தார் எனில், அவர் யார் யாருக்கு குர்ஆனைகற்பித்தாரோ, அவர்கள் அனைவரும் குர்ஆன் கற்றவர்களாகிவிட்டார்கள். இதனால் கற்பித்தவர் குர்ஆனை இழந்தா போய்விட்டார்? இல்லையே. மாறாக அவரும், அதனை கற்கவேண்டியவரும் கற்றுத் தெளிந்தவராகி விடுகின்றனர்.

(நபில் எனும்) உபரியாக தொழுகுதல், நோன்பு நோற்றல், தர்மம் செய்தல், ஹஜ் - உம்ரா செய்தல், குர்பானி கொடுத்தல், ஏழை எளியோருக்கு உணவளித்தல், குர்ஆன் ஓதுதல், பிழைப்பொறுக்கப் பிரார்த்தித்தல், (திக்ரு தஸ்பீஹ் எனும்) இறைதியானம் செய்தல், கடன் அடைத்தல் ஆகிய நற் காரியங்களை செய்தவருக்கும் யாருக்காக செய்யப்பட்டதோ அவர்களுக்கும் அதன் நற்கூலி கொஞ்சமும் குறைக்கப்படாமல் விசாலமாக அல்லாஹுத்தஆலா வாரி வழங்கப் போதுமானவன்.

எனவே, நாம் ஈஸால் ஸவாப் எனும் நற்காரியங்களை நிரப்பமாகச் செய்து, இறையருளைப் பெறுவோமாக! ஆமீன்!

"யார் பொய்யான பேச்சுக்களையும் பொய்யான நடவடிக்கைகளையும் விடவில்லையோ அவர் பசித்திருப்பதோ தாகித்திருப்பதோ அல்லாஹ்வுக்கு தேவையில்லை" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரீ 1903)

# அறிஞரின் மரணம் அகிலத்தின் மரணம்

## மவ்லவீ எஃப்.ஜமால் பாகவீ

கடந்த (2020 - 21) ஓராண்டில் மட்டும் தமிழகம் தழுவிய அளவில் நூற்றுக்கணக்கான ஆலிம்கள் (மார்க்க அறிஞர்கள்) மரணமாகியுள்ளார்கள். மரணம் என்பது மிகவும் துக்கமான ஒரு காரியம். யாருடைய மரணத்தையும் நம்மால் தாங்கிக் கொள்ள இயலாது. ஆனால், ஆலிம்களின் மரணம் மிக மிக மிக துக்கமான ஒரு காரியமாகும். காரணம் : ஓர் அறிஞர் மரணமாகிவிட்டால் அது அகிலத்தின் மரணத்திற்கு சமம்!

ஏன்? ஆலிமின் மரணம் இவ்வளவு மிகப் பெரும் முக்கியத்துவமாக கருதப்படுகிறது? அதற்கு என்ன காரணம்? இதற்குண்டான பதிலை அல்குர்ஆனும், அல்ஹதீஸும் தெளிவாக கூறும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"[உலகப் பொதுமறையாம்] அல்குர்ஆனை நாமே இறக்கி வைத்தோம். அதனை நாமே பாதுகாப்போம்." - அல்குர்ஆன் (15 : 9)

**அல்குர்ஆனை பாதுகாப்பதற்கு அல்லாஹ் தேர்வு செய்த வழிமுறை என்ன தெரியுமா? "ஆலிம்களின் உள்ளம்" என்பதாக அல்லாஹ் கூறுகின்றான்.**

**இது தெளிவான வசனங்களாகும். [மார்க்கக்] கல்வி வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் அது [பாதுகாப்பாக] உள்ளது."**

- அல்குர்ஆன் (29 : 49)

ஒரு ஆலிம் மரணமாகி விட்டால் அவருடன் இருந்த அல்குர்ஆனும், அதன் விளக்கங்களும் சென்றுவிடும். அந்த இடத்தை யாரும் அடைந்துவிட முடியாது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

ஹிஜ்ரி 12 ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்களின் ஆட்சிகாலம். யமாமா எனும் போர். அதில் கலந்து கொண்ட அதிகமான ஹாஃபிழ்கள் (அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்தோர்) மரணமாகி விட்டார்கள். அப்போது தான் ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் ஜனாதிபதி ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்களிடம் இப்படியே ஹாஃபிழ்கள் மரணமாகிக் கொண்டே சென்றால் பின்னால் வரும் மக்களுக்கு அல்குர்ஆன் கிடைக்காமல் போய்விடும் என்று வலியுறுத்தி கூறியதும் அதனை ஏற்றுக் கொண்ட ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் இந்த பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கலாம்? என்று

ஆலோசித்து இறுதியாக ஹள்ரத் ஜைது பின் ஸாபித் (ரளி) அவர்களிடம் அல்குர்ஆனை ஒன்று திரட்டும் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அல்லாஹ்வின் மகத்தான கிருபையால் அல்-குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டு விட்டது. ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் மட்டும் இந்த மகத்தான மாபெரும் பணியை மேற்கொண்டிருக்காவிட்டால் அல்குர்ஆன் இன்று நம் கரங்களில் கிடைக்காமல் போயிருக்கும்.

இந்த ஹள்ரத் ஜைது பின் ஸாபித் (ரளி) அவர்கள் மரணமான போது, அவர்களின் மண்ணறையை ஜியாரத் செய்ய ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் வருகிறார்கள். மண்ணறைக்கு முன்னால் நின்று கொண்டு அவர்கள் கூறினார்கள்-

**"இவ்வாறுதான் மார்க்கக் கல்வி கைப்பற்றப்படும். இன்றைய தினம் அதிகமான கல்வி புதைக்கப்பட்டுவிட்டது" என்று கூறினார்கள்.** (புகாரீ - 4988)

ஆலிம்கள் இருக்கும் காலமெல்லாம் கல்வியை கற்றுக் கொள்ளும் மாணவர்கள் இருந்து கொண்டேயிருப்பார்கள். ஆலிம்கள் மரணமாகிவிட்டால் மனிதர்கள் அழிந்து போவார்கள் என்று ஹள்ரத் ஸல்மான் (ரளி) அவர்கள் கூறினார்கள். (தாரமீ 248/3)

எனவேதான் ஆலிம்களின் மரணத்தை நபி (ஸல்) அவர்கள் "மறுமையின் அடையாளங்களில் ஒன்று" என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மறுமையின் அடையாளங்களில் ஒன்று கல்வி உயர்த்தப்படும். மடமை தங்கி விடும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (புகாரி 80)

ஆலிம்களை கண்ணியப் படுத்த வேண்டும்.

ஆலிம்களின் பெற்றோரை, குடும்பாத்தாரை, உறவினர்களை, சந்ததிகளை கண்ணியப் படுத்த வேண்டும். அவ்வாறு கண்ணியப்படுத்துவது கல்விக்கு நாம் செய்யும் மகத்தான தொண்டாகும்.

ஆலிம்களின் வழி காட்டுதலை ஏற்க வேண்டும். வயதில் குறைந்தவரோ, அதிகமானவரோ அவரின் உபதேசங்களை செவிமடுத்தல் வேண்டும்.

---

*<u>எச்சரிக்கை!</u>*

*அடக்கத் தலங்களை ஜியாரத் செய்யும் பெண்களையும், அவ்விடங்களில் பள்ளிவாசல்கள் எழுப்புவோரையும், அவ்விடங்களில் விளக்கேற்றுவோரையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள். (திர்மிதீ - 294)*


A Product of Seyadu Spinning Mills
Whites.
As Pure as it gets.
Seyad
Garments
SHIRTS
Marketed By.
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003.- PH.: 0462 2323086 E-Mail : shi@seyadgroup.com


ஜிங்கா
பெய்ன் கேர் ஆயில் TM
ROLL - ON
Jinga TM
Pain Care Oil
ONE SOLUTION FOR ALL PAIN
₹40/-
மொத்த வலிக்கும் ஒத்த நிவாரணி
ஒரு சொட்டு போதும் வலி பட்டுனு போகும்
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உங்கள் அருகில் உள்ள மருந்து கடைகளில் கிடைக்கும் கேட்டு வாங்குங்கள்...
Apollo HOSPITALS
MedPlus
Customer Care: 9962 99 4444
Missed Call: 9543006000
மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஓசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

www.alhussam.in

# AL HUSSAM

Travel & Tours India (P) Ltd

*Experience makes the difference*

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்...

- அல்குர் ஆன் - 2 : 196



யா அல்லாஹ் ! எங்களுக்கு நிறைவான செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும் தந்து ஹஜ்ஜை நிறைவேற்றக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக !... ஆமீன்

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center:** No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail:alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.

ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

## சுவனத்தை அடைய பொன்னான வாய்ப்பு

மதரஸா-யே-இம்தாதியா, மேல்விஷாரம்,
இந்தியாவின் பார்வையற்றவர்களுக்கு உலக,
மார்க்கக் கல்வியின் பிரபலமான கல்வி நிறுவனம்

அல்ஹம்துலில்லாஹ் 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிபடியாக வளர்ச்சி அடைந்து தற்போது நாழிரா, ஹிப்ழு, ஜூம்ரா மற்றும் கிராத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

- ☑ இதுவரை 17 மாணவர்கள் மற்றும் 59 மாணவிகள் குர்ஆன் ஷரீபை மனனம் செய்துள்ளனர். (இதில் 8 மாணவர்கள் மற்றும் 1 மாணவி பார்வையற்றவர்கள்).
- ☑ 5 மாணவர்கள் ஜூம்ரா ஓதி முடித்துள்ளனர். 3 மாணவர்கள் கிராத்தே சபா மற்றும் 5 மாணவர்கள் கிராத்தே ஹஃப்ஸ் ஓதி முடித்துள்ளனர்.
- ☑ ஏறத்தாழ 130 மாணவர்கள் மற்றும் உலமாக்கள் பிரைலி பயிற்சி பெற்றுள்ளனர்.
- ☑ மார்க்கபற்றுள்ளவர்களின் நிதியுதவியால், கடந்த ஐந்து வருடங்களாக இந்திய மற்றும் சர்வதேச அளவில் இதுவரை ஏறத்தாழ 600 பார்வையற்றவர்களுக்கு பிரைலி குர்ஆன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.
- ☑ அல்ஹம்துலில்லாஹ், முழு இந்தியாவில் பிரைலி குர்ஆன் மற்றும் இஸ்லாமிய கிதாபுகள் எங்கள் மதரஸாவில்தான் தயாராகின்றன.
- ☑ பார்வையற்ற 13 மாணவர்கள் (ம) 5 மாணவிகள் உட்பட, 24 மாணவர்கள் (ம) 6 மாணவிகள் மார்க்க கல்வியுடன் உலக கல்வியையும் (SCHOOL EDUCATION) கற்று வருகின்றனர். மேலும் மாணவர்கள் கல்லூரியில் பட்டப்படிப்பு பயில்கின்றனர்.
- ☑ அல்லாஹ்வின் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

### கனிவான வேண்டுகோள்

இதுவரை மதரஸாவிற்கென சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. மாறாக, தற்காலிக கட்டிடத்தில்தான் நடைபெற்று வருகிறது. மழை, வெயில், குளிருக்கான போதிய வசதியும் இல்லை.

பார்வையற்ற மாணவ, மாணவிகளின் கல்வி நலனை கருத்தில் கொண்டு மதரஸாவின் மாதாந்திர செலவுகளில் அதிக அளவில் பங்கு எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

مَا عِنْدَكُمْ يَنْفَدُ وَمَا عِنْدَ اللَّهِ بَاقٍ [النحل ٩٦]

உங்களிடம் இருப்பவை எல்லாம் தீர்ந்துவிடும். அல்லாஹ்விடம் இருப்பதே நிலைத்திருக்கும்

بَادِرُوا بِالصَّدَقَةِ فَإِنَّ الْبَلَاءَ لَا يَتَخَطَّاهَا

தர்மம் செய்வதில் விரைந்து செயல்படுவீர். ஏனெனில் இன்னல்கள் தர்மத்தை முந்த முடியாது.


وَبَصَرُكَ لِلرَّجُلِ الرَّدِيءِ الْبَصَرِ لَكَ صَدَقَةٌ [ترمذي]

பார்வையற்றவர்களை அவரின் இருப்பிடம் வரை அழைத்து செல்வதும் தர்மமாகும்.



## செலவினங்கள்

| | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,000 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 5,00,000 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 60,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 60,00,000 |



BRAILLE QURAN

### கல்விப் பிரிவுகளின் முழு விளக்கம்

மாணவர்கள்

| பிரிவுகள் | பார்வையற்ற மாணவர்கள் | மொத்த மாணவர்கள் |
|---|---|---|
| நாழிரா | 13 | 30 |
| ஹிப்ழு | 09 | 39 |
| ஜும்ரா | 09 | 27 |
| மாற்று திறனாளிகள் | 01 | 01 |
| இம்தாதுல் மகாதிப் | - | 12 |
| மொத்த மாணவர்கள் | 32 | 109 |

மாணவிகள்

| பிரிவுகள் | பார்வையற்ற மாணவிகள் | மொத்த மாணவிகள் |
|---|---|---|
| நாழிரா | 05 | 10 |
| ஹிப்ழு | 02 | 60 |
| விடுதியில் தங்கி படிப்பவர்கள் | 07 | 20 |
| அனாதைகள் | 01 | 04 |
| இம்தாதுல் மகாதிப் | - | 10 |
| மொத்த மாணவிகள் | 07 | 80 |

المدرسة الامدادية للمكفوفين بميل وشارم تمل نادو الهند

# MADRASA-E-IMDADIYA FOR THE BLIND

**Run By : Imdadiya Educational & Charitable Trust**

Registered under section 12AA of the Income Tax Act,1961 as per Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499

4-7/A Old Eidgah Street, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500

Regd. No:59/2014
Estd: 1431-H/2010

G Pay
IMDADIYA EDUCATIONAL AND CHARITABLE TRUST

Scan and pay with any BHIM UPI app
G Pay PhonePe Paytm
BHIM UPI

**A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**STATE BANK OF INDIA**
**CURRENT ACCOUNT NO : 35612371063**
**Melvisharam Branch Code : 3783**
**IFSC : SBIN0003783**

**INDIAN BANK**
**CURRENT ACCOUNT NO : 6288904753**
**Melvisharam Branch Code : 1312**
**IFSC : IDIB000M139**

G Pay PhonePe
**Google pay or PhonePe: 9952120340 (IMDADIYA EDU)**

# வரலாற்றில் ஓர் ஏடு

மறைவானவற்றை நம்பி, தொழுகையைக் கடைபிடித்து நாம் வழங்கிய (செல்வத்)திலிருந்து (பிறருக்குச்) செலவும் செய்து வருகிறவர்கள் என்று (அல்குர்ஆன் - 2 : 3) அல்லாஹ் யாரைக் குறிப்பிடுகிறானோ அவர்கள்தாம் இறையச்சமுடையோர் என ஹள்ரத் கத்தாதா (ரளி) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் "தக்வா என்றால் என்ன" என்று ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்களிடம் கேட்டபோது, "முட்கள் நிறைந்த பாதையில் நீங்கள் நடந்ததுண்டா?" என ஹள்ரத் உபை (ரளி) அவர்கள் திருப்பிக் கேட்டார்கள். "ஆம், நடந்துள்ளேன்" என்று ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் பதில் சொன்னார்கள். "அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று மறுபடியும் ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்கள் கேட்க, "சிரமப்பட்டு எச்சரிக்கையோடு நடந்தேன்" என்று ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் கூறினார்கள். "அந்த எச்சரிக்கை உணர்வோடு தீமைகளிலிருந்து விலகி வாழும் நிலைதான் தக்வா ஆகும்" என்று ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்கள் சொன்னார்கள்.

இந்த கருத்தை கவிஞர் இப்னுல் முஅதஸ்ஸ“ பின்வரும் தமது கவிதையில் வெளியிட்டுள்ளார் :

விட்டு விடு! சிறு பெரும் பாவங்கள் முற்றிலுமாய்;
அதுவே இறையச்சம் செயல்படு!
முட்களின் பூமியில் நடப்பவன்போல் மிகுந்த எச்சரிக்கையாய்;
கருதிவிடாதே! சிறுபாவத்தையும் சாதாரணமாய்;
ஏன் தெரியுமா? பொடிகற்களால்தாம் பெருமலைகள்!

ஒரு மனிதன் அடைகிற நன்மைகளில் முதன்மையானது இறையச்சம் (தக்வா)தான். மற்றவையெல்லாம் அதற்கு அடுத்தவையே என்பதை பின்வரும் நபிமொழி உணர்த்துகிறது.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இறையச்சத்திற்கு அப்பால் ஒரு மனிதர் அடைகிற நன்மை நல்ல (பண்புடைய) மனைவியே! அவளது குணம் எவ்வாறிருக்கும் என்றால் கணவன் தன்னை பார்க்கும்போது அவனுக்கு அவள் மகிழ்வூட்டுவாள். கணவனின் கட்டளைக்கு அவள் பணிந்து நடப்பாள். அவளை நம்பி அவன் ஒரு சத்தியம் செய்தால், அதை அவள் காப்பாள். கணவன் வெளியில் சென்றுள்ளபோது அவனது சொத்தையும் தன்னையும் பாதுகாத்துக் கொள்வாள்."

ஆதாரம் : தஃப்ஸீர் இப்னு கஸீர் பாகம் 1/பக்கம் 54 & 55

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# தாயின் கருவறையின் உள்ளே...

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

உளவியலார், தாயின் தாலாட்டுப் பாடல் மூலம் ஆராய்ச்சி செய்தனர்.

தாயின் பாடல் ஒலி கேட்கும் போது ஒரு குறிப்பிட்ட அசைவு களை வளரும் குழந்தை வெளிப் படுத்துவது அறியப்பட்டது. ஆகவே, பிறந்த குழந்தை அழும் போது இப்பாடல்களைப் பாடி எளிதாக அமைதிப்படுத்தலாம்.

முஸ்லிம் தாய்மார்கள், திருகுர்ஆன் வசனங்களை அதிகம் ஒலித்து குழந்தையைப் பழக்கப்படுத்துவது, குழந்தைக்கு இறையச்சத்தை ஊட்ட நிச்சயம் உதவும் என்பதை நினைவில் கொள்வோம்.

கனமான அதிர்வுகள் குழந்தையின் உடலைக் குலுக் கும். தாய், கால் வழுக்கி ஒரு பக்க இடுப்பின் மீது தரையில் விழும் போது குழந்தை அதிர்ச்சியுறும். ஆனால், குழந்தைக்கு காயம் எது வும் ஏற்பட்டு விடாமல் அம்னி யாட்டிக் திரவம் பாதுகாத்துக் கொள்ளும். ஆனால் தாயின் வேதனை மற்றும் குழந்தையைப் பற்றி பயம் ஆகியன தாய், சேய் இருவர் உடல்களைப் பாது காப்பதற்காக சுரப்பிகளைத் தூண்டிவிடுகின்றன. அட்ரிலின் மற்ற பிற சுரப்பி நீர்கள் தூண்டப் பட்டு வெள்ளம் போல் பெருகும். குழந்தை சப்தமிட்டு அழும். கை, கால்களை வேகமாக அசைத்துக் கொள்ளும். ஆனால் அழுகை ஒலியைக் கேட்கும் வாய்பில்லை. ஏனெனில் ஒலியெழும்ப தேவை யான காற்று கருப்பையில் இல்லை என்பதே காரணம். தாய் நலம் பெற்றவுடன் சுரப்பி நீர்கள் சுரப்பதும் நின்று விடும்.

தாயின் மனஅழுத்தம், கோபம், அதிர்ச்சி மற்றும் கவலை ஆகியன வளரும் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படுத்தாது. தாயின் பிரச்சனைகள் சிரமங்கள் குழந்தையைத் தாக்குவதில்லை. தாயின் சிரம நாட்கள் குழந்தைக்கு மோசமான பருவ காலம் போன் றாகும். இதுபோன்ற நிலைகள் குழந்தைக்கு நன்மை பயப்பதேயாகும். இவைகள் வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

தொடர்ந்து ஏற்படும் தாயின் மன அழுத்தம் அல்லது ஊட்டச் சத்துக் குறைதல், மது, புகைப் பிடித்தல், மருந்துகள் உட்கொள்ளுதல் ஆகியன தொடரும்போது வளரும் குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

## பிரசவ நிலை

கடந்த சில மாதங்களாக தனது தாய் தன்னை இறுக்கமாக அணைப்பது போல் தனது சிறிய இல்லம் இறுக்குவதாக குழந்தை உணரும்.

கருப்பை அடிக்கடி சுருங்கி விரியத் தொடங்கும். அதன் வலிமையும் அதிகரிக்கும். அடுக்கடுக்காக நடைபெறும் இச்செயல் தனது தலையை சூழ அழுத்தம் ஏற்படுவதை குழந்தை உணரும்.

பிரசவ வலி தொடங்கி குழந்தையின் தலை கருப்பைக்கு வெளியே வந்தவுடன் அழுத்தம் நீங்கி விடும். பிறகு உடல் முழுவதும் வெளியேறிவிடும்.

கருப்பையின் இருளிலிருந்து வெளியில் சூழவுள்ள வெளிச்சம், குளிர்ச்சி, இறுக்கமின்மை ஆகிய தாக்குதல்கள் குழந்தையின் அழுகையைத் தூண்டுகின்றன. கை கால்களை அசைக்கவும் கண்களை இறுக்கி மூடவும் செய்கின்றன.

பிரசவத் தருணம், குழந்தையின் மீது வலுக் கட்டாயமாக தாயினால் திணிக்கப்படுவதில்லை. இது வளரும் குழந்தை நடத்திய திருவிளையாடலின் ஒரு முடிவாகும். அதன் உடலில் ஏற்பட்டு விடும் மாற்றங்கள், கர்ப்பப்பையை பிரசவிப்பதற்கு தயார் செய்து விடுகின்றன.

குழந்தை பிறந்து கர்ப்பப்பையிலிருந்து வெளி வருவது குழந்தைக்கு வேதனை தரும் என்பதும் சிரமம் ஏற்படும் என்பதும் தவறான கருத்தாகும். பிரசவம் பெரும்பாலும் மிக எளிதான செயலேயாகும்.

**“அவன் பிறப்பதற்கான வழியை எளிதாக்க வைத்துள்ளோம்.”** - அல்குர்ஆன் (80 : 20)

**“கரு வளரும்போது கர்ப்பப்பை விரிவடைகிறது.”**

- அல்குர்ஆன் (13 : 8)

கர்ப்பப்பையின் தசை மெல்லியதாக நான்கு லிட்டர் தண்ணீர் கொள்ளும் அளவிற்கு 24 பங்கு விரிந்து விடுகிறது.

மூன்று மாதத்தில் கர்ப்பப்பை இடுப்பு எலும்பு வரையிலும், ஆறு மாதத்தில் தொப்புள் வரையிலும் இறுதியில் நெஞ்செலும்பு வரையிலும் உயர்கிறது.

பிரசவத்தின்போது கருப்பையில் இறுக்கம் ஏற்படுவதற்கு காரணம் கருப்பை சுருங்கும் போது பிளசென்ட்டாவிற்கு செல்லும் இரத்தம் குறைந்து பிராண வாயு பற்றாக்குறை ஏற்படுகிறது. முழு மாத குழந்தைக்கு இது ஒரு பிரச்சனையில்லை. உண்மையில் வெளி உலக வாழ்வுக்கு குழந்தையை ஆயத்தம் செய்

வதற்கு இறுக்கம் உதவுவதாக அறியப்பட்டுள்ளது.

இறுக்கம் ஏற்பட்டு பிராண வாயு குறைவதன் காரணமாக குழந்தையின் முக்கிய உறுப்புகள் பாதிப்படையாமலிருக்க அட்ரினலின் சுரப்பி சுரந்து அதிக இரத்தத்தை குழந்தைக்கு பாயச் செய்கிறது! மேலும், நுரையீரலில் சுரக்கும் சர்ஃபாக்டென்ட் (Sur factant) என்ற பசை போன்ற பொருளையும், வேறு சில இரசாயனப் பொருட்களையும், அட்ரினல் சுரப்பி நீர், அதிக உற்பத்தியைத் தூண்டுகிறது. இவைகள் குழந்தையின் நுரையீரல்களிலுள்ள திரவத்தை வற்றச் செய்து குழந்தை சிரமமின்றி சுவாசிக்க உதவுகின்றன. சர்ஃபாக்டென்ட் என்ற பொருள் சோப்பு போன்று பிசுபிசுப்பாக இருக்கும். நுரையீரல் திசுக்கள் இதை உற்பத்தி செய்கின்றன. இப்பொருள் நுரையீரல் திரவத்தின் மேற்பரப்பு இறுக்கத்தை (Surface Tension) குறைத்து நுண்ணிய நுரையீரல் செல்கள் குழைவதை தடுத்து சுவாசம் எளிதாக நடைபெற உதவுகிறது.

குறைமாத குழந்தைகளின் நுரையீரல்களில் சர்ஃபாக்டென்ட் உற்பத்தி செய்யப்படாததால் அக்குழந்தைகள் சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்படும். ஆகவே செயற்கை முறையில் கருவி மூலம் சுவாசிக்க உதவப்படுகிறது.

அட்ரினலின் சுரப்பு நீர் இன்னும் குழந்தை பிறந்தவுடன் உன்னிப்பாக கண்களை திறந்து கொள்ள உதவுகிறது.

கருப்பையின் இறுக்கம் சிறிது நேரமே. பிறந்த பிறகு, வெதுவெதுப்பான மென்மையுள்ள விரிப்பில் படுத்து கை கால்களை உதைத்துக் கொள்ளும். கண்கள் இன்னும் திறக்கவில்லையென்றாலும் தாயின் இதமான வருடும் குரலொலியையும் இதயத் துடிப்பையும் மிக அருகில் உணரும். சிறிது நேரத்தில் கண்களைத் திறந்து சுற்றுப்புறத்தை நோக்கும். பழக்கப்பட்ட குரலோசைக்குரிய தாயின் முகத்தைக் கண்டு அதனை உற்று நோக்கும். பிறகு தனது முகமும் மலர்ந்துவிரியும். தாயின் சிரிப்பு குழந்தையை வரவேற்பதாக அமையும்.

**“அவனுடைய தாய் கஷ்டத்துடனேயே (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்திருந்து, கஷ்டத்துடனே அவனைப் பிரசவிக்கிறாள். அவள் கர்ப்பமானதிலிருந்து இவன் பால் குடி மறக்கும் வரையில் முப்பது**

---

**காலத்தை ஏசாதீர் !**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “காலத்தை ஏசாதீர்கள். ஏனெனில், அல்லாஹ்வே காலத்தை படைத்து இயக்குபவன்”

(முஸ்லிம் – 4523)

மாதங்கள் [மிக்க கஷ்டத்துடன் செல்கின்றன]''

- அல்குர்ஆன் (46 : 15)

''மனிதனே! உன்னை சிருஷ்டித்து, மேலான விதத்தில் உருவகித்து, மிக்க ஒழுங்காக உன்னை அமைத்த, மிக்க கண்ணியமுள்ள உனதிறைவனைப் பற்றி உன்னை மயக்கி விட்டது எது? அவன் தான் விரும்பிய [மிக்க அழகான] கோலத்தில் உன்னை [உன்னுடைய அவயங்களைப்] பொருத்தினான்.''

- அல்குர்ஆன் (82 : 6- 8)

''[பார்க்கக்கூடிய] இரு கண்களையும், நாம் அவனுக்கு கொடுக்கவில்லையா? [அவ்வாறிருந்தும், உண்மையை அவன் கண்டு கொள்ளவில்லை. பேசக்கூடிய] ஒரு நாவையும், இரு உதடுகளையும் [நாம் அவனுக்கு கொடுக்கவில்லையா?] அவற்றை தானாகவே அடைந்து விட்டானா?''

- அல்குர்ஆன் (90 : 8, 9)

ரூஹு (ஆன்மா) பற்றிய பல கருத்துக்களும், அபிப்பிராயங்களும் நிலவுவதை காண்கிறோம். அதன் உண்மை தன்மை பற்றிய ஞானம் அல்லாஹ்வுக்கே உரியது!

''நபியே! 'ரூஹு'வைப் பற்றி [யூதர்களாகிய]' அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அதற்கு நீர் அது எனது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது. [அதைப் பற்றி] வெகு சொற்ப ஞானமேயன்றி உங்களுக்கு கொடுக்கப்படவில்லை. [ஆதலால், அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது] என்று கூறுவீராக!''

- அல்குர்ஆன் (17 : 85)

அல்லாஹ்வின் வல்லமையை பறைசாற்றும் மனிதப் படைப்பு, நம்மை வியப்பிலாழ்த்தவில்லையா?

சிந்திப்போம்! செயல்படுவோம்! இன்ஷா அல்லாஹ்!

## துணை நூற்கள்


1. சங்கைமிகு குர்ஆன், சிறப்பு மிகு தமிழாக்கம் - அல்லாமா ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி ஹள்ரத் (ரஹ்) அவர்கள். தாருல் ஹுதா வெளியீடு. 211, லிங்கி செட்டி தெரு. மண்ணடி, சென்னை - 1.
2. நலம் நலமறிய ஆவல் - பீ.ஹாமிது அப்துல் ஹை. ஷிஃபா பதிப்பகம், 62, பொறியாளர் நகர், மதுரை - 14.
3. Reader's Digest, March 1990. Published by Orient House, Balland Estate, Mumbai - 400038.



**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

## முஸ்லிம் பெண் ஷாகியா கானம் துணை சபாநாயகராக தேர்வு!

ஆந்திர மாநில சட்டசபை வரலாற்றில் முதன்முறையாக முஸ்லிம் பெண் மயானா ஷாகியா கானம் துணை சபாநாயகராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் கடப்பா மாவட்டம் ராயசோட்டியைச் சேர்ந்தவர்.

தலித் சமுதாயத்தைச் சேர்ந்த மோஷினி ராஜூவை சபாநாயகராக தேர்ந்தெடுத்த பிறகு சிறுபான்மை சமுதாயத் தைச் சேர்ந்த ஒரு பெண்ணை துணை சபாநாயகராக தேர்ந் தெடுக்க வேண்டும் என்று ஆந்திர முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டி முடிவு செய்தி ருந்தார். மேலும், தங்கள் கட்சி ஆட்சி அமைத்தால் சட்டமன்ற துணை சபாநாயகர் பதவி சிறு பான்மை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் மேல்சபை உறுப்பினரான ஷாகியா கானம் துணை சபாநாயகராக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து ஆந்திர முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டி கூறுகையில், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த பெண் களுக்கு உயர் பதவி அளிக்க வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. அது தற்போது நிறை வேறியுள்ளது. எனது மூத்த சகோதரி ஷாகியா கானம் துணை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப் பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதும் மேல்சபை உறுப்பினர் பதவியில் திறம்பட செயல்பட்டார். சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக பெண்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக எங்களது அரசாங்கம் அனைத்து வகையான நடவடிக்கைகளை யும் செய்து வருகிறது என்று தெரிவித்தார்.

துணை சபாநாயகராக தேர்வு செய்யப்படக் காரணமாக இருந்த முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டிக்கு ஷாகியா கானம் நன்றி தெரிவித்துள்ளார்.

எனக்கு இந்த பதவி கிடைத்துள்ளதால் மாநிலத்தி லுள்ள அனைத்து முஸ்லிம் களும் மகிழ்ச்சியடைவார்கள் என்று ஷாகியா கானம் மேலும் கூறியுள்ளார்.

## யார் எதை சாப்பிட வேண்டும் என்று தீர்மானிக்க மாநகராட்சிக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

குஜராத் மாநகராட்சியில் அசைவ உணவக கடைக்குத் தடை விதித்ததை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில், யார் எதை சாப்பிட வேண்டும் என்று தீர்மானிக்க மாநகராட்சிக்கு அதிகாரம் கொடுத்தது யார்? என்று குஜராத் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி கண்டனத்தை தெரிவித்துள்ளது.

குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி பிரேன் வைஷ்ணவ அகமதாபாத் மாநகராட்சி அதிகாரிகள் அசைவ உணவு விற்ற வியாபாரிகளைத் தடை செய்வதும், அவர்களின் தள்ளு வண்டிகளை தடை செய்தும் எடுத்த நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்து வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளார். கைப்பற்றப் பட்ட வண்டிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கும் படியும் உத்தரவிட்டார்.

நீதிபதி கூறியதாவது :-

உங்களின் பிரச்சனை என்ன? அசைவ உணவு வேண்டாம் என்றால் அது உங்களுடைய பிரச்சனை நான் என்ன சாப்பிட வேண்டும் என்று தீர்மானிப்ப தற்கு நீங்கள் யார்? இன்றைக்கு இதைச் செய்துள்ள நீங்கள், நாளைக்கு எனது வீட்டிற்கு வெளியே நான் எதைச் சாப்பிட வேண்டும் என்று தீர்மானிக்கப் போகிறீர்களா? என்று சாடியுள்ளார்.

அகமதாபாத் மாநகராட்சி உறுப்பினர் ராஜ்காட்டைச் சேர்ந் தவர். மாநகராட்சி வீதிகளில் முட்டை, ஆம்லேட் வியாபாரம் செய்வதைப் பார்த்து வெறுத்து அதை ஒழிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததும் முட்டை மற்றும் அசைவ உணவுக் கடை கள் யாவற்றையும் மூடவும் அவர்களின் தள்ளுவண்டிகளை கைப்பற்றவும் மாநகராட்சி அதிகாரிகள் உத்தரவிட் டுள்ளனர்.

இதை எதிர்த்து செய்த மனு வின் மீது நீதிபதி கூறியது தான் இது. ஆளும் கட்சியினருக்கு அசைவ உணவு பிடிக்கவில்லை என்றால் உடனடியாக எல்லா அசைவ உணவகங்களையும் மூடி விடுவீர்களா? இதற்கான அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது? இவ்வாறு கூறிய நீதிபதி மாநகராட்சி ஆணையர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆக வேண் டும் என்றும் உத்தரவிட்டார்.

## இரயில் பெட்டி படுகொலையின் நூற்றாண்டு சாட்சி

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இரத்தம் கொண்டு எழுதப்பட்ட பக்கங் களில் ஒன்றான இரயில் பெட்டி படுகொலை - Wagon Tragedy (19.11.1921) நடந்து நூறு ஆண்டு கள் நிறைவு பெறுகிறது.


A.சலீம் السَّلَامُ عَلَيْكُمْ

# Rahmaan Builders

## Property Developers & Real Estate

## Kassim Construction
## Travels & Service






**வீடு, இடம் வாங்க - விற்க இங்கு அணுகவும்.**

45D, ராமசாமி பிள்ளை தெரு, மருதமலை மெயின் ரோடு,
வடவள்ளி, கோயம்புத்தூர் – 41.

9363220624, 9994323977, 9976778597

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூன்று உபதேசங்கள்

★ பிரதி மாதம் (பிறை 13, 14, 15) மூன்று நோன்புகள் வைத்தல்.
★ ளுஹாவுடைய இரண்டு ரக்அத்துகள் தொழுதல்.
★ தூங்குவதற்குமுன் வித்ரு தொழுகையை தொழுதல்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள்
(நூல் : புகாரி)

# பாவா மெடிக்கல்ஸ்

## 53/4, பெரிய தெரு,
## பட்டுக்கோட்டை – 1.

✆ 04373-254354; 253339; 99444 54354

ஜாலியன் வாலாபாக் படு கொலைக்குச் சிறிதும் குறை வில்லாத கொடூரம்தான் இரயில் பெட்டி படுகொலை. 97 முஸ்லிம் களுடன் 3 இந்துக்களையும் திணறத்திணறபடுகொலைசெய்த வரலாறு கொஞ்சம் கொஞ்சமாக மறக்கடிக்கப்பட்டு வருகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திற்கு எதிராக தீவிரமாக களம் கண்ட மலபார் புரட்சியின் நாயகர் களை கைது செய்து கொடுஞ் சிறையில் அடைத்தார்கள். மலப்புரம் மாவட்டத்தில் சிறை களில் இடமில்லாத காரணத்தால் இரயிலில் ஏற்றி அனுப்ப பரங்கிய ரின் அதிகாரிகள் முடிவு செய்தனர்.

திரூரிலிருந்து கோயம் புத்தூர் செல்லும் Madras and South Maratta MSNCV 1711 எனும் இரயிலில் ஒரு சரக்குப் பெட்டியில் நூறு பேரையும் அடைத்து கதவைத் தாழிட்டு அனுப்பி வைத்தனர். சுமார் 180 கி.மீ. தூரம் பயணித்த இரயில் போத்தனூர் நிலையத்தை அடைந்தபோது, இரயிலில் காற்றுப் புகுவதற்கு வழியின்றி சுவாசம் கிடைக்காமல் மூச்சுத் திணறி அனைவரும் பலியான கொடூரம் நிகழ்ந்தது.

மலபார் புரட்சியின் வீரர்கள் செத்து மடிந்த விஷயம் கேள்விப் பட்ட அடுத்த கோச்சில் அமர்ந்திருந்த ஆங்கிலேய அதிகாரிகள் உரத்த சப்தமிட்டுச் சிரித்து மகிழ்ந்தவாறு போத்தனூர் நிலையத்தில் உடல்களை இறக்க முயல, இரயில்வே நிர்வாகம் அனுமதி மறுத்தது. இரயில் மீண்டும் நூறு சடலங்களுடன் திரூர் நோக்கித் திருப்பி விடப்பட்டது.

திரூர் ரயில்வே பிளாட் பாரத்தில் அடுக்கி வைத்திருந்த தங்கள் உறவினர்களின் ஷஹீ தான ஜனாஸாக்களை கேட்டுப் பெறுவதற்கு கூட அச்சப்பட்ட சூழலில் பெருவணிகராக இருந்த கைணிக்கர மம்மு ஹாஜி ஆட்சியர்களோடு நடத்திய பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு ஜனாஸா அடக்கம் செய்ய பிரிட்டிஷ் ஆட்சியர்கள் அனுமதி வழங்கினர்.

திரூர் அருகிலுள்ள கோரங்கத்து ஜும்ஆ பள்ளி வாசல் வளாகத்தில் 44 ஜனாஸாக் களும், மீதமுள்ள ஜனாஸாக்கள் கோட்டூ பள்ளிவாசல் வளாகத்தி லும் அடக்கம் செய்யப்பட்டது. மூன்று இந்துக்களின் சடலங்கள் மூத்தூர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மறைக்கப்பட்ட முஸ்லிம்களின் தியாக வரலாற் றில் முக்கியமான பக்கங்களைக் கொண்டது. 1921 இரயில் பெட்டி படுகொலை 44 ஷஹீதுகள் அடக்கம் செய்யப்பட்ட இடம் எனும் அறிவிப்புப் பலகையுடன் அந்த வளாகம் இன்றும் திரூர் கோரங்கத்து பள்ளிவாசல் வளாகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## 5 வயது சிறுவனுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

கத்தார் நாட்டிலிருந்து ஆபத்தான நிலையில் விமானத்தில் அழைத்து வரப்பட்ட 5 வயது சிறுவனுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மூலம் மறுவாழ்வு அளித்துள்ளனர் குரோம்பேட்டை ரேலா மருத்துவமனை மருத்துவர்கள். இதுகுறித்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மருத்துவரும், ரேலா மருத்துவமனை தலைவருமான முஹம்மது ரேலா செய்தியாளர்களிடம் கூறியதாவது :

கத்தார் நாட்டில் பெற்றோருடன் வசித்து வந்த வங்க தேசத்தை சேர்ந்த சிறுவன் முஹம்மது திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. மருத்துவப் பரிசோதனையில் கல்லீரல் செயலிழப்பு, இரத்தம் உறைதல் உள்ளிட்ட உயிருக்கு ஆபத்தான பிரச்சனைகளுடன் இருப்பது கண்டறியப்பட்டது.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மூலம்தான் சிறுவனை காப்பாற்ற முடியும் என்று அறிவுறுத்திய மருத்துவர்கள், ரேலா மருத்துவமனை கல்லீரல் மருத்துவ நிபுணர்களிடம் மருத்துவ ஆலோசனை பெற்று சிறுவனை வெண்டிலேடடர் உயிர் பாதுகாப்புடன் அவசர சிகிச்சை வானூர்தி மூலம் கத்தாரிலிருந்து சென்னை ரேலா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முன்பாக கத்தார் மருத்துவர்கள் அனுப்பி வைத்த மருத்துவப் பரிசோதனைகளை ஆய்வு செய்து, சிறுவனுக்கு மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை ஏற்பாடுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

அவனது தந்தையிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட சிறிய அளவிலான கல்லீரல் எனது தலைமையிலான மருத்துவக் குழுவினர் மூலம் சிறுவன் முஹம்மதுவிற்கு பொருத்தப்பட்டது. சட்டரீதியாக இது போன்ற கல்லீரல் தானம் செய்வதற்கான நடைமுறைகளை மேற்கொள்ள குறைந்தபட்சம் 10 நாட்கள் ஆகும். ஆனால், சிறுவன் முஹம்மதுவின் உடல் நிலையை கருத்தில்கொண்டு அவன் சென்னைக்கு அழைத்து வரப்பட்ட 3வது நாளில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது இருவரும் நலமுடன் உள்ளனர்.

## பத்மஸ்ரீ ஹஜ்ஜாப்பா!

கர்நாடக மாநிலத்தில் மங்களூர் அருகில் ஹரேகலா கிராமத்தைச் சேர்ந்த ஹஜ்ஜாப்பாவுக்கு நாட்டின் நான்காவது மிகப் பெரிய கௌரவமான பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப வறுமையைப் போக்க சிறு வயதிலேயே படிப்பைத் துறந்த ஹஜ்ஜாப்பா

மங்களூர் சாலையோரங்களில் நடந்து சென்று ஆரஞ்சுப்பழம் வியாபாரம் செய்பவர். பல ஆண்டுகளுக்கு முன்பு வெளி நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் ஆரஞ்சுப்பழத்தின் விலையை ஆங்கிலத்தில் கேட்டபோது, பதில் சொல்ல முடியாமல் போனது வெட்கத்தைத் தந்தது. கூடவே, கல்வியறிவு இல்லாததால் தனக்கு இந்த நிலை என்பதாக மனதுக்குள் வருந்திய ஹஜ்ஜாப்பா, முறையான கல்வி கிடைக்காத தனது கிராமத்து குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது என்று அன்றே சபதம் செய்தார்.

தனது எண்ணத்துக்குச் செயல்வடிவம் கொடுக்க அன்றாடம் ஆரஞ்சுப்பழம் விற்பனை செய்து கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கத் தொடங்கிய ஹஜ்ஜாப்பா, அடுத்த சில ஆண்டுகளில் தனது கிராமத்தில் படப்பு எனும் ஊரில் தொடக்கப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார்.

அரசுத்துறை, தனியார் பங்களிப்புடன் ஹஜ்ஜாப்பா பள்ளிக்கூடம் உயர்நிலை வகுப்புகள் வரை நடத்தி வருவதுடன், மிகவும் பின்தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி விழிப்புணர்வு ஊட்டியதற்காக ஹஜ்ஜாப்பாவுக்கு பத்மஸ்ரீ விருது உட்பட பல்வேறு கௌரவங்களைத் தேடித் தந்துள்ளது.

ஹரேகலா கிராமத்தைச் சேர்ந்தவர்களால் 'அக்ஷர ஷாந்தா' என்றழைக்கப்படும் ஹஜ்ஜாப்பா தனது கல்வி நிலையத்தை கல்லூரியாக ஆக்க வேண்டும் எனும் இலட்சியத்துடன் ஆரஞ்சுப்பழ வியாபாரத்தை தொடர்ந்து வருகிறார்.

## "தங்கப்பதக்கம்" செய்யது அலீ ஃபாத்திமா!

தென்காசி மாவட்டம் அரியப்புரம் ஊராட்சி ரஹ்மானியாபுரத்தைச் சேர்ந்த, மிகவும் எளிய குடும்பத்தைச் சார்ந்த M.ஷாகுல் ஹமீது அவர்களின் மகளார் S.செய்யது அலீ பாத்திமாவிற்கு M.Sc.,Bio.Tech. ல் Gold Medallist தங்கப்பதக்கம் தமிழ்நாடு கவர்னர் அவர்களால் வழங்கப் பட்டது. வாழ்த்துக்கள்!

## மக்களின் விருப்பத்திற்கு எதிராக லட்சத்தீவில் வெள்ளிக்கிழமை விடுமுறை ரத்து!

மக்களின் விருப்பத்திற்கு எதிராக லட்சத் தீவில் வெள்ளிக்

### சலிப்படைய வைக்காதீர்!

"இலகுவாக்குங்கள்; சிரமத்தைக் கொடுக்காதீர்கள். மேலும் நல்லவற்றையே சொல்லுங்கள். சலிப்படைந்து ஓடி விடுமாறு செய்யாதீர்கள்; வெறுப்பூட்டாதீர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி – 69)

# மணமகன், மணமகள் தேவை

**M.B.B.S.,** முடித்து, டாக்டராக பணிபுரியும் **மணமகன்களும், மணமகள்களும் தேவை.**

**B.D.S., M.D.S.,** முடித்து, டாக்டராக பணிபுரியும் **மணமகள்களும், மணமகன்களும் தேவை.**

உருது பேசும் மணமகளுக்கு, டாக்டராக பணிபுரியும் **மணமகன் தேவை.**

தொடர்புக்கு : "மணிச்சுடர்" **எம். இப்ராஹீம், ஜம்ஜம் திருமண அமைப்பாளர்**, ஈரோடு-5.

செல்: **9965079835**

********** பேங்காக்கில் முதல்தர ஓட்டல் **********

## உட்லாண்ட்ஸ் இன் பேங்காங்



சுவை மிகுந்த சைவ - அசைவம்
ஹலால் உணவகம் இணைக்கப்பட்டுள்ளது



குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் தங்குவதற்கு
80 அறைகள் கொண்ட நவீன வசதிகள் உடைய தங்கும் இடம்
தமிழர்களின் மேற்பார்வையில் நடத்தப்படும் முதல் தர ஓட்டல்

# BANGKOK WOODLANDS INN

1158/5-8, CHAROEN KRUNG ROAD, 20I 32, BANGRAK
**BANGKOK - 10500, THAILAND**

☎ (662) 235 66440, 235 6641, 235 3894
Fax : (662) 224 0805, 237 5493
E-mail : manager@woodlandsinn.org

We also Arrange sightseeing tours in Bangkok and Pattaya

கிழமை வார விடுமுறை ரத்து செய்யப்பட்டதற்கு பொது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. ஒன்றிய அரசின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு பொதுமக்கள் கடும்கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலட்சத்தீவு பகுதியில் அதிகமாக முஸ்லிம்கள் உள்ள நிலையில் அங்கு 60 ஆண்டுகளுக்கு மேலாக வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாணவர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது.

இலட்சத்தீவில் இனி மாணவர்களுக்கு வெள்ளிக் கிழமைகளில் விடுமுறை கிடையாது என்று இலட்சத்தீவு கல்வித்துறை அறிவித்துள்ளது. இதன்படி இலட்சத்தீவுகளில் உள்ள பள்ளிகளுக்கு வெள்ளிக் கிழமை வேலை நாட்கள் என்றும், அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளும் இனி விடுமுறை என்று அறிவிக்கும் புதிய நாள்காட்டியை இலட்சத்தீவு கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவுக்கு இலட்சத்தீவு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இலட்சத்தீவு எம்.பி. P.P. முஹம்மது பைசல் இவ்விவகாரம் பற்றி கூறுகையில், வெள்ளிக் கிழமை விடுமுறையை ரத்து செய்த மத்திய அரசின் முடிவு ஏற்றுக் கொள்ள முடியாதது.

இலட்சத்தீவில் பள்ளிகள் தொடங்கப்பட்ட காலம் முதலே வெள்ளிக்கிழமை தான் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட பஞ்சாயத்து பிரதிநிதிகளிடமோ தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடமோ இவ்விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தவில்லை. யூனியன் பிரதேசத்தின் தன்னிச்சையான முடிவாக இதை பார்க்கிறோம் என்றார்.

இந்த முடிவைத் திரும்பப் பெறுமாறு இலட்சத்தீவு மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் பி.பி.அப்பாஸும், நிர்வாகி பிரபுல் கோடா படேலுக்கு கடிதம் எழுதியுள்ளார். மாணவர்கள், பெற்றோர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் எடுக்கப்பட்ட முடிவை திரும்பப் பெற வேண்டும் என்று அவர் அதில் வலியுறுத்தியுள்ளார்.

தொகுப்பு :
**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

---

**நபியவர்களைப் பின்பற்றுவோம்!**

“நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். இன்னும் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான் என்று (நபியே) நீர் கூறுவீராக.” – அல்குர்ஆன் (3:31)

# ஷைகு, முரீது, பைஅத் பற்றி

## அல்லாமா "ஷைகுல்மில்லத்" முஃப்தீ

## அமானீ ஹள்ரத் (ரஹ்) அவர்களின் ஃபத்வா

மன்சூர் அவர்கள் அனல் ஹக் என்று சொன்னபோது நிதானம் தவறி மஜ்தூப் ஆக இருந்தார்கள். அந்தக்கட்டத்தில் ஷைகே காமில் ஒருவர் கவனித்து அவர்களை அந்தக்கட்டத்தை விட்டும் அப்புறப்படுத்தி இருந்தால் அவர்கள் அந்த நிலையை விட்டும் தெளிவு பெற்றிருப்பார்கள். அந்தக்கட்டத்தில் மன்சூர் அவர்கள் அதிக சங்கடத்தில் இருந்தார்கள். அவர்களை தூக்கிலிட்டது. மேற்படி கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு நிவாரணம் கிடைத்தது. அவர்களின் ரூஹுக்கு சாந்தி ஏற்படவும் ஏதுவாக ஆகிவிட்டது. இந்தப் பாதையில் இவ்வித கட்டம் வரத்தான் செய்யும் ஷைகு ஜாக்கிரதையாக இருந்து கவனித்து கொள்ள வேண்டும். இக்காலத்தில் ஒரு ஷைகுக்கு ஆயிரக்கணக்கில் முரீதுகள் இருக்கிறார்கள். மந்தை மந்தையாக ஆடு மேய்ப்பது போல் எந்த ஆட்டுக்கு எது தேவை என்பது தெரியாது. என்னுடைய முரீதுகள் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் இருக்கிறார்கள் என்று பெருமை பாராட்டுகிறார்கள். இவர்கள் எப்படி ஒவ்வொரு முரீதை கவனிக்க முடியும்?

### முஹம்மது, முஹம்மது என்று திக்ர் செய்யலாமா?

**கேள்வி : முரீது பெறுபவர்கள் அல்லாஹ்வுடைய திருநாமங்களைக் கொண்டு திக்ர் செய்ய வேண்டுமா? அல்லது நபி (ஸல்) அவர்களின் திருநாமத்தைக் கொண்டு திக்ர் செய்ய வேண்டுமா? அல்லாஹ் உடைய பெயர்களை கொண்டு திக்ர் செய்வதைப்போல் மற்றவர்களின் திருநாமங்களைக் கொண்டு முஹம்மது என்றோ அஹ்மது என்றோ திக்ர் செய்து வரலாமா? இப்படி செய்வது என்ன?**

பதில் : அல்லாஹ்வுடைய திருநாமங்களைத் தவிர வேறு யாரையும் திக்ர் செய்வது கூடாது. அஹ்மது என்றோ முஹம்மது என்றோ திக்ர் செய்யக்கூடாது. இப்படி செய்வது பெரும்பாவமாகும்.

கல்லுல் ஜமீல் பக்கம் - 21

## லா மவ்ஜூதே இல்லல்லாஹ்

**கேள்வி : ஷரீஅத் சட்டங்களையே தெரியாதவர்கள் லா மவ்ஜூது இல்லல்லாஹு என்றும் லா மக்ஹூது இல்லல்லாஹு என்றும் திக்ர் செய்யலாமா? தரீக்காவுடையவர்கள் ஒன்று சேர்ந்து திக்ர் செய்யலாமா? செய்யக் கூடாதா? செய்யலாம் என்றிருந்தால் எந்த இடத்தில் எந்த நேரத்தில் செய்யலாம்?**

பதில் : லா மவ்ஜூது இல்லல்லாஹு என்று பொது மக்கள் திக்ர் செய்யக்கூடாது. முரீத்தின் ஆரம்ப நிலையில் லா மஃபூது இல்லல்லாஹு என்றும் நடுக்கட்டத்தில் உள்ளவர்கள் (லா மக்ஸூது இல்லல்லாஹு என்றும் பூரண ஹத்துக்கு எய்தியவர்கள் (லா மவ்ஜூத இல்லல்லாஹு) என்றும் திக்ர் செய்யலாம். ஷைகுதான் இவைகளை கவனித்து நடத்த வேண்டும். ஆட்டு மந்தையைப் போல ஒரே தடியைக் கொண்டு ஏகோபித்து விரட்டக்கூடாது. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் எந்த இடத்திலும் ஒன்று சேர்ந்து திக்ரு செய்யலாம்.

(லா மஜ்ஹூதே என்பது சிரமம் முயற்சி என்ற அர்த்தத்தை கொண்டுள்ளது. எனவே லா மஜ்ஹூதே இல்லல்லாஹு என்பது சரியான அர்த்தமுள்ள வார்த்தையாக இல்லை. லா முஜாஹித பீஹி என்ற அர்த்தத்தில் புழங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. பொதுவாக இவ்வித திக்ர் பிரபல்யம் வாய்ந்ததாக இல்லை. மேலும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் இல்லை)

இஹ்யா உலூமுத்தீன் பாகம் - 7 பக்கம் - 370

**கேள்வி : ஜனங்கள் தூங்கும்போது உயர்ந்த சப்தத்தை கொண்டு திக்ரு செய்யலாமா?**

பதில் : தூங்குபவர்களுக்கோ, தொழுபவர்களுக்கோ இடையூறு ஏற்படுவதுபோல் குர்ஆன் ஷரீபையே சப்தமிட்டு ஓதக்கூடாது. இப்படியிருக்க சப்தமிட்டு எப்படி திக்ர் செய்வது? அதிக சப்தத்தைக் கொண்டு திக்ரு செய்வது மக்ரூஹும் ரியாவும் ஆகும். இதை நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்திருக்கிறார்கள்.

## திக்ரு மஜ்லிஸில் பெண்கள்

**கேள்வி : ஆண்களும், பெண்களும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு திக்ர் செய்யலாமா?**

பதில் : ஃபர்ளாக்கப்பட்ட ஐவேளை தொழுகைகளை பெண்கள் பள்ளிவாசலுக்கு சென்று தொழக்கூடாது என்று குலபாக்களின் காலத்திலேயே ஆக்கப்பட்டுவிட்டது. ஃபர்ளான தொழுகைக்கே

ஆண்கள் இருக்குமிடத்திற்கு பெண்கள் செல்லக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கும்போது ஆண்கள் திக்ரு செய்து கொண்டிருக்கு மிடத்துக்கு பெண்கள் எப்படி போவது? அன்னிய ஆண்கள் இருக்கு மிடத்துக்கு அன்னிய பெண்கள் போவது ஹராமாகும். பெண்கள் அவர்களின் வீட்டிலேயே சப்தம் இல்லாமல் திக்ர் செய்யலாம்.

**கேள்வி : ஆண்களுக்கு முரீது கொடுப்பதற்கு சுன்னத்தான முறை என்ன?**

பதில் : மேல் எழுதப்பட்ட ஷர்த்துக்கள் ஒரு ஷைகுக்கு இருந்து அவர் காமிலானவராகவும் பைஅத் பெறுபவர்களுக்குள்ள ஷர்த்துக்கள் பைஅத் பெறுபவரிடமிருந்து அவர் பைஅத் பெறும் அம்சத்தை எடுத்து நடக்கும் தன்மையிலும் இருந்தால் பைஅத் வாங்கலாம் பெறலாம்.

ரசூல் (ஸல்) அவர்கள் யுத்தத்திற்கு பைஅத் வாங்கும்போது கை அடித்து பைஅத் வாங்கினார்கள். புதிதாக இஸ்லாத்தில் வந்த பெண்களிடம் வாங்கும்போது ஷரீஅத் சட்டப்படி நடக்க வேண்டுமென்று பைஅத் சொல்லைக் கொண்டு வாங்கினார்கள் கைஅடித்து பைஅத் வாங்கவில்லை.

## பெண்கள் பைஅத் பெறும் முறை

**கேள்வி : துணியை பிடித்துக் கொண்டு முரீஆ கொடுப்பது கூடுமா? இது சுன்னத்தான முறையா? ரசூல் (ஸல்) அவர்கள் இவ்விதம் செய்து இருக்கிறார்களா? பெண்களின் புருஷனோ மஹ்ரமான ஆணோ இல்லாமல் பெண்களுக்கு முரீது கொடுக்கலாமா?**

பதில் : ஸூஃபியாக்கள் பெண்களுக்கு முரீது கொடுக்கும்போது பெண்ணின் புருஷனோ மஹ்ரமான ஆணோ இருந்தால் அப்போது இருவருக்கு (ஷைகு முரீது) மத்தியில் கோஷா முறை சட்டப்படி திரை வைத்த ஒரு துணியின் முந்தானையை பெண் ணிடத்திலும் மற்றொரு முந்தானையை ஷைகு இடத்திலும் இருக்க பைஅத் செய்து இருக்கிறார்கள் பெண்கள் தங்கள் புருஷனோ மஹ்ரமான ஆணோ இல்லாவிட்டால் பெண்கள் ஷைகிடம் முரீது வாங்குவது கூடாது; ஹராமாகும். புருஷனோ மஹ்ரமான ஆணோ இல்லாமல் பெண்களுக்கு முரீது கொடுக்கும் ஷைகு வழி கெட்டவனும் வழி கெடுப்பவனுமாகும். பைஅத்தில் மேலான முறை நபி (ஸல்) அவர்கள் செய்ததுதான். மேலும் வாலிப பெண்கள் நேரடியாக பார்த்து முரீது ஆக்குவது சுத்த ஹம்பக்காகும்.

**கேள்வி : எல்லா செயல்களுக்கும் ஹகீகிய்யான ஃபாயில் அல்லாஹ்தான் என்று பொதுமக்களுக்கு முன்னிலையில் எடுத்துரைக்கலாமா? லாஹிர் சட்டங்களை தெரியாத பாமர மக்களிடம் பாதின் சட்டங்களை எடுத்து பேசலாமா?**

பதில் : தவ்ஹீதே அஃப் ஆல்களை பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூறக்கூடாது. ஏனெனில் அதனுடைய தன்மையை விளங்க மாட்டார்கள். எந்த மனிதன் தவ்ஹீத அப் ஆலைப் பற்றி பேசலாம் என்றால் அவன் பனாவுடைய மர்தபாவுக்கு எய்திருக்க வேண்டும். அவனை முகத்தில் உதைத்தாலும் கோபம் வராது. அவன் வீட்டை சூறையாடப்பட்டாலும் அவன் சந்தோஷப்படுவான். இந்த நிலையும் உயர்ந்த நிலை அல்ல. இதை விட்டும் சீக்கிரம் அகல வேண்டும். மேலும் முயற்சித்து பனா உல் பனா, பகாஉல்பகா, பர்கு மஅல் ஜம்வு, ஜம்வுல் ஜம்வு, மர்தபாவை அடைய வேண்டும். இப்பேர்ப் பட்ட கட்டங்களை ஷைகே காமிலைக் கொண்டுதான் கடக்க முடியும். வெறுமனே சூஃபியாக்களின் கிதாப்களைப் பார்த்து வாய் அளவில் மொழிவதால் தன்ஜ்ஜுலாதே ஸித்தாவைப் பற்றி பயனில்லை. மேலும் கடைசி மூச்சு வரை பாதுகாத்து வர வேண்டும். மேலும் குர்பே பராயின், குர்பே நவாபில்களைக் கொண்டு பதவியில் உயர்ந்து கொண்டே போக வேண்டும். அப்போதுதான் திக்ரே ஜாரியாவிலும், ஃபாஸே அன்பாஸிலும் குறையும் தவறும் ஏற்பட வழி இராது. காமிலாகிவிட்டோம் என்ற பெருமையைக் கொண்டு ஷைத்தானின் வலையில் சிக்கி கொள்ளக்கூடாது. ஆனால் இந்த காலத்தில் ஒவ்வொருவரும் தாம் ஆரிபுபில்லாஹ் என்று பறைசாற்றி மக்களை ஏமாற்று கிறார்கள். சிலர்கள் உரூஜ்நுஜூல் என்று பேசிக் கொண்டு தன்னை பெரிய ஞானியாக ஆரிபுபில்லாஹ்வாக நினைக்கிறான்.

(தொடரும்)

## நான்கின் மதிப்பு

நான்கு விஷயங்களின் மதிப்பை நான்கு மனிதர்கள்தான் புரிந்து கொள்ள முடியும்.

1. வாலிபத்தின் மதிப்பை வயோதிகர்கள் தான் அறிய முடியும்.
2. சுகத்தின் மதிப்பை துன்பமுள்ளவர்கள் தான் அறிய முடியும்.
3. உடல்நலத்தின் மதிப்பை நோயாளிகள் தான் அறிய முடியும்.
4. வாழ்க்கையின் மதிப்பை இறந்தவர்கள் தான் அறிய முடியும்.

# உறக்கம் தொலைந்த இளம் இந்தியா!

## டாக்டர் கு.கணேசன்

அண்மையில் 39 வயது நிரம்பிய ஒரு மென்பொறியாளர் நள்ளிரவில் நெஞ்சுவலியுடன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காரணம் : கடுமையான மாரடைப்பு. இது போல் பணி ஓய்வை நெருங்கிக் கொண்டிருக்கும் ஓர் அரசு அலுவலர் அதிகாலையில் நெஞ்சு பாரமாக இருப்பதாகவும் மூச்சு விடச் சிரமப்படுவதாகவும் மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு மாரடைப்பு ஆரம்ப நிலையில் இருப்பது தெரிய வந்தது.

இருவருக்குமே உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, மன அழுத்தம், புகைப்பழக்கம், உடற்பருமன் இப்படி மாரடைப்புக்குரிய காரணம் எதுவுமில்லை. இன்னும் சொல்லப் போனால், முதலாமவர் வீட்டில் உடற்பயிற்சி மேற்கொள்கிறவர். அரசு அலுவலரோ மாரத்தான் ஓட்டக்காரர். அப்படியானால்,இவர்களுக்கு மாரடைப்பு ஏன் வந்தது? விசாரித்த அளவில் இருவருக்குமே இரவில் உறக்கம் குறைவு.

அண்மைக்காலமாக உறக்கமின்மை என்பது ஆபத்தான உடல் நலப்பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது. ஒரு தனியார் செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்தியாவில் 64% பேர் போதுமான அளவு உறங்குவதில்லை என்றும், 5% பேர் தினமும் 4 - 6 மணி நேரம் மட்டுமே உறங்குவதாகவும் தெரிவித்துள்ளனர். 10% பேர் 4 மணி நேரத்துக்கும் குறைவாகவே உறங்குவதாக அந்த கருத்துக் கணிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இளையோரிடம் ஒரு பெருந்தொற்று போல் பரவிவரும் உறக்கமின்மை பிரச்சனை தனி மனித பிரச்சனையாக கடந்துவிட முடியாது என்று உறக்க சிறப்பு மருத்துவர்கள் (Sleep Specialists) எச்சரித்துள்ளனர்.

### என்ன காரணம்?

கடந்த 2 வருட கொரோனா காலத்தில் பணி இழப்பு, ஊதியம் குறைப்பு, தொழில் நசிவு, வணிக நட்டம், வருமானக் குறைவு, கடன் சுமை, முதுமை, தனிமை, வறுமை இப்படியான காரணங்களால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டு உறக்கம் தொலைத்தவர்கள் அதிகம். அடுத்து பல பெரிய நிறுவனங்கள் கூடப் பணியாளர்களை குறைத்து விட்டதால், இருக்கும் பணியாளர்களுக்கு கூடுதல் பணி வழங்கப்பட்டது. அவர்கள்

நள்ளிரவை கடந்தும் பணியை முடித்துக் கொடுப்பது நடை முறைக்கு வந்தது. இந்தப் பணிச் சுமை அநேக இளையோரின் உறக்கமின்மைக்கு முக்கிய காரணமானது.

இன்றைய வாழ்க்கை முறையில் நள்ளிரவைத் தாண்டியும் தொலைக்காட்சி பார்ப்பது, யூடியூபில் சினிமா பார்ப்பது, வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற ஊடகங்களில் கருத்துக் களைப் பதிவிடுவது என சமூக வலைதளங்களில் நேரத்தை தொலைத்துவிட்டு, மிகவும் நேரம் கழித்துத் தூங்கச் செல்வது இளையோர் மத்தியில் வழக்க மாகி வருகிறது. ஊடகக் கருவி கள் உமிழும் ஒளிக்கதிர்கள், உடலில் மெலட்டோனின் சுரப்பைச் சுருக்கி இயற்கையாக அமைந்திருக்கும் உறக்கச் சுழற்சியைப் பாதிக்கிறது.

மேலும், மேற்கத்திய உணவு முறை உறக்கம் குறைவதற்கு அடித் தளம் போடுகிறது. இன்றைக்கு நடுத்தர வர்க்கத்தினர் பலரும் வாரத்தில் இரண்டு நாட்களுக் காவது இரவில் கடைக்குச் சென்று கொழுப்பும் எண்ணெயும் மிகுந்த உணவுகளை அதிகம் சாப்பிடுகின் றனர். இதனால் உணவு செரி மானம் அடைய அதிக நேரம் எடுத்துக் கொள்கிறது. செரிமானத் துக்காக வயிற்றுப் பகுதிக்கு அதிக ரத்த ஓட்டம் செல்வது உறக்கத்தைத் தாமதப்படுத்தும்.

**நோய்களின் வருகை**

ஒருவர் நாளொன்றுக்கு குறைந்தது 6 மணி நேரம் உறங்க வேண்டும். அதிகப்பட்ச மாக 8 மணி நேரம் உறங்கினால் நல்லது. ஒன்றிரண்டு நாட்களுக்கு உறக்கம் குறைந்தால் தவறில்லை. உறக்கம் குறை வது தொடர்வதானால் உடல் நலம், மனநலம், பணிநலம் ஆகியவை பாதிக்கப்படும். முதலில் வழக்கமான சுறுசுறுப்பு குறையும். கவனம் சிதறும். பணித்திறன் மறையும். மறதியும், களைப்பும் படுத்தும். இந்த தொடக்கநிலையில் எச்சரிக்கை யாக இல்லாவிட்டால் அடுத்த தாக எரிச்சல், கோபம், மன அழுத்தம் ஆகியவை அதிகரித்து ரத்த அழுத்தத்தை எகிறச் செய்யும். நோய்த் தடுப்பாற்றல் குறையும். பாலுறவு சிக்கலாகும்.

உறக்கம் என்பது அழற்சியை அடக்கும் ஆயுதம். இது இல்லாத போது உடலில் பல உறுப்புகளில் அழற்சி ஏற்படுகிறது. முக்கியமாக கணையத்தில் ஏற்படும். அழற்சி தான் நீரிழிவுக்கு அடிப்படை. அடங்காத நீரிழிவு இதயத்துக்கு ஆகாது என்று சொல்லத் தேவையில்லை. உடற்பருமன் என்பது ரத்த கொலஸ்ட்ராலை கூட்டி மாரடைப்பைத் தூண்டுவது உட்பட பல உடல்நலப் பிரச்சனை களுக்கு ஆணி வேராக இருப்பதை நாம் அறிவோம். அதே வேளை யில் உறக்கம் குறைவது உடற்

பர்மா நாட்டின் – இரங்கூன் நகரில் 1911–ல் துவங்கி 1936–ல் வெள்ளி விழா கண்ட
"நவீனகதா புத்தக சாலை "–யின் வாரிசுகளால் நடத்தப்படும் நிறுவனம்

CityAds BOOKS

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும் எங்களிடம் கேளுங்கள் -
உங்கள் இல்லம் வந்து சேரும், புத்தகங்கள் வி.பி.பி மூலம் பெறலாம்

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள் தேவைகளுக்கு
Call/ Whatsapp: 98410 16016 | www.cityadsbooks.com/islam

அரபி பாடப் புத்தகங்களும் அனுப்பித்தருகிறோம்

இஸ்லாமிய புத்தகங்கள்: படிக்க- பரிசாக கொடுக்க தன்னம்பிக்கை புத்தகங்கள்:

| | | | |
|---|---|---|---|
| ரியாளுஸ்ஸாலிஹீன் | Rs.400 | உலகைப் புரட்டிய ஒரு நொடிப் பொறிகள் | Rs.66 |
| அல்லுஃலுவு வல்மர்ஜான் | Rs.600 | உன்னை அறிந்தால் உலகை நீ ஆளலாம் | Rs.127 |
| அல் அதபுல் முஃப்ரத் | Rs.350 | தொழிலதிபர்கள் வணிகர்களுக்கான நினைவாற்றல் | Rs.77 |
| இஸ்லாமிய இல்லறம் | Rs.300 | வெற்றிக்கு வேண்டும் தன்னம்பிக்கை | Rs.155 |
| ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா | Rs.250 | பணத்தைக் குவிக்கும் நேர நிர்வாகம் | Rs.155 |
| முத்தும் பவளமும் | Rs.400 | வேகமாக படிக்க Rs.111/- Google-சுந்தர் பிச்சை | Rs.133 |
| பத்து சஹாபாக்கள் | Rs.250 | அச்சம் தவிர்- ஆளுமை கொள் | Rs.150 |
| சஹாபாக்கள் வரலாறு | Rs.300 | ரத்த சரிதம் - பாலஸ்தீன போராட்ட வரலாறு | Rs.350 |
| நபிவழி மருத்துவம் | Rs.350 | இஸ்லாம் ஓர் எளிய அறிமுகம் | Rs.30 |
| தாம்பத்ய வழிகாட்டி | Rs.120 | இனிய நபிமொழிகள் இருநூறு | Rs.60 |
| கணவன் மனைவி | Rs.100 | அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள் | Rs.50 |
| உள்ளம் அமைதி பெற | Rs.50 | இஸ்லாமிய உண்மைக் கொள்கை | Rs.100 |
| அர்ஷின் நிழலில் | Rs.200 | முஸ்லிம் மன்னர்கள் ஆண்ட இந்தியா | Rs.150 |
| பிசினஸ் வெற்றி ரகசியங்கள் | Rs.110 | முஹம்மத் இறைத்தூதர் ஏன்? | Rs.50 |

உங்கள் விளம்பரங்களை தமிழ்/ English நாளிதழ்களில் வெளியிட–
குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய– சந்தாவில் பெற

CityAds

1/2, St.Mary's Road, Mandaveli, Chennai-28
Email:ads@cityadschennai.com

Cell: 98410 16016

இன்பமான இனிய இல்லறத்திற்கு
பக்க விளைவுகள் கிடையாது

ஜிங்கா கோல்டு™

ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

பருமனுக்கும் வழி செய்யும் என்பதை பலரும் அறிவதில்லை. அண்மையில் அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநில பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் உறக்கம் குறைந்தவர்களுக்கு லெப்டின், க்ரிலின் எனும் இரண்டு ஹார்மோன்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது. லெப்டின் ஹார்மோன் நாம் சாப்பிடும்போது வயிறு நிரம்பி விட்டதை உணரச் செய்வது, க்ரிலின் ஹார்மோன் பசியைத் தூண்டி ஆவலோடு உண்ணச் சொல்வது, உறக்கம் குறைந்தவர்களுக்கு வயிறு நிரம்பியதை உணர முடியாமலும், அதிகப் பசி தொடர்வதாலும் கூடுதலாகச் சாப்பிட்டு உடற்பருமனுக்கு ஆளாகிறார்கள்.

இப்போதெல்லாம் வீட்டில் இருந்து கொண்டே அநேகரும் பணி செய்வதால் அலுவலகத்தில் நடப்பதுபோல் வீட்டில் நடப்பது குறைந்து விட்டது. அதிக நேரம் அமர்ந்து கொண்டே பணி செய்வது அதிகமாகிவிட்டது. இரண்டு மணி நேரம் தொடர்ந்து அமர்ந்து கொண்டே பணி செய்வது ஒரு சிகரெட் புகைப்பதற்கு சமம். இளம் வயதில் மாரடைப்பு வருவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணம் தான். அதே போல் இரவில் தாமதமாக உறங்கச் சென்று காலையில் நேரம் கழித்து கண் விழிப்பதால் இன்றைய இளையோருக்கு உடற்பயிற்சி ரொம்பவே குறைந்து விட்டது. சோம்பலான வாழ்க்கை முறை இயல்பாகி விட்டது. இது மாரடைப்புக்கு வசதியாகி விட்டது. உறக்கம் குறையும் பிரச்சனை இப்போது குழந்தைகளுக்கும் பரவி வருகிறது என்பது கூடுதல் கவலை.

**என்ன செய்யலாம்?**

இளைய சமூகத்தில் போதுமான உறக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இரு அரசுகளும் புதிய திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். வல்லுனர்களின் வழிகாட்டும் பயிற்சிகள், குறும்படங்கள், உடற்பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றின் வாயிலாக இதை மேற்கொள்ளலாம். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மனநல ஆலோசகர்களை நியமித்து ஆழ்ந்த உறக்கத்துக்கு உதவும் ஆலோசனைகள் தருவதை கட்டாயமாக்கலாம். இந்தியாவில் ஐ.எஸ்.எஸ்.ஆர். (Indian Society for Sleep Research) அமைப்பு இந்த விழிப்புணர்வு தொடர்பாக முனைந்து செயல்படுகிறது. இதற்கு போதிய நிதியுதவி வழங்கி அரசுகள் ஆதரிக்கலாம். இதன் மூலம் இளம் வயதிலேயே தூக்க மாத்திரைகளுக்கு அடிமையாவதையும் பணித்திறன் குறைவதையும் வாகன விபத்துகளையும் தடுக்கலாம். கொரோனா பெருந் தொற்று காலத்தில் அதிக கவனம் பெறாமல் அமைதியாகப் பரவிவரும் உறக்கமின்மை எனும் ஆட்கொல்லியை அடக்க அரசுகள் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமே.

# இஞ்சி (GINGER)

மவ்லவீ ஹாஃபிழ் அ. முஹம்மது அலீ ஜின்னாஹ் சிராஜி

நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதில் இஞ்சி முக்கியப் பங்கு வகிக்கிறது. இதை அடிக்கடி உட்கொள்ள வேண்டும்.

## சுவனவாசிகளுக்கு இஞ்சி கலந்த குடிபானம்

இறைவன் குர்ஆனில் சுவர்க்கவாசிகளுக்கு வழங்கப் படும் சுவையான பானத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்.

**“இஞ்சியின் சுவை கொண்ட ஜன்ஜபீல் எனும் உயர்தரமான பானம் சுவனவாசிகளுக்கு புகட்டப்படும்.”**

– அல்குர்ஆன் (76 : 17)

ஹள்ரத் அபூ ஸஈதுல் குத்ரீ (ரளி) அறிவித்துள்ளார்கள். இந்தியாவிலிருந்து ஒரு மன்னர் (சேரமான் பெருமான்) நபி (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தபோது இஞ்சி நிறைந்த ஒரு பையை அன்பளிப்பாகத் தந்தார். அதை அனைவருக்கும் நபி (ஸல்) அவர்கள் பங்கிட்டுத் தந்தார்கள். அதில் ஒரு பங்கை எனக்கும் தந்தார்கள். (நூல் : ஹாகிம்)

அந்த மன்னர் கேரளாவைச் சார்ந்த சேரமான் பெருமான் என வரலாற்றுக் குறிப்புகளில் உள்ளது. சந்திரன் இரண்டாகப் பிளந்து பிறகு ஒட்டிக் கொண்ட அதிசய நிகழ்வைக் கண்டு வியந்து அதற்குக் காரணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் என்பதை அறிந்து அவர்களைச் சந்திக்கச் சென்றார். இஸ்லாத்தை யும் ஏற்றார் என்பது நீண்ட வரலாறு.

இஞ்சியை காய வைத்தால் அதை சுக்கு என்போம். அந்த மன்னர் அவ்வாறு காய வைத்து எடுத்துச் சென்றிருக்கலாம். மேலும், இந்தியாவில் இருந்து அன்பளிப்பாகக் கொண்டு செல் வதற்கு எத்தனையோ பொருட் கள் இருந்தாலும் அவர் இங்கிருந்து இஞ்சியை பையில் சுமந்து சென்றது இஞ்சியின் மதிப்பைக் காட்டுகிறது.

## இஞ்சியின் தனித்தன்மை

இஞ்சி காரத்தன்மை மிகுந் தது. இந்திய உணவுகளில் இஞ்சி, அதன் ருசிக்காகவும், மருத்துவ குணங்களுக்காகவும் சேர்க்கப்படுகிறது. இஞ்சியில் இருக்கும் விசேஷத் தன்மை உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

இந்தியாவில் ஆயுர்வேத குறிப்புகளில் இஞ்சி மிக முக்கிய

மூலிகைப் பொருளாக முன்னிறுத்தப்படுகிறது. ஆயுர் வேத மருத்துவப் பயிற்சியாளர் கள் இஞ்சியை ஜீரண சக்தியை பெருக்கக்கூடிய, பசியைத்தூண்டக் கூடிய, உடலின் நுண்ணிய பாதைகளை சுத்திகரிக்கக்கூடிய சக்தி வாய்ந்த மருந்தாக பரிந்துரைக்கின்றனர். இஞ்சி உடல் தசைகளுக்கு வலுவை தரக்கூடிய ஊட்டச்சத்துக்களை மேம்படுத்துகிறது. மேலும், ஆயுர் வேதத்தில் மூட்டு வலிக்கும், சுவாசப் பிரச்சனைக்கும் மலச் சிக்கலுக்கும் தீர்வாக உள்ளது.

ஜலதோஷம் நீங்கிட கொஞ்சம் இஞ்சிச்சாறும், தேனும் சமஅளவு கலந்து மூன்று நாட் கள் காலையும், மாலையும் சாப்பிட்டு வந்தால் ஜலதோஷம் நீங்கி விடும்.

சிறிது இஞ்சியை நீரில் தட்டிப்போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அதில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து குடித்து வந்தால், நெஞ்சுப் பகுதியில் தேங்கியுள்ள சளி பிரச்சனைக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.

இஞ்சியைத் தட்டி நீரில் போட்டு கொதிக்கவைத்து இறக்கி, அதில் தேன் கலந்து குடித்தால் செரிமானப் பிரச்சனைகள் நீங்கும். அதுவும் இதை காலையில் குடித்தால் செரிமான மண்டலம் சுத்தமாகி அதன் செயல்பாடு அதிகரிக்கும்.

பல்வலி ஏற்படும்போது இஞ்சி துண்டை ஈறுகளில் மசாஜ் செய்யலாம். அல்லது இஞ்சியை நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து. அந்த நீரினால் வாயைக் கொப்பளிக்க வேண்டும். காலை யில் எழுந்ததும் ஒரு சிறிய துண்டு இஞ்சி அல்லது இஞ்சி சாற்றைக் குடித்து வந்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். பசியுணர்வுகள் அதிகமில்லாதவர்கள், காலை யில் சிறிது இஞ்சியை வாயில் போட்டு மென்று வந்தால் பசியுணர்வு அதிகரிக்கும்.

இஞ்சியைத் தட்டி, தேனீர் (Tea) கொதிக்க வைக்கும்போது அதில் சேர்த்து கொதிக்க வைத்து தேனீர் (Tea) பருகலாம். சுவையும் நன்றாக இருக்கும். உடலுக்கும் நல்லது.

இஞ்சி தேன் கலவை செரி மானத்தை மேம்படுத்துவதோடு வயிற்றில் தங்கியுள்ள கொழுப்பைக் கரைக்கும். இத னால் தொப்பை குறையும். நல்ல மாற்றத்திற்கு தொடர்ந்து 40 நாட்கள் இஞ்சி சாற்றில் தேன் கலந்து குடித்து வர வேண்டும். வயிறு தொடர்பான பிரச்சனை கள் தீவிரமாக இருக்கும்போது இஞ்சி சாப்பிடுவதால் ஃபுட் பாய்சனிங் தவிர்க்கப்படுகிறது.

குமட்டல், வாந்தி போன்ற அஜீரணக் கோளாறுகளுக்கு இஞ்சி நல்ல மருந்தாக உள்ளது.

வாழ்க நலமுடன்! **11.07.21 முதல் இனிதே ஆரம்பம்** வாழ்க பல்லாண்டு!

# குட்லக் ஹெல்த் கிளினிக்

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

டாக்டர் **ரியாஸ் தய்யில்** (BAMS, FSR)

**சிறப்பு மருத்துவர், கோட்டக்கல் – கேரளா**

தங்கம் டவர், சத்தியமூர்த்தி ரோடு,

**(குட்லக் நாட்டு மருந்துகடை அருகில்),**

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோணாவுக்கு பிந்திய விளைவுகள்

**Ayurvedic Medicines & Herbal Products Available Here**

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

**Working Hours : 9.00 am to 1.00 pm, 4.00 pm to 8.30 pm**

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**94433 46313, 98650 48082** Email : kottakkalayurvedapdkt@gmail.com

இஞ்சியிலுள்ள வேதிப் பொருட்கள் மூளையில் செயல்பட்டு நரம்பு மண்டலத்தை கட்டுப்படுத்தி குமட்டல் வாந்தி மயக்கத்தை தடுக்கிறது என்பதை சில ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஹாங்காங்கில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியின்படி மூட்டு வலியுள்ள நோயாளிகளுக்கு தசை இறுக்கத்தை சரி செய்யவும் உடற்பயிற்சியின் போது ஏற்படும் சுளுக்கு மற்றும் தசை வலியைக் குறைக்கவும் இஞ்சி எண்ணெயும், ஆரஞ்சும் உபயோகப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

ஜார்ஜியா பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஒரு ஆய்வில் 40 தன்னார்வத் தொண்டர்கள் அடங்கிய இரு குழுக்களுக்கு பச்சையாகவும் வறுத்தும் இஞ்சியை தொடர்ந்து 11 நாட்கள் வழங்கி அவர்களை கவனித்தனர். பின்னர் வெளியான முடிவின்படி உடற்பயிற்சியால் ஏற்பட்ட தசைவலியை 25% அளவிற்கு இஞ்சி குறைத்துள்ளது எனத் தெரிய வந்தது.

மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு உண்டாகும் வலியை குறைக்க இஞ்சி உதவுகிறது. ஈரானில் 70 மாணவிகளிடத்தில் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு நிகழ்த்தப்பட்ட ஆய்வில் மாதவிலக்கின் முதல் மூன்று நாட்களில் ஒரு குழுவினருக்கு இஞ்சியும், இன்னொரு குழுவினருக்கு வேறு மருந்தும் தரப்பட்டது. வேறு மருந்து எடுத்துக் கொண்டவர்களை விட இஞ்சி வில்லைகளை எடுத்துக் கொண்டவர்களிடம் 82.85% வலி குறைந்திருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

குறிப்பு :- கொரோனா வேகமாகப் பரவி வரும் சூழ்நிலையில் பின்வரும் கஷாயம் மிகவும் நல்லது. இஞ்சி, மிளகு, கிராம்பு ஆகியவற்றைத் தட்டி அத்துடன் வெற்றிலை, எலுமிச்சை (தோலுடன்), மஞ்சள் தூள் ஆகியவற்றை ஒரு பாத்திர நீரில் கொதிக்க வைத்து அது பாதியாக ஆனபின் அதை வடிகட்டிக் குடிப்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என பல சித்த மருத்துவர்கள் கூறுகின்றனர்.

---

## வல்லோனே! கிருபை செய்வாயாக!

"எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்."

– அல்குர்ஆன் (7 : 23)

# தீர்க்கமான ஞானம்

மவ்லவீ **வி.அப்துல் ரஷீத்** ஃபாஸில் ஜாமியா நிஸாமியா
எம்.ஏ., பி.டிஹெச்.,

"எதைப்பற்றி உமக்கு[த் தீர்க்க] ஞானமில்லையோ அதை[ச் செய்யத்] தொடர வேண்டாம்"
- அல்குர்ஆன் (17 : 36)

எந்த விஷயத்தில் நமக்கு தீர்க்கமான ஞானம், அறிவு, தெளிவு, விவரங்கள் இல்லையோ அந்த விஷயத்தில் நாம் ஈடுபட வேண்டாம் என்று இந்த திரு மறை வசனம் நம்மை எச்சரிக்கிறது.

ஒரு விஷயத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல் அதில் ஈடுபட்டால் நிச்சயமாக அதில் தோல்வி தான் ஏற்படும். நாம் தோற்றுப் போவதை அல்லாஹ் விரும்பவில்லை.

அதனால்தான் நமக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகை யில் அல்லாஹ் இந்த திருமறை வசனத்தின் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறான்.

காதால் கேட்பதும் பொய், கண்ணால் பார்ப்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்பது பழமொழி.

ஆகவே, எந்த விஷயத்தில் நாம் ஈடுபட்டாலும், அதைப் பற்றிய முழு விவரங்களையும், விளக்கங்களையும் தெரிந்து கொண்டு அதில் ஈடுபட வேண் டும் என்பதுதான் இந்த திருமறை யிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் படிப்பினையாகும்.

அத்தகைய பரிபூரணமான விவரங்களும், விலாவாரியான விளக்கங்களும், முழுமையான அறிவும் தான் திருமறையில் சொல்லப்படும் தீர்க்கமான ஞானம் ஆகும்.

சிலருடைய தூண்டுதலி னால் பலர் தங்களுக்கு தெரியாத தொழில்களையோ அல்லது வியாபாரத்தையோ ஆரம்பித்து பின் அதில் அவர்கள் நஷ்டம் அடைந்து விடுகிறார்கள். அதற்கு பின் என்னுடைய கூட்டாளி என்னை ஏமாற்றி விட்டார் என்று புலம்புவார்கள். இப்படிப்பட்ட நஷ்டங்களை சரிகட்ட வேண்டுமென்றால் எத்தனை ஆண்டுகளாகும் என்பது யாருக்கும் தெரியாது.

ஆகவே சம்பந்தப்பட்ட வேலை அல்லது தொழில், அல்லது வியாபாரத்தை பற்றிய

தீர்க்கமான ஞானம் நம் கையில் இருந்தால் நஷ்டங்களும், ஏமாற்றங்களும் நம்மை தீண்டாது.

கார்பொரேட் நிறுவனங்களும் தங்களுக்கு தெரியாத துறைகளில் இறங்குவதில்லை. மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்கள் கணினிகளை தயாரிப்பதில்லை. இதைப் போல் கணினிகளை தயாரிக்கும் நிறுவனங்கள் கட்டிடங்கள் கட்டும் தொழிலில் இறங்குவதில்லை. அப்படியே தங்களுக்கு தெரியாத துறைகளில் இறங்கும்போது அவர்கள் அந்த துறையில் பழுத்த அனுபவமுள்ள தொழில் நுட்ப நிபுணர்களை இயக்குனர்களாக தங்களின் நிறுவனத்தில் அமர்த்தி கொள்கிறார்கள். ஆலோசகர்களாகவும் நியமித்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் வெவ்வேறு விதமான நெளிவு சுளிவுகள் இருக்கும். நன்மைகளும் இருக்கும். லாபங்களும் இருக்கும். ஆனால், அவற்றை அடைவதற்கு பலவிதமான தடைகளும் இருக்கும். தடங்கல்களும் இருக்கும். இதையெல்லாம் கையாளுவதற்கு அந்த துறை சம்பந்தமான ஞானம் அவசியமாகும்.

இதுதான் திருமறையில் சொல்லப்படும் தீர்க்கமான ஞானமாகும். திருமறையில் சொல்லப்படும் இந்த தீர்க்கமான ஞானம் இன்றைய உலகில் பல்வேறு துறைகளில் பல்வேறு பெயர்களுடன் விளங்குகின்றது.

ஒரு தொழில் துறையிலோ அல்லது வியாபார துறையிலோ அல்லது வேலையிலோ ஒருவருக்கு இருக்கும் சிறந்த அறிவை டொமைன் நாலெட்ஜ் (domain knowledge) என்று கூறுகிறார்கள். இதற்கு துறை சார்ந்த அறிவு என்று அர்த்தமாகும்.

இந்த டொமைன் நாலெட்ஜ் (domain knowledge) எனப்படும் துறை சார்ந்த அறிவுதான் திருமறையில் சொல்லப்படும் தீர்க்கமான ஞானமாகும்.

எந்த துறையில் இறங்கினாலும் அந்த துறை சம்பந்தப்பட்ட தீர்க்கமான ஞானம் அவசியமாகும்.

ஏறத்தாழ 586 ஆண்டுகளுக்கு முன் பிறந்த அரபு நாட்டு மாலுமி அஹ்மத் இப்னு மஜீத். இவர் இங்கிலாந்து நாட்டை ஆண்ட மன்னர் நான்காம் எட்வர்டுக்கு எழுதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டார் :

"உங்களிடம் இருக்கும் எக்கச்சக்கமான கப்பல்கள் கடல் கொந்தளிப்பிலிருந்து உங்கள் மாலுமிகளை காப்பாற்றாது. ஆனால் கடலில் வீசும் காற்றை பற்றிய ஞானம் மட்டும்தான் அவர்களை காப்பாற்றும்."

ஆகவே மாலுமிகளுக்கு கடலில் வீசும் காற்றை பற்றிய ஞானம்தான் டொமைன் நாலெட்ஜ் (domain knowledge) எனப்படும் துறை சார்ந்த அறிவு ஆகும். தீர்க்கமான ஞானமாகும்.


நாங்கள் எங்கள்
திறனை நிரூபிக்கிறோம்!

9710 144000

Shalom
CONSTRUCTION

ஒரு சதுர அடிக்கு
கட்டுமான செலவு
ரூ.1499/-
9710 144000

20
ANNIVERSARY
ஆண்டு விழா
சலுகை!




சிறப்பாகவும், எளிதாகவும், விரைவாகவும்
கட்டி முடிக்க எங்களை அணுகவும்

www.shalomconstruction.in

FREE! PLAN
ELEVATION
STRUCTURAL DRAWING

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

ஃபோர்ட் கார்களை தயாரிக்கும் ஃபோர்ட் கார் நிறுவனத்தின் நிறுவனரும், உரிமையாளருமான ஹென்றி ஃபோர்ட் ஒரு முறை அவரின் பொறியாளர்களிடம் கூறினார் :

"காரில் என்ஜினை பொருத்துவது முக்கியமாகும். ஆனால், அதைவிட முக்கியம் அந்த என்ஜினை பற்றிய ஞானமாகும்."

ஆகவே, கார் பொறியாளர்களுக்கு என்ஜினை பற்றிய ஞானம் தான் டொமைன் நாலெட்ஜ் எனப்படும் துறை சார்ந்த அறிவு ஆகும். தீர்க்கமான ஞானமாகும்.

எனவே, அந்தந்த தொழிலுக்கு சம்பந்தப்பட்ட டொமைன் நாலெட்ஜ் எனப்படும் துறை சார்ந்த தீர்க்கமான ஞானம் மிக மிக அவசியமாகும்.

ஒரு முறை கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலிடம் ஒருவன் "ஐயா, நான் ஒரு சாதாரண தச்சன். நான் எப்படி என் தொழிலில் வெற்றி பெற முடியும்?" என்று கேட்டான்.

அதற்கு அறிஞர் அரிஸ்டாட்டில் சொன்னார் : நீ ஒரு சாதாரண தச்சனாக இருக்கலாம். ஆனால், நீ செய்யும் நாற்காலி ஒரு சாதாரணமான நாற்காலியாக இருக்கக்கூடாது. அந்த நாற்காலி தான் உலகத்திலேயே ஒரு மிகச் சிறந்த நாற்காலியாக இருக்க வேண்டும். ஆகவே, நீ அப்படிப்பட்ட நாற்காலியை செய்ய கற்றுக் கொள். அப்போது நீ உன் தொழிலில் வெற்றி பெறலாம்.

ஆகவே, உலகத்திலேயே ஒரு சிறந்த நாற்காலியை செய்வது தான் ஒரு தச்சனுக்கு இருக்க வேண்டிய தீர்க்கமான ஞானம் எனப்படும் துறை சார்ந்த அறிவாகும்.

எந்த தொழிலையும் செய்யலாம். சிறப்பான தொழில், சிறப்பில்லா தொழில் என்று இஸ்லாத்தில் வேறுபாடுகள் இல்லை. ஸஹாபாக்கள் கூட உழைப்பாளிகளாக இருந்திருக்கிறார்கள். ஆனால் செய்யப்படுபவை யாவும் ஹலாலாக இருப்பது அவசியமாகும்.

"செய்வன திருந்த செய்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி பாடல். ஒரு வேலையை எந்த குறைபாடுகளும் இல்லாமல் செம்மையாக திருத்தமாக செய்து முடிப்பதற்கு அந்த துறையை சார்ந்த தீர்க்கமான ஞானம் மிக அவசியமாகும்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

என்பதுதிருக்குறள். பிரமிக்கத்தக்க அரிய காரியங்களை செய்பவர்கள் தான் பெரியவர்கள். அப்படி செய்ய முடியாதவர்கள் சிறியவர்கள்.

திருமறையில் சொல்லப்பட்ட தீர்க்கமான ஞானம் எனப்படும் துறை சார்ந்த அறிவுதான் பிரமிக்கத்தக்க அரிய காரியங்களை செய்வதற்கு அடிப்படையாக அமையும்.

இந்த தீர்க்கமான ஞானம் எனப்படும் துறை சார்ந்த அறிவை

ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

கற்றுக் கொள்வது என்பது கல்லூரிகளில் அல்லது பல்கலைக் கழகங்களில் படிப்பது மட்டுமல்ல. நூல்களை படித்தும் அல்லது அனுபவஸ்தர்களிடமிருந்தும் கற்று கொள்வதும் கல்விதான். தொழிற் கூடங்களில் பயிற்சி பெறுவதும் கல்விதான்.

தெரிந்தவர்களின் தொழிற் கூடங்களுக்கு சென்று பணி செய்து அனுபவம் பெற்றுக் கொள்ளலாம். முழு நேர அல்லது பகுதி நேர பணியும் செய்யலாம். இது அனுபவ கல்வியாகும்.

கல்விக்கு நபி (ஸல்) அவர்கள் மிக பெரிய முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய மூன்று செயல்களைத் தவிர மற்ற அனைத்தும் நின்று விடுகின்றன; 1. நிலையான அருட்கொடை 2. பயன் பெறப்படும் கல்வி. 3. அவனுக்காகப் பிரார்த்திக்கும் [அவனுடைய] நல்ல குழந்தை"**

(ஸஹீஹ் முஸ்லிம் 3358)

இதை ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆகவே நாம் செய்யும் வேலை, தொழில் அல்லது வியாபாரம் எதுவாக இருந்தாலும், அவை சம்பந்தப்பட்ட பயன்தரக் கூடிய தீர்க்கமான ஞானம் எனும் கல்வியை நாம் பெற்று கொள்வது மிக முக்கியமாகும்.

இதைப் போல், தேர்வு எழுதுபவர்களும் அந்த தேர்வுக்கான பாடங்களை நன்றாக கற்று தீர்க்கமான ஞானத்தைப் பெற்ற பின் தான் அந்த தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

வேலைக்காக நேர்முக தேர்வுகளுக்கு செல்பவர்களும் அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு சற்றும் தயங்காமல் பதில்கள் சொல்லும் அளவிற்கு தகுந்த தீர்க்கமான ஞானத்துடன் செல்ல வேண்டும்.

வானம் நமக்கு கைவசமாக வேண்டுமென்றால், முதலில் நாம் செய்யும் தொழிலின் ஞானம் கைவசமாக வேண்டும்.

இதைப் போல் வாழ்க்கையில் எந்த விஷயத்தை பற்றி நாம் முடிவை எடுப்பதற்கு முன், அந்த விஷயத்தைப் பற்றிய முழு விவரங்களை நாம் தீர்க்கமாக தெரிந்து கொள்ள வேண்டும்.

பிரிஸ்டல் பல்கலைக்கழகம் (University of Bristol) மனிதர்கள் முடிவுகள் எடுப்பதை பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தி ஆராய்ச்சி கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒரு காலக் கட்டத்தில் சரி என்று எடுக்கப்பட்ட முடிவுகள் இன்னொரு காலக் கட்டத்தில் சரி இல்லாமல் போய் விடுகிறது என்று அந்த ஆராய்ச்சி கட்டுரை கூறுகிறது.

இதற்கு காரணம் என்ன வென்றால், மனிதர்களின் நிதி நிலைமையில் ஏற்படும் மாற்றங்கள், தொழில்களில் ஏற்படும் லாபங்கள் அல்லது நஷ்டங்கள், உத்தியோகங்களை அடைவது அல்லது இழப்பது ஆகியவற்றால் மனிதர்களின் சூழ்நிலைகள் காலப் போக்கில் மாறி கொண்டே வருகின்றன.

இது மட்டுமல்லாமல், குடும்பங்களில்நிகழும்திருமணம், பிறப்பு, இறப்பு, உறவுகள் அல்லது பிரிவுகள் ஆகியவற்றாலும் மனிதர்களின் சூழ்நிலைகள் காலப்போக்கில் மாறிக் கொண்டே வருகின்றன.

இப்படி சூழ்நிலைகள் மாறிக் கொண்டே வருவதால் ஒரு கால கட்டத்தில் சரி என்று எடுக்கப் பட்ட முடிவுகள் இன்னொரு காலக்கட்டத்தில் சரியில்லாமல் போய் விடுகிறது.

இதனால், அப்போதைய காலக்கட்டத்திற்கு தகுந்தாற் போல் வேறுவிதமான முடிவுகளை எடுக்க வேண்டியதிருக்கிறது என்றும் அந்த ஆராய்ச்சி கட்டுரை கூறுகிறது.

இவ்விதமாக மாறிக் கொண்டே வரும் சூழ்நிலைகளில் ஒரு விஷயத்தை பற்றி முடிவெடுக்க வேண்டுமென்றால், அந்த விஷயத்தை பற்றிய தீர்க்கமான ஞானம் நமக்கு மிகவும் அவசியமாகும்.

முடிவுகளை நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய சரியான கால கட்டங்கள், அவைகளை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான பணம், பொருள், மனித உதவிகள் ஆகிய பூரண புள்ளிவிவரங்களை நாம் சேகரித்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட பரிபூரண மான புள்ளி விவரங்களும், விளக்கங்களும், விலாவாரியான தகவல்களும்தான் திருமறையில் சொல்லப்படும் தீர்க்கமான ஞானமாகும்.

தீர்க்கமான ஞானம் இல்லாமல் எதையும் தொடர வேண்டாம் என்றும் திருமறையில் நமக்கு அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

ஆகவே, தெளிவான மனதுடன், தீர்க்கமான ஞானத்துடன் நாம் முடிவுகளை எடுத்தால் நம் வாழ்வில் வசந்தம் வீசும் என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் கிடையாது.

ஆகவே, நாம் செய்யும் தொழில், வியாபாரம், வேலைகள் மற்றைய செயல்பாடுகள் அனைத்திலும் நாம் நேர்மையாக நடந்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்று மறுமையில் வெற்றி அடைவோமாக!

நாம் ஈடுபடும் துறைகளில் எல்லாம் திருமறையில் சொல்லப் படும் தீர்க்கமான ஞானத்தை பெற்று இம்மையிலும் வெற்றி அடைவோமாக!

# சதிகார யூதர்களின் அதிகார ஆணவம்

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

“கடுமையாகத் தண்டிக்கப்படுவீர்! கொலை குற்றவாளிகளாகிய நீங்கள் யாவரும் கொல்லப்படுவீர்கள்!” இது இறைத்தூதரின் கட்டளை. முஹம்மது பின் மஸ்லமா (ரளி) சிங்கமாக கர்ஜித்தார்.

யூதர்களை அச்சம் பற்றிக் கொண்டது. என்ன செய்வதென் றறியாது திணறினர். தங்களின் சதிச் செயலுக்கு சரியான தண்டனை கிடைத்துவிட்டதாக சிலர் கருதினர். நிம்மதியாக இருந்து வந்த நமது வாழ்க்கையை அதிகார மிக்க இந்த சதிகார தலைவர்கள் அநியாயமாக அழித்துவிட்டனரே... கண்களில் மண் அள்ளிப் போட்டு விட்டனரே! என அவர்களில் சிலர் கவலைப்பட்டனர்.

“தப்புக்கேற்ற தண்டனை கிடைத்துவிட்டது” என்று எண்ணிய பலர் கோட்டையை விட்டும் புறப்பட ஆயத்தமாயினர். யூதத் தலைவர்களில் “ஹுயை” போன்ற சிலர், அவசரப்படாதீர்கள்! நாமொன்றும் அனாதைகளல்லர். ஆதரவற்றவர்களுமல்லர். இம் மதீனாவிலும் இதன் சுற்று வட்டாரங்களிலும் நமக்கு ஆதரவாக - பக்கபலமாக பலர் இருக்கின்றனர். நமது கோத்திரத் தாரான பலமிக்க “பனீகுரைளாக் களும் இருக்கின்றனர். நமது இனமாகிய அவர்கள் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்கள் என உறுதி கூறினர்.

வஞ்சகர் தலைவன் - வஞ்சகத் தலைவன் இப்னு உபை, “யூதர்களே எனது நேசர்களே! நீங்கள் எதற்கும் கவலைப்படா தீர்கள்! அந்த முஹம்மதின் உத்தரவை மதிக்காதீர்கள். தூக்கி யெறியுங்கள். நானும் எனது குழுவினரும் இருக்கின்றோம். எல்லா வகையிலும் உங்களுக்கு உதவுவோம்... நமக்கு வேண்டிய குழுவினர் ஆங்காங்கு வசிக் கின்றனர். உங்களுக்கு ஆதரவாக அந்த முஹம்மதுக்கு எதிராக அவர்களை நான் ஒன்று திரட்டு வேன். அதன்பின் என்ன? ஆட்சியே நமதுதான்! எனப் பெருமையாகப்பேசி அவர்களைக் குளிரவைத்தான். எப்போதுமே நல்லதைக் கெடுப்பதும் நிம்மதியைக் குலைப்பதும் அமைதியை அழிப்பதும் குழப்

பத்தை வளர்ப்பதும் குறுக்குச் சால் ஓட்டுவதுதானே நயவஞ்சகர் களின் வழக்கம். துரோகம் துரோகத்துக்கு துணை போனது. இது போதாதா அந்த யூதர் களுக்கு?

தங்களுக்குப் பெரும் பல மும் உதவியும் இருக்கின்றன என எண்ண ஆரம்பித்தனர். இந்த மதீனாவில் வாழும் முஸ்லிம் களைத் தவிர மற்ற யாவரின் பேராதரவும் இருக்கும்போது முஹம்மதின் உத்தரவுக்கு நாம் ஏன் அடிபணிய வேண்டும்? இரண்டில் ஒன்று பார்த்திடு வோம் எனும் மமதையும், ஆணவ மும் அவர்களுக்கு வந்து விட்டது. எப்போதுமே யூதர்களுக்கு யாருடைய முதுகிலாவது ஏறி சவாரி செய்ய வேண்டும். அதுவே அவர்களின் பாரம்பரிய இயல்பாகவும் பலமாகவும் இருந்து வருகின்றது.

உதவி - கடன் - வட்டி எனும் பெயரில் தங்களது பொருளா தார பணபலத்தைப் பிறர்மீது திணித்து, ஊடுருவி அவர்களுக்கு பெரும் சுமையை ஏற்றி திணறச் செய்து பின்னர் அவர்களை தங்கள் எண்ணப்படியெல்லாம் ஆட்டி வைத்துக் காரியம் சாதிப் பதும் நினைத்ததை முடிப்பதும் யூதர்களின் அன்றாட வாழ்வின் வாடிக்கையாகும்.

இதனை அன்றைக்கும் செய்தனர். கடந்த காலங்களில் சோவியத் ரஷ்யாவின் முதுகில் ஏறிக் கொண்டிருந்தனர். அண்மைக்காலத்திலும் இன்றைய நாளிலும் உலகின் ஏகபோக ஒரே சட்டாம்பிள்ளை எனக் கூறிக் கொள்ளும் அமெரிக்காவின் முதுகில் இல்லை தலையில் ஏறிக் கொண்டு அத்தனை அக்கிரமங்களையும் அட்டகாசங்களையும் துணிந்து செய்து கொண்டிருக்கின்றனர். யூதத்துவ அகங்கார அதிகாரம் ஐ.நா. மன்றத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. பெரும்பான்மையான நாடுகளில் நேர்மையான தீர்மானங்கள் இஸ்ராயீலின் நிழலான அமெரிக்கா வால் தோற்கடிக்கப்பட்டுத் தூக்கியெறியப்பட்டுக்கிடக்கின்றன. அல்லது செயல்படுத்த முடியா மல் முடங்கிக் கிடக்கின்றன. அண்மையில் பலஸ்தீனத்தில் இஸ்ரேலியர்கள் புரிந்த பயங்கரப் படுகொலைகளை உலகமே ஒன்று சேர்ந்து கண்டித்திருக் கின்றது. உலகளாவிய மனித நேய அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. மித வாதியான பலஸ்தீன அதிபர் யாஸிர் அரஃபாத்துக்குக் கூட கோபம் வந்திருப்பதாகத் தெரிகின்றது. என் செய்ய?

சிறுவர்கள், குழந்தைகள், நோயாளிகள், முதியவர்களைக் கூட சிறிதும் இரக்கமில்லாமல் சகட்டுமேனிக்கு சுட்டுப் பொசுக்கிக் கொலை செய்திருக்

கின்றார்கள். இது இந்த நவ நாகரிக 21ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்கின்றது என்றால் இதை யாரிடம் சொல்வது? அறிவியல் பண்புகள் பற்றிப் பேசும் மனிதர்கள் வெட்கித் தலைகுனியுமளவுக்கு மனிதமே வெட்கப்படுமளவுக்கு இவர்களின் அரக்கத்தனம் அமோகமாக அரங்கேறி இருக்கின்றது. வார்த்தைகளால் இரக்கப்படுவதும் அழகிய மொழிகளால் அனுதாபம் தெரிவிப்பதும் உயிர்களுக்கு உத்தரவாதமாகாது. அபலைகளை அப்பாவிகளைப் பாதுகாக்காது. தொடர்ந்து நிகழ்ந்து வரும் அக்கிரமங்களை நிறுத்தச் செய்ய வேண்டும். படுகொலைகள் தொடர்ந்து நிகழ்ந்து வரும் அக்கிரமங்களை நிறுத்தச் செய்ய வேண்டும். படுகொலைகள் உயிர்வதைகள் இனி தொடராது இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இதுதான் மனிதகுலத்திற்கு வாழும் உரிமையைத் தரும்.

யூதத் தலைவர் 'ஹுயை' படை உதவி வேண்டி, தனது நட்புக்குழுவினர்களுக்கு அவசரச் செய்தி அனுப்பினார். ஆட்சித் தலைவர் அண்ணலிடம் தனது உடன்பிறப்பைப் போர்ப் பிரகடனச் செய்தியுடன் தூதனுப்பினார். தூதரின் செய்தி பிரித்துப் படிக்கப்பட்டது. "முஹம்மதே! உமது கட்டளையை நாம் ஏற்கப் போவதில்லை. எங்கள் கோட்டை கொத்தளங்கள் வீடு மனை தோட்டம் துரவுகளை விட்டு நாங்கள் போகப் போவதுமில்லை. நீர் என்ன நினைக்கின்றீரோ அதைச் செய்து கொள்! நாங்கள் எந்த மிரட்டலுக்கும் பயப்படப் போவதில்லை. எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சப்போவதில்லை."

"தோழர்களே! யூதர்கள் போர்ப்பிரகடனம் செய்திருக்கின்றார்கள்... வலிய அவர்கள் நம்மை வம்புக்கிழுத்திருக்கின்றார்கள். இவர்களின் போர் அறிவிப்பை ஏற்றிடுவோம். நீதி, நேர்மை உண்மைக்காகப் போராடுவோம். அல்லாஹு அக்பர்... (இறைவனே மிகப் பெரியவன்) அல்லாஹு அக்பர் (இறைவனே மிகப் பெரியவன்)" எனும் முழக்கம் மதீனத்துப் பள்ளியில் (மஸ்ஜிதுன் நபவியில்) அண்ணலின் அறிவிப்பு முழங்கியது.

போருக்கான ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டன. அறப்போர் வீரர்கள் அணியணியாய் ஆர்த்து நின்றனர். பனூநளீர் குடியிருப்பு மதீனாவின் புறநகர்ப் பகுதியில் இருந்தது. வீரமிகுதீரரான ஹள்ரத் அலீ (ரளி) அவர்களின் கரங்களில் போர்க்கொடி தரப்பட்டது. ஹிஜ்ரி 3ஆம் ஆண்டு ரபீஉல் அவ்வல் திங்களில் இந்தப் படையெடுப்புத் துவங்கியது. போர்த் தளபதி அண்ணலும் இதில் பங்கேற்றார்கள். நல்ல (நண்பகல்) தொழுகைக்கான அஃதான் (தொழுகை அழைப்பு) முழக்கப்பட்டது.

## வெற்றி பெற்ற முற்றுகை

நண்பகல் தொழுகையைச் சிறப்பாக நிறைவேற்றிய இறை நெறிப் படையினர், பனூநளீர்களின் கோட்டையை நோக்கிப் புறப்பட்டனர். கோட்டை, பெரும் பாதுகாப்புடன் காக்கப்பட்டது. பிரதான வாசலின் கதவுகள் சாத்தப்பட்டுத் தாளிடப்பட்டிருந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உயர்ந்த கோட்டையின் வெளிச் சுவர்களின் மேல் யூத வாள் வீரர்களும் அம்பு வீரர்களும் குறிபார்த்து எறியும் போர்ப்பயிற்சிப் பெற்றோரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

தங்களது கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த முஸ்லிம் வீரர்களைப் பார்த்ததும் யூத வீரர்கள் அம்புகளை எய்தும் கற்களை எறிந்தும் எதை எதையோ வீசியும் சரமாரியாகத் தாக்கத் துவங்கினர். வெறி கொண்டு என்னென்னவோ கத்தினர். அதனைப் பொருட்படுத்தாத முஸ்லிம் வீரர்கள் எதிர்த்துத் தாக்கினர். இருசாராரும் சளைக்காமல் அம்புகளை மழையெனப் பொழிந்து கொண்டிருந்தனர்.

உயர்ந்த கோட்டைச் சுவரின் மேலிருந்து கீழிருப்போரை எறிந்து தாக்குவது எளிதானதாகும். ஆனால் கீழிருந்து மேலிருப்போரைத் தாக்குவது பெரும் சிரமமானதாகும். எனினும் அறப்போர் வீரர்கள் சிறிதும் அயராமல் துளியும் உற்சாகம் குன்றாமல் திறமையுடன் போரிட்டது யூத வீரர்களுக்குப் பெரும் வியப்பாக இருந்தது.

யூதர்களின் அகங்காரத் திமிருக்கும் வரட்டுத் துணிச்சலுக்கும் காரணம், தங்களது உயர்ந்த வலுவான கோட்டை கொத்தளங்கள்... சக இனத்தவர்களான பனூகுறைழா - பனூகைன்காவின் ஆதரவும் செல்வ வளமும் மதீனத்து முனாஃபிக்குகளின் (நயவஞ்சகர்கள்) தலைவனான உபைபின் ஸலூல் மற்றும் அவனது ஆட்களின் பலம்... இவைதான்...!

எப்படியாவது இன்றைய நாளைச் சமாளிப்போம்... திட்டமாக நாளை இவர்களின் எல்லா வகையான உதவியும் கிடைத்து விடும் எனப் பெரிதும் நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருந்தனர். மாலை மயங்கி மறைந்தது. இருள் சூழ்ந்து இரவானது. அண்ணலுடன் புறப்பட இயலாது போன ஏராளமான தோழர்கள் மதீனா விலிருந்து வந்து சேர்ந்தனர். பனூநளீர்களின் கோட்டையை சுற்றி அறப்போர் வீரர்களின் முற்றுகை பலமாக இருந்தது. யூதர்களின் அந்தக் கோட்டை முஸ்லிம்களின் பிடிக்குள் வந்தது போன்ற தோற்றம் தெரிந்தது. கோட்டைக்கு மேலிருந்து பார்த்திட்ட யூதர்களுக்கு இது பேரச்சமாக இருந்தது. அதிர்ந்து நடுங்கிப் போயினர்.

(தொடரும்)

# நுகர்ந்தவை

நூல் : **கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மத் பின் துக்ளக்**

ஆசிரியர்: "வரலாற்றுப் பேரறிஞர்" **செ.திவான்** M.A.,M.Phil.,

பக்கங்கள்: **144;** விலை: ரூ.**100/-**

வெளியீடு : **நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்,**
43, யூனிகான் காம்ப்ளக்ஸ்,
குருவிக்காரன் சாலை,
மதுரை – 625 020.

அலைபேசி : 9080330200

இந்தியாவை ஆட்சி செய்த முஹம்மத் பின் துக்ளக் என்ற முஸ்லிம்மன்னரின்குணநலன்கள், அவரது ஆட்சியில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் இந்நூலில் சிறப்பாக சொல்லப்பட்டுள்ளன.

அவர் தன் தந்தையை கொன்று விட்டு ஆட்சியைப் பிடிக்கவில்லை என்பதை பல ஆதாரங்களுடன் இந்நூல் நிரூபிக்கிறது. இயற்கையாக கிடைக்கும் கொக்கோ, பறவைகளின் இறகுகள், அழகிய சிப்பிகள் போன்ற பொருட்கள் அக்காலத்தில் நாணயங்களாக பயன்படுத்தப்பட்ட செய்தி இந்நூலில் பதியப்பட்டுள்ளது.

அவர் வெளியிட்ட தங்க, வெள்ளி, செம்பு நாணயங்களின் புகைப்படங்களும், அதில் பொறிக்கப்பட்டிருந்த அரபி வாசகங்களும் இந்நூலை அலங்கரிக்கின்றன.

குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிழாகவும், பெண்ணாசை இல்லாத பேரரசராகவும், தொழுகையில் பேணுதலுள்ள தொழுகையாளியாகவும், மார்க்க மேதைகளிடம் எப்போதும் மார்க்கம் பற்றி பேசும் மகானாகவும், நீதிமிக்க நல்லாட்சியாளராகவும், நில வளத்தைப் பெருக்க இந்திய வரலாற்றில் முதன்முதலில் விவசாயத்திற்கு தனித் துறையை அமைத்த விசித்திர மனிதராகவும், இகன்பன்னா, தௌலதாபாத் ஆகிய நகரங்களை நிர்மாணித்த நிர்வாகியாகவும், பல போர்களை வென்ற போராளியாகவும், அந்தரங்க வாழ்க்கையிலும் நேர்மையான அரசராகவும், எளிமை விரும்பியாகவும், கொடை வள்ளலாகவும் வாழ்ந்தார் என சாட்சி பகரும் சரித்திர நூல் இது.

நூலின் சிறப்பான உருவாக்கத்திற்கும், நூலின் தரமான காகிதத்திற்காகவும் தனியாக ஒரு சபாஷ்!

* * * * * *

"என் கண் குளிர்ச்சி தொழுகையில் வைக்கப்பட்டுள்ளது" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (அஹ்மத்)

நூல் : **ஷரீஅத்தின் பார்வையில் சந்திர ஆண்டு**

ஆசிரியர் : மவ்லவீ முஃப்தீ

**எம்.முஹம்மது ஹுஸைன் தாவூதி**

பக்கங்கள்: **56;** விலை: ரூ.**30/-**

வெளியீடு :

**எம்.முஹம்மது ஹுஸைன் தாவூதி,**

பேராசிரியர் :

தாவூதிய்யா அரபு கல்லூரி,

பெரிய அக்ரஹாரம்,

ஈரோடு – 638005.

அலைபேசி : 9150751812

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளை தொடர்புபடுத்தி ஆண்டுகளுக்கு வைக்கப்பட்ட பெயர்கள் இந்நூலில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சந்திர ஆண்டிற்கும், சூரிய ஆண்டிற்குமிடையில் மனிதனின் வயது வேறுபடுவதும் விளக்கப்பட்டுள்ளது.

அல்லாஹுத ஆலா குர்ஆன் ஷரீஃபில் குகைவாசிகள் குகையில் தூங்கிய ஆண்டுகளின் கணக்குப்படி எவ்வாறு கூறியுள்ளான் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திர ஆண்டின் முறைப்படி மாதம் சார்ந்த மற்றும் வருடம் சார்ந்த அமல்களை நாம் எப்படி கணிக்க வேண்டும்? என்பதை கூறும் கருத்தாழமிக்க நூல் இது.

* * *

ஆய்வு : பாவா


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் :

அல்லாமா

**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி** (ரஹ்)

மவ்லானா முஃப்தீ அல்ஹாஜ் "அல்அதுல் மில்லத்"

**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ** (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா ஹாஃபிழ் காரி முஃப்தீ அல்ஹாஜ்

**மு.முஹம்மது இஸ்மாயீல்**

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ

அலுவலக முகவரி :

**குர்ஆனின் குரல்**

த.பெ.எண் : 99

2-A, பந்தல்குடி முதல் தெரு,

பாலம் ஸ்டேஷன் ரோடு, **மதுரை-625002.**

**அலுவலக அலைபேசி எண் :**

**94420 56547**

E.mail : quraaninkural@gmail.com

web : www.quraaninkural.com

**ஓராண்டு சந்தா ரூ.300/-**

**தனி இதழ் ரூ.25/-**

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

M/s. INDIAN OVERSEAS BANK,

Madurai Meenakshi College Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No.175701000003467

IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL

Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# அஸ்ராருல் குர்ஆன்

அரபி மூலம் : இமாம் **ஜலாலுத்தீன்** அஸ்ஸுயூத்திய்யி

தமிழில் : மவ்லானா மவ்லவீ முஃப்தீ

**முஹம்மது கிஃபாயத்துல்லாஹ்**

தாவூதி ஃபாஜில் ஜமாலி பாகவி ஹள்ரத் எம்.ஏ.,

ஈரோடு மாவட்ட அரசு காஜி

கேள்வி : மதீனாவில் அருளப்பட்டிருப்பினும் மக்கீயாக கருதப்படும் வசனங்களும் உண்டா ?

பதில் : அல்மும்தஹினா அத்தியாயம் முழுவதும் மக்கீயாகவே கருதப்படுகின்றது. ஆயினும் அது திருமதீனாவில் அருளப்பட்டதாகும். இதில் நபிகளார் மக்காவுக்குச் செல்லத் தீர்மானித்த இரகசியச் செய்தியை ஹாதப் இப்னு அபீ பல்தஆ என்பார் மக்காவிலுள்ள குறைஷிகளுக்குத் தெரிவித்துவிட்ட குறிப்பைக் கொண்டது. (காண்க : ஸீரத் இப்னு ஹிஷாம்)

இவ்வசனம் மக்கத்தவரோடு உரையாடுகின்றது. இவ்வாறே, மதனீயான "அந்நஹ்லு" அத்தியாயத்தில் 41ஆம் வசனத்திலிருந்து கடைசி வரையில் உள்ளவையும், அர்ரஅது அத்தியாயமும் "பராஅத்" அத்தியாயம் துவக்கம் முதல் 28ஆவது திருவசனம் முடிய மக்கத்தவரைப் பற்றி கூறுகின்றன. இவை மக்கீ வசனங்களாக கருதப்படுகின்றன.

கேள்வி : மக்கீ அத்தியாயங்களில் மதீனாவில் அருளப்பட்டவை போல் தோற்றமளிக்கும் திருவசனங்கள் உண்டா ?

பதில் : "அந்நஜ்மு" அத்தியாயத்தில் உள்ள "அற்பமான பாவங்களை (சுமாரான தண்டனைக்குரியன) தவிர பெரும் பாவங்களிலிருந்தும் (இவற்றுக்குத் தண்டனை நரக வேதனை) மானக்கேடான விஷயங்களிலிருந்தும் (ஹத்து தண்டனைக்குரிய குற்றங்கள்) விலகி இருப்பார்கள்" என்ற இத்திருவசனம் "நப்ஹான்" என்பாரையும் அவரது ஆசைக்கு இணங்க மறுத்த இறையச்சமிக்கதோர் பெண்ணைப் பற்றியும் குறிப்பிடுகின்றது (ஆயத் 32)

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் திருமக்காவில் இருந்தவரை கஜவாத் எனப்படும் புனித யுத்தங்கள், குற்றவியல் தண்டனைக்

குரிய ஹூத்துகள் ஆகியன எதுவும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே ஹூது அத்தியாயத்தில் வரும் 114ஆம் திருவசனமு மாகும். இது அபூமுக்பில் அல்ஹுஸைன் பின் உமர் பின் கைஸ் அல்லது அபுல் யுஸ்ருபின் அம்ருல் அன்ஸாரீ (நூல் : குர்துபீ 120 : 111) என்பாரிடம் பேரீச்சம் பழம் வாங்கியதோர் பெண்ணை கைபிடித்து இழுத்த ஒருவரைப் பற்றிய நிகழ்ச்சியினை குறிப்பிடுகின்றது.

கேள்வி : மதீனீ அத்தியாயங்களில் மக்காவில் அருளப்பட்டவை போல தோற்றம் தரும் வசனங்கள் உண்டா ?

பதில் : உண்டு. "அல்அன்ஃபால்" அத்தியாயத்தில் நஜ்ரானைச் சேர்ந்த நஸராவைப் பற்றிய 114ஆம் திருவசனமும், அல்ஆதியாத் அத்தியாயத்தில் (அல்ஹுஸைன் பின் வாகிதீ ரிவாயத்தின்படி) பிரபலமான ஒரு நிகழ்ச்சியினைக் குறிக்கும் முதல் வசனமும் அல்அன்ஃபால் அத்தியாயத்திலுள்ள 30ஆம் திருவசனமும் இவ்வகையைச் சார்ந்த வசனங்களாகும்.

கேள்வி : நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் வழியில் ஆயத்துகள் அருளப்பட்டனவா ?

பதில் : ஆமிர் ஜுஹ்ஃபா என்னுமிடத்தில் "இன்னல்லதீ ஃபரள அலைக்கல் குர்ஆன" எனத் துவங்கும் "அல்கஸஸ்" அத்தியாயத் தின் 35ஆம் வசனம் புலம்பெயர் தடத்தில் அருளப் பெற்றது.

கேள்வி : மிஃராஜ் பயணத்தில் பெருமானாருக்கு அருளப்பட்ட திருவசனம் எது ?

பதில்: "அஸ்ஸுக்ருஃப்" அத்தியாயத்திலுள்ள 45ஆம் திருவசனம் "வஸ்அல் மின் கப்லிக" என்பது இஸ்ரா இரவில் (மிஃராஜ்) புனித பைத்துல் முகத்தஸ் மஸ்ஜிதில் அருளப்பெற்றது.

கேள்வி : தாயிஃப் நகரில் அருளப்பெற்ற திருவசனம் எது ?

பதில் : "அல்ஃபுர்கான்" அத்தியாயத்தில் இடம்பெறும் "அலம்தர இலா ரப்பிக்க..." எனத் துவங்கும் 54ஆம் திருவசனமும், "அல்இன்ஷிகாக்" அத்தியாயத்தில் உள்ள 22, 23, 24 ஆகிய மூன்று திருவசனங்களும் தாயிஃப் நகரில் அருளப்பெற்றன.

கேள்வி : ஹுதைபிய்யாவில் அல்குர்ஆன் திருவசனங்கள் அருளப் பெற்றனவா ?

பதில் : ஆம். மக்காவாசிகளோடு நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் உடன்படிக்கை செய்து அதை பிஸ்மில்லாஹிர்

ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதத் துவங்கலாம் என விருப்பம் தெரிவித்தார்கள். அப்போது உடனிருந்த சுஹைல் பின் அம்ரு என்ற மக்கத்து குறைஷிப் பிரதிநிதி - "எங்களுக்கு அர்ரஹ்மானும் அர்ரஹீமும் யாரென்று தெரியாதே! நீங்கள்தான் திண்ணமாக இறைவனின் தூதர் என்று எங்களுக்கு தெரிந்திருந்தால் உம்மைப் பின்பற்றியிருப்போமே" என்று ஏளனமாகக் கூறினார். அப்போது "அர்ரஅது" அத்தியாயத்தின் 30ஆம் திருவசனம் அருளப்பெற்று அண்ணலாருக்கு ஆறுதல் கூறப்பட்டது.

கேள்வி : இரவு நேரங்களில் அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதுண்டா?

பதில் : உண்டு. கஜ்வத்து பனீ முஸ்தலக் (குஜாஆ) போரின்போது நபித்தோழர்கள் இரவில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது "யாஅய்யுஹன்னாஸ்..." எனத் துவங்கும் அல்ஹஜ்ஜு அத்தியாயத்தின் முதல் வசனம் இறங்கியது. இவ்வாறே பிரிதொரு போரின்போது "வல்லாஹு யஃஸிமுக்க மினன்னாஸ்" என்ற அல்மாஇதா அத்தியாயத்திலுள்ள 68ஆம் திருவசனம் அருளப்பட்டது.

நபிகளாருக்கு காவலுக்காக இரவில் சிலர் யுத்தக் களத்தில் விழித்திருப்பது வழக்கம். ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் ரபீஆ (ரளி) அவர்கள் கூறுகிறார் : "நபிகள் பெருமானார் அவர்கள் எமக்காக இன்றைக்கு காவல் பணியில் இருக்கப்போவது யார்?" என்று கேட்டார்கள். அப்போது வாட்களையும், ஆயுதங்களையும் தாங்கியவாறு ஹள்ரத் ஹுதைஃபாவும், ஸஅதும் வேறு சிலரும் முன் வந்தார்கள்.

நபிகள் பெருமானார் அப்போது கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். கூடார வாயிலில் இவர்கள் இருக்க இரவில் ஒரு சிறு பகுதி கழிந்தபோது மேற்சொன்ன திருவசனத்தை அல்லாஹ் அருளினான். கூடாரத்திலிருந்து தமது புனித சிரசை வெளியில் நீட்டிய நபிமணிகள் "ஓ (காவல் புரியும்) ஜனங்களே! நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். திண்ணமாக அல்லாஹ் என்னைப் பாதுகாக்கின்றான்" என்றார்கள்.

அடுத்து நபிகள் பெருமானாரோடு அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் இருந்த வேளையில், அல் கஸஸ் அத்தியாயத்தின் நான்காம் திருவசனம் அருளப் பெற்றது. பெரும்பாலும் பகலில்தான் அல்குர்ஆன் திருவசனங்கள் அருளப்பட்டதாக ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

கேள்வி : கடுங்கோடையும், மிகுந்த குளிரும் கொண்ட சீதோஷ்ண நிலைகளில் அருளப்பட்ட திருவசனங்கள் யாவை?

பதில் : "அந்நிஸாஉ" அத்தியாயத்தின் ஆரம்பத்திலுள்ள அல்கலாலா திருவசனம் குளிர் மிகுந்த காலத்திலும், இறுதியாக வரும் வசனம் கடுங்கோடையிலும் அருளப்பட்டன என்று இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தீ (ரஹ்) அவர்கள் "அல்இத்கான்" எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

கேள்வி : ஹள்ரத் ஜிப்ரயீலுடன் வேறு வானவர்களும் வஹீயை கொண்டுவர பணிக்கப்பட்டிருந்தார்களா ?

பதில் : அல்குர்ஆனின் அனைத்து வசனங்களையும் வஹீயாக நபிமார்களுக்கு கொண்டு வந்தது ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஆகும். ஆயினும் முதல் அத்தியாயமான அல் ஃபாத்திஹாவைக் கொண்டு வரும்போது ஹள்ரத் ஜிப்ரயீலுடன் எண்பதாயிரம் மலக்குமார்கள் வந்தனர். ஆயத்துல் குர்ஸீ அருளப் பட்டபோது முப்பதாயிரம் மலக்குகளும், யூனுஸ் அத்தியாயம் அருளப்பட்டபோது முப்பதாயிரம் மலக்குகளும், அஸ்ஸுக்ருஃப் அத்தியாயத்தில் வரும் 45ஆம் வசனத்துடன் (வஸ்அல் மன் அர்ஸல்னா...) அருளப்பட்டபோது இருபதாயிரம் வானவரும் வந்தனர். இவ்வாறே, அல்அன்ஆம் அத்தியாயம் முழுமையாக அல்லது மூன்று அல்லது ஆறு வசனங்கள் அருளப்பட்டபோது சுமார் எழுபதாயிரம் வானவர்களும் ஹள்ரத் ஜிப்ரயீலுடன் வந்தனர்.

அவ்வானவர் கூட்டம் தஸ்பீஹ் முழக்கத்தோடு பூமி வானுக்கிடையில் நிற்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் "ஸுப்ஹானல்லாஹ்" என்று கூறி ஸஜ்தாவில் விழுந்தார்கள் என்று ஹள்ரத் உபய்யுப்னு கஅப் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள். (நூல் : ஃபதாவா அபூஅம்ரு பின் அப்துர் ரஹ்மான் அஷ்ஷஹ்ராஜூரீ அஷ்ஷாஃபிஇய்யு – மறைவு ஹிஜ்ரி 643)

(தொடரும்)

## சிறப்பும் கடமையும்

நான்கு விஷயங்கள் அதன் வெளிரங்கம் சிறப்பானதாகவும், அதன் உள்ரங்கம் கடமையாகவும் உள்ளது.

1. நல்லவர்களுடன் கலந்துறவாடுதல் சிறப்பு; அவர்களைப் பின்பற்றுவது கடமை.
2. திருகுர்ஆன் ஷரீபை ஓதுவது சிறப்பு; அதன்படி செயல்படுவது கடமை.
3. கப்ரை ஜியாரத் செய்வது சிறப்பு; அதற்காக தயாராகுவது கடமை.
4. நோயாளிகளை சந்தித்து நோய் விசாரிப்பது சிறப்பு; அவரிடம் அறிவுரை ஏற்பது கடமை.

அறிவிப்பாளர் : ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள்
நூல் : முநப்பிஹாத்

# திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்

"வரலாற்றுப் பேரறிஞர்"
செ.திவான் M.A.,M.Phil.,

ஒரு வீட்டில் ஒருவர் மட்டுமே ஒருத்தியை திருமணம் செய்து வீட்டிலுள்ள மற்றவர்கள் திருமணமான பெண்களோடு உறவு கொள்ளும் முட்டாள் தனத்தை, அசிங்கத்தை ஒழிப்பதே எனது பணி என்றார் திப்பு. ஹைதர் அலீ குடகுப் பகுதியில் படையெடுத்து வெற்றி கொண்ட போது இந்த மோசமான முட்டாள் தனமான பழக்கத்தை தடை செய்து உத்தரவிட்டார். பல பெண்களை கைது செய்து தனது படைவீரர்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றும் கிர்மானி தனது நூலில் கூறியுள்ளார்.

குடகில் நிலவிய கேவலமான முட்டாள்தனமான பழக்கத்தை இழிநிலையை ஒழித்திட இஸ்லாம் மார்க்கத்தை ஏற்க வேண்டி வரும் என்று ஹைதர் அலீயும், திப்பு சுல்தானும் கூறியது உண்மை. ஆனால், திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப் பட்டணம் திரும்பிய உடனே மீண்டும் குடகு நாட்டில் கலகம் எழுந்தது.

முன்மேதி நாயர், ரங்க நாயர் என்ற குடகு நாட்டின் இரண்டு கலகத் தலைவர்கள் திப்புவின் படைகளோடு மோதினர். ஜெய்ன் உல் ஆபிதீன் மஹ்தவி கூர்க்கின் கலகத்தை சமாளிக்க முடியாமல் திண்டாடினார். ஏறத்தாழ கூர்க் முழுவதையும் இவர்கள் கைப்பற்றி விடும் நிலை. தலைநகர் மெர்க்காரா முற்றுகையில் இருந்தது. எனவே தன்னால் குடகு நாட்டை காப்பாற்ற முடியாது என்று பௌஸ்தார், திப்பு சுல்தானுக்கு கடிதம் எழுதினான். ஜெயின் உல் ஆபிதீன் கஸ்தாரி என்பவருடன் மேலும் சிலரையும் படைகளுடன் திப்புசுல்தான் கூர்க்கிற்கு அனுப்பி வைத்தார். இதில் 2000 பயிற்சியில்லாத வீரர்கள் இருந்தனர் என்றும் 15,000 படை வீரர்கள் இருந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஜெயின் உல் ஆபிதீன் கஸ்தாரி உல் குல்லி வழியாக குடகு நாட்டிற்குள் சென்றார். திப்புவின் படைகளை 4000 முதல் 5000 குடகு வீரர்கள் வழி மறித்தனர். கடும் தடைகள் ஏற்படுத்தினர். அத்தனை தடைகளையும் தாண்டி மெர்க்காராவுக்குள் சென்றார் கஸ்தாரி. ஆனாலும் அங்கு அவரால் தாக்கு பிடிக்க முடியவில்லை. அங்கிருந்து பெட்டாதாபூருக்கு ஓடினார்.

மைசூர் மேற்கு எல்லையில் வலுவான இடம் அது. ஆனால் குடகர்களோ உன்குல்லியில் திப்புவின் வீரர்களை பிடித்து ஏராளமானவர்களை கொன்று குவித்தனர்.

தனது படை வீரர்கள் அதிக அதிக அளவில் கொல்லப்பட்ட செய்தியினை அறிந்த திப்பு சுல்தான் தானே படைகளுடன் 1785 அக்டோபர் மாத இறுதியில் ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து கிளம்பினார். குடகு நாட்டின் தலைநகர் மெர்க்காராவுக்கு அருகிலுள்ள உல்குல்லிக்குள் எந்தவித தடையுமின்றி திப்பு சென்றார். அங்கிருந்த போது முஹர்ரம் பண்டிகையினை திப்பு சுல்தான் சிறப்பாகக் கொண்டாடி னார். முஹர்ரம் பண்டிகை கொண்டாட்டத்தின் போது அங்கிருந்தவாறே மெர்க்காராவுக்கு உணவுப் பொருட்களையும் படை வீரர்களையும் அனுப்பி கொண்டே இருந்தார். கோட்டையையும் வலுப்படுத்தினார். முஹர்ரம் பண்டிகை நிகழ்ச்சிகள் முடிந்ததும், திப்பு சுல்தான் தானே மெர்க்காராவுக்கு புறப்பட்டு சென்றார். பிரெஞ்சு லாலி தலைமையில் ஒருபடையையும், ஹுஸைன் அலீ கான் தலைமையில் ஒரு படையை யும், மீர் முஹம்மது தலைமையில் ஒரு படையையும், இமாம் கான் தலைமையில் ஒரு படை பிரிவையும் தனித்தனியாக பிரித்து பல்வேறு திசைகளில் குடகைத் தாக்கினார். (Mir Hussain Khan Kirmani, History of Tippu Sulthan. Translated by Col. W.Miles. Page 297)

குடகு நாட்டில் கூர்க்குகள் மிகுந்த பலத்துடன் பயங்கர வேகத்துடன் போரிட்டனர். கடும் போர் நடைபெற்றது. ஆனால் இறுதியில் திப்பு சுல்தான் வென்றார். கூர்க்குகள் கைது செய்யப்பட்டனர். முன்பு குடகைக் கைப்பற்றி விட்டு ஸ்ரீரங்கப்பட்டணம் திரும்பியதும் கூர்க்குகள் திரும்பவும் கலக்கத்தில் எழுந்ததை திப்புசுல்தான் நன்றாகவே அறிவார். எனவே மீண்டும் குடகு நாட்டில் கலகம் தோன்றிவிடக் கூடாது என்பதற்காக கலகக்காரர்களை கைது செய்து மைசூருக்கு அனுப்பி வைத்தார்.

குடகில் அத்வானி பகுதியிலிருந்த மக்களை கொண்டு போய் குடியேற செய்தார். அவர்களின் பிழைப்பிற்கு விளைநிலங்களும் கடன்களும் வழங்கப்பட்டன. அவர்களில் பலர் சீதோஷ்ண நிலையால் திரும்பினர். சுப்பராசைய்யாவின் (பிராமணர்) மருமகன் நாகப்பையா குடகின் பௌஸ்தாராக நியமிக்கப்பட்டார். (Tarikhi - I Coorg, Hussain Khan Lohani, footnotes 27a) ஆனாலும் குடகில் கலகங்கள் ஓயவில்லை. கூர்க்குகளை ஒடுக்க முடியவில்லை. அவர்கள் மைசூர் அரசுக்கு எதிராகக் கலகங்களை உடனடியாகத் தொடங்கினர்.

திப்புவின் படையெடுப்பின் போது குடகிலிருந்து வெளி

யேற்றப்பட்ட குடகர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது. ஏனென்றால் கர்னல் வில்க்ஸ் 70 ஆயிரம் பேர் கள் என்கிறார். எல்.ரைஸ் மைசூர் மற்றும் கூர்க் எனும் நூலினை 3 தொகுதிகளாக பெங்களூருவிலி ருந்து 1876 - 1878 இல் வெளி யிட்டுள்ளார். ஏறத்தாழ 90 ஆண்டு களுக்குப் பிறகு எழுதப்பட்ட அதில் 85000 பேர்கள் என்கிறார். (L.Rice Mysore and Coorg, Vol III, Bangalore 1878, Page 111)

இதனை நம்புவதற்கு எளி தாக இயலாது. ஏனெனில் 1836இல் நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கூர்க்கின் மக்கள் தொகை 65,437 ஆகும். Imperial Gazetteer 1885 வெளிவந்தது. அதில் நான்காவது தொகுதி பக்கம் 33இல் இந்த தகவல் உள்ளது. 1836இல் குடகின் மக்கள் தொகை 65,437 தான். திப்பு போரிட்ட 1785 என்பது அதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. வில்க்ஸ் மற்றும் ரைஸ் ஆகியோர் குடகு மக்கள் தொகை குறித்துச் சொன்னதை நடுநிலையோடு சிந்தித்திட வேண்டும்.

அடியேன் முன்னரே சொன்ன அருட்திரு மோகினிங் தனது Coorg Memories நூலில் (1850) கூறுவார். The whole Coorg population may be estimated at 25000 or 26000 souls. They have much increased in number during the last twenty years. In former days they seem scarcely ever to have mustered more 4000 or 5000 fighting men.

குடகிலிருப்பது 4000 அல்லது 5000 படைவீரர்கள் என்று மோகிளிங் குறிப்பிட்டுள் ளார். திப்பு ஸ்ரீரங்கப்பட்டணத் திற்கு திரும்பியபோது குடகில் உள்ள அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்றது என்பது உண்மையாகாது. ஏனெனில் திப்பு ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு சென்றவுடன் குடகில் மீண்டும் கலகம் வெடிக்கிறது. அனைத்து கலகக்காரர்களையும் திப்பு சுல்தான் கைது செய்து அழைத்துக் கொண்டு சென்றிருந்ததால் அவர் போனவுடன் மறுபடியும் கலகம் செய்திட கூர்க்குகள் எங்கி ருந்து வந்தனர்? மாறாக அங்கே தான் இருந்தனர் என்பது தெளி வாகிறதல்லவா?

(For sufficient men were left to cause another result soon after. Mohibbul Hasan Khan. History of Tippu Sulthan 1951. Page 86) திப்பு சென்றதும் குடகில் மீண்டும் கிளர்ச்சி நடந்ததா? இல்லையா? குடகர்கள் கலகம் புரிந்தார்களா இல்லையா? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அனைவரையும் திப்பு சுல்தான் கைது செய்து கொண்டு சென்றார் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் முடியுமா? சிந்தியுங்கள். (தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## நலமுடன் வாழ

எனது மகன் அப்பாஸ் மந்திரி கல்லீரல் பிரச்சனையால் அவதிப்பட்டு வந்த நிலையில் மாற்று உறுப்பு பொருத்தும் நிலைக்கு உள்ளார். அவருடைய இந்த சிரமத்திலிருந்து நீங்கி பரிபூரண சுகம் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு துஆ செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **ஷேக் தாவூது** – மதுரை.

பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; குரல் வாசகி - ஒட்டன்சத்திரம்; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரப் அலீ - ஒட்டன்சத்திரம்; டாக்டர் ஜி.மும்தாஜ் - மதுரை; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; சந்தா எண் F595 - திருச்சி; எம். முஹம்மது இப்ராஹீம் - அரவாக்குறிச்சி; அஜெய்புன்னிஷா - கருமண்டபம்; அஷாகுல்ஹமீது - பெரிய வடகரை; குரல் வாசகி - அரவாக்குறிச்சி; முஹம்மது முஸ்தபா - வேடசந்தூர்; பி.காதர்பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; அ.இப்ராஹீம் பாதுஷா - பொள்ளாச்சி; அன்சாரி - உடுமலை; அ.ஹாஜரா - கர்நாடகா; ஹசன் பானு - தஞ்சாவூர்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; ஹாஜி எம்.பீர் முஹம்மது, ஹாஜ்ஜா பீ. ருக்கையாள் பீவி; ஹாஜ்ஜா பீ, மெஹருன்னிஸா, சுல்தானா பர்வீன் பானு - உத்தமபாளையம்; பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; எம்.ஷபியுல்லாஹ் - சேலம்; எம். ஜரீனா பேகம் - பாளையக்காடு; அ.சம்சுதீன் - நெய்க்காரப்பட்டி; முஹம்மது ரஷாத், மும்தாஜ் பேகம் - தஞ்சை; ரகீப் சுல்தானா - தஞ்சாவூர்; காஜா ஹுஸைன், நஸீமா பானு, நஸீரா, நிலோஃபர் - மதுரை; சப்ரின் - பெங்களூர்; கே. உமர் அப்துல்லா - மண்ணரை; ஷானவாஸ், அப்துர் ரஹ்மான், ரேஷ்மா - சவூதி; பி.முஹம்மது இப்ராஹீம் - பழனி; பீ.சு. பஹ்மிதா - உத்தமபாளையம்; என். செமிரா - கோட்டூர்; ஏ.எஸ். ஷஹீதுல்லாஹ் அலங்கியம்; குரல் வாசகி - கர்நாடகா; அ. சம்சாத் - பெங்களூரு; அ. தஸ்லிமா - பெங்களூரு; அப்துல் ரஹீம் - சேலம்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா - மதுரை; இப்ராஹீம் - திருப்பூர்; சந்தா எண் F594 - சென்னை; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; ஸுமையா பேகம், சித்திகா பாத்திமா - சென்னை; மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; ஷம்சாத் பேகம் - சேலம்; நஜீர் - உடுமலை; நாகூர் மீரான் - மானூர்; செல்லபா, எஸ்.கோரிமா,

எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்; ரஸியா பேகம் - தஞ்சாவூர்; எம்.எஸ்.பாத்திமா, நஸ்ருதீன் - ஈசநத்தம்; எம்.எஸ். ஜரீனா பானு - ஈசநத்தம்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; அப்பாஸ் அலீ, பரிதா ராணி, அஜ்மல்கான், ஷமிம் பானு, ரைஷா, சுல்தான் ரஹமத்துல்லா, ஆபிதா, முஹம்மது யூசுப் இர்பானா, சையத் அஹமத், ஜியான் அஹமத், பஜுலுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, பாஸிலா - மதுரை; சாஹிதா பானு, ஜுனைது பாபு - சென்னை; எம்.ஜரீனா பேகம் - மதுரை; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்; ஹஸன் முஹம்மது - சென்னை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன் - இராமநாதபுரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; அ.சதாம் உசேன் - பர்ஹத்துல் சாஹிரா - செட்டியார்பட்டி; அ.குரானா ஆசாத், பாத்திமா - சென்னை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிட துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவர் மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், மதுரை ஜே.எம்.எஸ்.அரபுக் கல்லூரி மாணவர்களின் துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணிய மிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸுக்காக 01.01.2022 அன்று வரை நமக்கு கிடைத்த கடிதங்கள் அனைத்தும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.**

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் என்னுடைய ஹாஜத்துகள் நிறைவேறி விட்டன. துஆ செய்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **குரல் வாசகி** - மதுரை - 20.

பேரருளாளன் அல்லாஹ்வின் அளவற்ற கிருபையாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் என் மகனுக்கு பேச்சு வந்து பேச ஆரம்பித்து விட்டான். துஆ செய்த அனைவருக்கும் என் நன்றி கலந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்!.

**எஸ். முஸ்தபா கமால் பாஷா** - மதுரை.

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

நீலகிரி - ஊட்டி ஜனாப் எஸ்.முஹம்மது தன்சீம் அவர்களின் தகப்பனாரும், மேட்டுப்பாளையம் "F.M.A. டிரேடர்ஸ்" ஜனாப் ஆர்.சையத் அலீ அவர்களின் மாமனாருமான ஜனாப் அ.சாகுல் ஹமீது அவர்கள் 12.09.21 அன்றும்,

சென்னை கிழக்கு தாம்பரம் ஆதிநகர் பள்ளிவாசல் முத்தவல்லி அல்ஹாஜ் அஹமது மொஹிதீன் முனாவரி அவர்களின் மனைவியும், மதுரை பீபீகுளம் மர்ஹூம் தாசில்தார் டி.எம்.இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் மகளாருமான அல்ஹாஜ்ஜா மஹபூப் கஜினி அவர்கள் 03.11.21 அன்றும்,

திருச்சி பேராசிரியர் ஜனாப் முஹம்மது ஹுஸைன் அவர்களின் மனைவியும், ஜனாப் எம்.முஹம்மது சித்தீக், முஹம்மது ரபீக் இவர்களின் தாயாருமான ஜனாபா சையது மீரா அம்மாள் அவர்கள் 10.11.21 அன்றும்,

திருச்சி மர்ஹூம் எஸ்.கே.எம்.அப்துல் ஜப்பார் (ரஹ்) அவர்களின் மனைவியும், ஜனாப் எஸ்.கே.எம்.ஏ.முஹம்மது அப்துல் காதர் (எ) சேட்டு அவர்களின் தாயாருமான ஜனாபா ஏ.ஹபீபா பேகம் அவர்கள் 25.11.21 அன்றும்,

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.கே.எம்.அப்துல் ஹமீது (ரஹ்) அவர்களின் மகனாரும், விழுப்புரம் "இந்தியா ஹார்டுவேர்ஸ்" ஜனாப் எஸ்.கே.எம்.ஏ.ரஷீத் அலீ அவர்களின் தம்பியுமான மவ்லானா அ.அக்பர் அலீ ஆலிம் அவர்கள் 01.12.21 அன்றும்,

குர்ஆனின் குரலின் நீண்டகால வாசகரும், குர்ஆனின் குரல் குழுமத்தின் மீது நீங்கா பற்றும் - பாசமுங்கொண்டவரும், சென்னை வடபழனி வட்டாரத்தில் குர்ஆனின் குரலை பரப்புவதில் மிகுந்த அக்கறை கொண்டவரும், காரைக்குடி ஜனாப் முஹம்மது ஹுசைன் அவர்களின் அருமை மகனாரும், சென்னை வடபழனி அல்ஹாஜ் எம்.ஜமால் முஹம்மது அவர்களின் அன்புச் சகோதரருமான அல்ஹாஜ் எம்.அப்துல் ரஹ்மான் அவர்கள் 03.12.21 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி ஜனாப் கே.ஏ.கலீல் ரஹ்மான் அவர்களின் தாயார் ஜனாபா ஆபிதா பேகம் அவர்கள் 06.12.21 அன்றும்,

உத்தமபாளையம் ஜனாப் முஹம்மது இப்ராஹீம் அவர்களின் மனைவி ஜனாபா உம்முஹானி அவர்கள் 08.12.21 அன்றும்,

உத்தமபாளையம் ஜனாப் தகசீர் மைதீன் அவர்களின் மகனார் ஜனாப் முஹம்மது இப்ராஹீம் அவர்கள் 08.12.21 அன்றும்,

தேனி மாவட்டம் காக்கில்சிக்கையன்பட்டி மர்ஹூம் பெத்தார் முஹைதீன் (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் மஸ்தான் அவர்கள் 10.12.21 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மர்ஹூம் பா.அ.அசன் முஹம்மது ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகனாரும், குர்ஆனின் குரலின் நீண்டகால வாசகர் ஜனாப் அ.ஷேக் முஹம்மது அவர்களின் தம்பியுமான ஜனாப் அ.சையது முஹம்மது அவர்கள் 11.12.21 அன்றும்,

சென்னை அமிஞ்சிகரை "மதராஸ் கட்பீஸ்" உரிமையாளர் அல்ஹாஜ் எம்.முஹம்மது இக்பால் அவர்கள் 19.12.21 அன்றும்,

உத்தமபாளையம் கருப்பட்டி ஜனாப் பெரோஸ்கான் அவர்களின் தங்கை ஜனாபா கே.செளதாம்மாள் அவர்கள் 21.12.21 அன்றும்,

திண்டுக்கல் முன்னாள் நகர்மன்ற தலைவர் மர்ஹூம் கே.எஸ்.ஓ.பொன்னையா ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாரும், நாகல் நகர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஜனாப் கே.எஸ்.ஓ.பீ.எஸ். அஹமது புகாரி அவர்களின் தகப்பனாருமான ஜனாப் கே.எஸ்.ஓ.பீ.சையது முஹம்மது அவர்கள் 21.12.21 அன்றும்,

உத்தமபாளையம் மர்ஹூம் குடைக்கார ஹஜ்ரத் சாகுல் ஹமீது (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் எஸ்.அப்துல் காதர் அவர்கள் 23.12.21 அன்றும்,

உத்தமபாளையம் மர்ஹூம் அல்லாமா எஸ்.எஸ்.அப்துல் காதிர் பாகவி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மகனார் மவ்லவீ எஸ்.எம்.முஹம்மது ஜஃபர் ஜமாலி ஹள்ரத் அவர்கள் 24.12.21 அன்றும்,

உத்தமபாளையம் மர்ஹூம் காசிம்கான் (ரஹ்) அவர்களின் மகனார் பாசு அவர்கள் 27.12.21 அன்றும்,

திருப்பூர் - மங்கலம் கிடங்கு மர்ஹூம் அப்துல் ஸலாம் (ரஹ்) அவர்களின் துணைவியாரும், சோமனூர் "கிரவுன் புட்வேர்" அல்ஹாஜ் ஹாரூன் ரஷீத் மற்றும் ஜனாப் நூர்தீன் ஆகியோரின் தாயாருமான ஜனாபா பல்கீஸ் பீவி அவர்கள் 29.12.21 அன்றும்,

கர்நாடகா ஹாசன் மாவட்டம் அரசிகெரே "பாரத் ப்ரூம்ஸ் டிரேடர்ஸ்" உரிமையாளர் அல்ஹாஜ் வி.எம்.அப்துல் ஸலாம் அவர்கள் 29.12.21 அன்றும்,

சென்னை திருவல்லிக்கேணி "பிரைட் லைட்ஸ்" உரிமையாளர் அல்ஹாஜ் முஹம்மது அஷ்ரஃப் அலீ மற்றும் சகோதரர்களின் அருமை தாயார் ஜனாபா சகுதுனா பீவி அவர்கள் 05.01.22 அன்றும்,

ஒட்டன்சத்திரம் வட்டம் ஸ்ரீராமபுரம் மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஜப்பார் (எ) சின்னையா (ரஹ்) அவர்களின் மகளாரும், அல்ஹாஜ்

பகதூர் ராஜா அவர்களின் சகோதரியும், ஜனாப் அப்துல் ரஹீம் அவர்களின் துணைவியாருமான ஜனாபா ஷகிலா பானு அவர்கள் 07.01.22 அன்றும்,

ஒட்டன்சத்திரம் தப்லீக் ஜமாஅத் ஒருங்கிணைப்பாளரும், ஒட்டன்சத்திரம் ஜலால் ஸ்டோர் மற்றும் ஆஃப்ரின் டிராவல்ஸ் உரிமையாளரும், ஒட்டன்சத்திரத்திலிருந்து முதன்முதலாக ஹஜ் கடமையை நிறைவேற்றி திரும்பியவரும், குர்ஆனின் குரல் மீதும், அதன் நிறுவனர்கள் மீதும் முழுமையான பாசமும், நேசமும் கொண்டவரும், ஜனாப் அப்துல் பாஸித் மற்றும் ஜனாப் இல்யாஸ் சகோதரர்களின் அருமை தகப்பனாருமான அல்ஹாஜ் முஹம்மது யாஸீன் அவர்கள் 09.01.22 அன்றும்,

ஈரோடு மஞ்சள் மண்டி அல்ஹாஜ் கே.எஸ். ஷாஹுல் ஹமீது அவர்கள் 09.01.22 அன்றும்,

இடையக்கோட்டைவாசி சென்னை மைலாப்பூரில் வாழும் மர்ஹூம் முஹம்மது இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் இளைய மகனாரும், மீஞ்சூரில் வசிக்கும் ஜனாப் ஐ.முஹம்மது அலீ அவர்களின் தம்பியுமான ஜனாப் அப்துல் காதர் அவர்கள் 09.01.22 அன்றும்,

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மஸ்ஜிதுல் முஷர்ரஃப் மற்றும் பைத்துல்மால் நிர்வாகக் கமிட்டியின் தலைவரும், மதரஸா ரியாளுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா மவ்லவீ உபைதுல்லாஹ் பாஜில் பாகவி ஹள்ரத் அவர்களின் அருமை தந்தையும், மேற்படி மதரஸாவின் முதல்வர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட அரசு காஜி மவ்லானா மவ்லவீ முஹம்மது அலீ மன்பஈ ஹள்ரத் அவர்களின் அருமை மாமனாருமான அல்ஹாஜ் ஏ.முஹம்மது பாஜி அவர்கள் 16.01.22 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

## அண்ணல் நபியின் அன்னல் மொழி

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் :-

"நல்ல நண்பனின் அடையாளம் நான்கு :

1. அவனைப்பார்த்தால் அல்லாஹ்வின் ஞாபகம் வரும்.
2. அவனுடன் பேசினால் ஈமான் அதிகரிக்கும்.
3. அவனுடன் உட்கார்ந்தால் அறிவு வளரும்.
4. அவனுடைய செயல்கள் மறுமை நாளை நினைவுபடுத்தும்."

(திர்மிதீ - 2144)

# வாசகர் வட்டம்

குர்ஆனின் குரல் 65வது ஆண்டு அட்டைப்படம் கண்களைக் குளிர வைத்தது. அதில் தலையங்கம் கண்டேன்.

அல்லாஹ்வின் உபகாரங்களை என்னவென்று சொல்வது? என்று குரலின் வரலாற்றை அழகாக தெளிவாக சுருக்கமாக சொல்லிய விதம் அருமையிலும் அருமை!



இறை நம்பிக்கை ஒன்றையே மூலதனமாய் கொண்டு, இவ்வளவு தூரம் 65 ஆண்டுகள் கடந்து வந்ததற்கும் இறைவனுக்கு ரொம்ப ரொம்ப நன்றி சொல்ல வேண்டும்.

“கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது” என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அது போல, குர்ஆனின் குரலைப் படிக்கும் சிறுவர்கள், வாலிபர்கள், பெண்கள், முதியோர்கள் குறிப்பாக கேள்வி - பதிலை ஆவலுடன் வாசிக்கிறார்கள். அதிலிருந்து எது விதி? எது மதி? எது கதி? என்று அறிந்து கொள்கிறார்கள். மேலும் -

கட்டுரை எழுதுபவர்களை பாராட்ட வேண்டும் வாசகர் வட்டம், செய்திக்கலவைகளும் சிறப்பாகயிருக்கின்றன.

கடைசிப் பக்கம் எம்.ஜே.அன்வரி எழுத்துக்கள் குமரிக்கடலும், எரிமலையும் ஒரு நாள் அமைதியானாலும் இவர் எரிஊட்டி அமைதியாகாது என்பதைத் தெள்ளத் தெளிவாக காட்டிவருகிறார். அரபிக் கடலின் ஆர்ப்பரிப்போடு கருத்துக்களை அழகாய் அள்ளி வருகிறது என்பது உண்மை!

அ. ஷேக் முஹம்மது
வத்தலக்குண்டு.

இஸ்லாமிய பண்பாடு ஒழுக்கம் மற்றும் ஈமானிய்யாத், இபாதத், மஆமிலாத், மாஷராத் மற்றும் அஃலாக் முழுமையாக முஸ்லிம்களிடம் சென்று அடையவில்லை என எண்ணுகிறேன். குதர்க்கமாக கேள்வி கேட்கும் அன்பர்களுக்கு அமர்க்களமாக பதிலளிக்கும் மவ்லானா முஃப்தீ அவர்களின் திறமை மிகவும் மெச்சத் தகுந்தது. போற்றத் தக்கது. தூங்கி கிடக்கும் உள்ளங்களை விழித்து எழ வைத்து தீனை ஆராய்ச்சி செய்ய வைக்கிறது மற்றும் புரிய வைக்கிறது.

பிரதி மாதந்தோறும் குர்ஆனின் குரலை ஆவலுடன் எதிர்நோக்க வைக்கிறது. மென்மேலும் சேவை வளர எல்லாம் வல்ல அல்லாஹுதஆலாவிடம் துஆ செய்கிறேன்.

M. பீர் முஹம்மது
உத்தமபாளையம்.

# கடைசிப்பக்கம்

**எம்.ஜே.அன்வரி**

**பே**ரறிஞர் அண்ணா 113ஆம் பிறந்த நாளையொட்டி நல்லெண்ணத்தின் அடிப்படையில் 700 சிறைவாசிகளை விடுவிக்க உள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 15.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தார். அதனையொட்டி 15.11.2021 அன்று தமிழ்நாடு அரசு ஆணையை வெளியிட்டிருந்தது. ஆனால், அந்த அரசு ஆணை சிறைவாசிகளிடையே சாதி, மத, இனம் என பாரபட்சம் காட்டுவதாக உள்ளது. இது பற்றி கேட்டால் தமிழக அரசிடம் உரிய பதில் இல்லை.

சாதி, மத, இன வேறுபாடு இன்றி 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவரை விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. 14 ஆண்டுகள் சிறைவாசம் பூர்த்தி ஆகாதவர்களின் தண்டனைகள் காலத்தை குறைத்து விடுதலை செய்யவும் மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு.

தமிழக அரசு வெளியிட்டிருக்கும் ஆணையால் ஒரு முஸ்லிம் கூட சிறைச்சாலையிலிருந்து வெளிவர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது கோவையில் 24 பேர், சென்னையில் 6 பேர், பாளையங்கோட்டையில் 5 பேர், கடலூரில் 2 பேர், வேலூரில் ஒருவர் ஆக 38 முஸ்லிம் சிறைவாசிகள் பல்லாண்டு காலமாக சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள். இவர்களுள் 36 பேர் 21 ஆண்டுகளைத் தாண்டியும், 2 பேர் 14 ஆண்டுகளைத் தாண்டியும் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்.

இவர்களுள் பலர் 60 வயது கடந்தவர்களாகவும், நோயாளிகளாகவும் இருக்கின்றனர். கோவை மத்தியச் சிறையில் ஒருவர் கொடிய நோய்க்கு ஆளாகியுள்ளார். இன்னொருவர் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுப் பெரும் துன்பத்திலிருக்கிறார். 22 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைச்சாலையில் வாழ்க்கையை கடந்து விட்ட ஒருவருக்கு வயதும் 75ஐ தாண்டி விட்டது.

2008ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டையொட்டி தண்டனை காலம் குறைக்கப்பட்டு சிறைவாசிகள் விடுதலை செய்யப்

பட்டபோதும், 2017ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். நூற்றாண்டை ஒட்டி பொது மன்னிப்பு வழங்கி தண்டனை காலம் குறைக்கப்பட்டு சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட்டபோதும் மேற்கூறிய முஸ்லிம் கள் 38 பேர் விடுதலை செய்யப்படாதது பெரும் வேதனைக்குரியதாகும்.

2008ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அன்றைய முதல்வர் கலைஞர் முன்கூட்டியே ஆயுள் சிறைவாசிகளை விடுதலை செய்ய அண்ணா நூற்றாண்டையொட்டி அறிவித்தார். அப்போது அந்த பட்டியலில் முஸ்லிம் சிறைவாசிகளும் இடம் பெறுவார்கள் என்று முஸ்லிம் சமுதாயம் ஆவலுடன் எதிர்ப்பார்த்தது. ஆனால், ஆணை தயாரித்த அரசு மேலதிகாரிகளால் திட்டமிட்டு திணிக்கப்பட்ட நிபந்தனைகள் முஸ்லிம் சிறைவாசிகளுக்கு எதிராக அமைந்தது. முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை பெறும் வாய்ப்பை இழந்தார்கள்.

2019ஆம் ஆண்டு ஒரு முஸ்லிம் ஆயுள் சிறைவாசி தம்மை விடுதலை செய்யக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடுத்தார். அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துதல் மற்றும் சட்ட ஒழுங்கு சீர்கேடு காரணங்களால் அவரை விடுவிக்க முடியாதென அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்காத நீதிமன்றம் அமைதி மற்றும் சட்ட ஒழுங்கு காத்தல் அரசின் கடமை. அதைக்காட்டி, விடுதலை செய்வதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என உத்தரவிட்டது.

இதைப் போன்று கடந்த காலத்தில் உயர்நீதிமன்றத்தில் பல முஸ்லிம் சிறைவாசிகள் தங்களை விடுதலை செய்ய தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற்றபோது, தமிழ்நாடு அரசு அந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து தடையுத்தரவு பெற்று விட்டது. நாட்டில் இந்துக்களுக்கு ஒரு சட்டம், முஸ்லிம்களுக்கு ஒரு சட்டம் என நடைமுறை உள்ளதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் 700 ஆயுள் சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்களென அறிவித்தபோது, முஸ்லிம் ஆயுள் சிறைவாசிகளும் விடுதலையாவர் என்ற நம்பிக்கையோடு முஸ்லிம் சமுதாயம் மகிழ்ச்சி கொண்டது. ஆனால் 15.11.2021 அன்று வெளியிடப்பட்ட அரசாணை "ஆட்சிகள் மாறலாம். அரசாணைகள் மாறாது" என்பதுபோல அமைந்து விட்டதென்றே கூறலாம்.

இந்தியத் திருநாட்டின் தந்தையாக போற்றப்பெறும் காந்தியடிகளை சுட்டுக் கொன்ற வழக்கில் நாதுராம் கோட்சேயின் தம்பி கோபால் விநாயக் ராம் கோட்சே சதி திட்டம் தீட்டியதாக ஆயுள் தண்டனை பெற்றான். தேசத் தந்தையையே கொன்ற

வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் விநாயக் ராம் கோட்சே, 16ஆண்டுகளில் 1964ஆம் ஆண்டு அக்டோபரில் விடுதலை செய்யப்பட்டான். 14 ஆண்டுகளுக்கு மேலாக தான் சிறைவாசம் செய்வதை குறிப்பிட்டு தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் அவன் தொடுத்த வழக்கில் அவனது வாதத்தை ஏற்று உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது.

கேரளாவில் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு, மேற்கு வங்கத்தில் ஜோதிபாசு ஆகியோர் ஆட்சிக் காலத்தில் பலர் முன் விடுதலை செய்யப்பட்டமையையும், அந்த சிறைவாசிகளில் நக்சலைட்டு களும் இருந்தார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். ஆயுதத் தடைச்சட்டம் மற்றும் வெடிபொருள் சட்டப் பிரிவுகளில் கைதான பலர் தமிழகத்திலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரியில் கல்லூரி மாணவிகள் எரிக்கப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் சிறைத்தண்டனை பெற்றவர்கள், மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டை சார்ந்த லீலாவதி கொலை செய்யப்பட்ட வழக்கில் சிறைத்தண்டனை பெற்றவர்கள், தஞ்சை மாவட்டம் கீழவெண்மணி வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்கள் பொதுமன்னிப்பில் முன் விடுதலை பெற்றமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"ஆயுள் தண்டனை என்பது 14 ஆண்டுகள்தாம். 14 ஆண்டுகள் கடந்துவிட்ட சூழலில் ஒருவரை விடுதலை செய்வதில் தடையிருக்க முடியாது. தண்டனை காலத்தை முடித்துவிட்ட பிறகு அவர் என்ன குற்றம் செய்தார் என பார்க்க வேண்டிய அவசிய மில்லை. தண்டனை காலம் முடியுமுன்னரே நன்னடத்தை அடிப்படை யில் 161ஆம் விதியின் கீழ் மாநில அரசு விடுதலை செய்யலாம்" என்பது நீதியரசர் அரிபரந்தாமன் போன்றோருடைய கருத்தாகும்.

உடல்நிலை, நன்னடத்தை, மனிதாபிமானம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு 14 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளவர்களை விடுதலை செய்யலாமென உச்சநீதிமன்றமும் பலமுறை கருத்து வழங்கியுள்ளது.

ஒட்டுமொத்த நன்னடத்தையின் அடிப்படையில் முன் விடுதலை செய்யும்போது சாதி, மதம், இனம் இடையிலே வருவது எப்படி சரியாகும்?

முஸ்லிம் சமுதாய அரசியல் கட்சித் தலைவர்கள், சமுதாய இயக்கங்கள், ஜமாஅத்துகள், ஜமாஅத்துல் உலமாசபை அனைத்தும் ஒட்டுமொத்தமாக இணைந்து முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆனால்....

துரோகங்களையும், வலிகளையும் மட்டுமே பார்த்து பழகியிருக்கிறது முஸ்லிம் சமுதாயம்!

"தி.மு.க. ஆட்சி அமைந்ததும் முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை உறுதி" என தேர்தல் பிரச்சார மேடைகளில் முழங்கினார் மு.க.ஸ்டாலின்.

பொது மன்னிப்பு என்ற தளத்தில் எல்லாமே பொதுவானதுதானே. மன்னிப்பு பொது என்று கூறிவிட்டு மதத்தை அளவுகோலாக வைப்பது எந்த விதத்தில் நியாயம்? சட்ட ரீதியாக முஸ்லிம் சிறைவாசிகளை விடுவிப்பதில் எந்த சிக்கலும் இல்லாதபோது தமிழ்நாடு அரசாணையில் சேர்க்கப்பட்டிருக்கும் அளவுகோல் பாகுபாட்டின் உச்சம்.

மதுரை மாநகராட்சி கம்யூனிஸ்ட் கட்சி வார்டு உறுப்பினர் லீலாவதி வழக்குல தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் தி.மு.க. குற்றவாளிகளை ரிலீஸ் பண்ணுணாங்க. தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்குல தூக்குத் தண்டனை விதிச்ச அதி.மு.க. குற்றவாளிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் ஆயுள் தண்டனையா கொறச்சு, அந்த குற்றவாளிகளை அ.தி.மு.க. அரசு ரிலீஸ் பண்ணுணாங்க.

ஆட்சியில இருக்குறவங்க தங்களுக்கு தேவையானவர்களை விடுவிச்சுக்கிறாங்க. முஸ்லிம்களும் இதே நாட்டுலதானே இருக்குறாங்க. முஸ்லிம்களுக்கு மட்டும் ஏன் மறுக்குறாங்க?

முஸ்லிம்கள் சலுகை கேக்கல. உரிமையை தான் கேக்கிறார்கள். பொது மன்னிப்புன்னு சொல்லி மத்தவங்கள மட்டும் ரிலீஸ் பண்ணிட்டு, முஸ்லிம்களை மட்டும் ஏன் இப்டி வதைக்குறாங்க?

நோய்வாய்ப்பட்ட ஆயுள் சிறைவாசிகளுக்கு பிணையில் வர சட்டப்படி உரிமையுள்ளது. நடுக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் "பாஷா" உள்ளிட்ட பல முஸ்லிம் சிறைவாசிகளுக்கு பிணையும் வழங்கப்படுவது கிடையாது.

சிறைவாசிகள் விடுதலையில் மட்டுமல்ல; முஸ்லிம்களுக்கு எந்த உரிமைகளும் முறையாக வழங்கப்படுவது கிடையாது. காலிகளான காவிக்கும்பலால் தகர்த்து விடப்பட்டிருக்கும் பாபர் மஸ்ஜித்தின் செங்கல்களும், குஜராத் கலவரத்தில் ஒலித்த ஓலங்களும், மாட்டின் பெயரால் கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் உறைந்த ரத்தங்களும், கஷ்மீரின் அடக்குமுறையும், காரணமேயில்லாமல் பாயும் தேச விரோத

சட்டங்களும், முஸ்லிம்களுக்கு வாழவே உரிமையில்லை என்ற முஸ்லிம் வெறுப்பு சித்தாந்தங்களும் உணர்த்துவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் "உரிமைகளுக்காக போராடு..."

முஸ்லிம்களின் மாநாடுகளிலும், தேர்தல் பிரச்சாரத்தின் போதும் "அப்பாவி முஸ்லிம் சிறை கைதிகளை விடுவிப்பதற்காக தமிழகத்தில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஏற்படுத்துவீர்களா?" என உரக்க குரல் எழுப்பி வாக்குகள் கேட்ட மு.க.ஸ்டாலின், முஸ்லிம் சிறைகைதிகளை தனது அதிகாரத்தை அடிப்படையாக கொண்டு, நிபந்தனைகளுக்கு அப்பால் விடுதலை செய்தால், வேதனையால் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் அப்பாவி முஸ்லிம் சிறை கைதிகளும், கவலையிலும், துக்கத்திலும் துவண்டு தனது வாழ்நாளை கழித்து வரும் கைதிகளின் குடும்பத்தார்களும், இஸ்லாமிய சமுதாயமும் இந்த அரசை வாழ்த்தும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டும். இதை முதல்வர் செய்வார் என நம்பிக்கையுடன் இஸ்லாமிய சமுதாயம் எதிர்பார்க்கிறது.

முஸ்லிம்களை எதிரியாக நினைத்து செயல்பட்டுவரும் ஒன்றிய அரசு மற்றும் பாரதீய ஜனதா கட்சியை பகைத்துக் கொண்டு முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்து பாரதீய ஜனதாவின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நினைத்துக் கொண்டாரா?

இந்நேரத்தில், மக்களுக்கு எதிராக செயல்படும் ஒன்றிய அரசுக்கு எதிராகவும், பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராகவும், சிம்ம கர்ஜனை புரிந்து வரும் மேற்கு வங்காள முதல்வர் "வங்க சிங்கம்" மம்தா பானர்ஜி நம் சிந்தனைக்கு வந்து செல்வதை மறுக்க இயலவில்லை!

திராவிட இயக்கங்களுக்கு மேடை போட்டு கொடுத்து திராவிட இயக்கங்களை வளர்த்து விட்டவர்கள் முஸ்லிம்கள் தான் என்பதை மு.க.ஸ்டாலின் வசதியாக மறந்து விட்டாரா?


மு.க.ஸ்டாலின் முதல்வராக வரவேண்டும் என்பதற்காக இஸ்லாமிய சமுதாயம் செய்த தியாகங்களை மு.க.ஸ்டாலின் மறந்து விட வேண்டாம்.

சிறையில் வாடும் முஸ்லிம் சிறைவாசிகளை தாமதமின்றி உடனே விடுதலை செய்ய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்வர வேண்டும்.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made in India